தென்மொழி



டலகத் தமிழ்க் கழக
ாட்டுச் சிறப்பிதழ்

75 காசு.

நமக்கு வந்த மடல்கள்.

(பகை எனக்கு விழிப்பூட்டுகின்றது; வசைகள் என்னை உறுதியாக்குகின்றன; பொய்ச் செய்திகள் பாதையில் உள்ள பள்ளம் படுகுழிகளை எனக்கு எச்சரிக்கின்றன; நேர்மை எனக்கு வழிகாட்டுகின்றது; உண்மை எனக்குத் துணை வருகின்றது; கடமை என்னை வழிநடத்துகின்றது; நட்பு என் அயர்வைப் போக்குகின்றது; தமிழ் எனக்கு ஒளி தருகின்றது; தாயகம் என்னை எதிர்நோக்குகின்றது; இறையுணர்வு எனக்கு நம்பிக்கை யூட்டுகின்றது; என் வாழ்க்கைக்குப் பின் உள்ள எச்சமே நான் யார் என்பதை உலகுக்கு உணர்த்தும்! வெறும் வாய்கள் மனத்தை எடைபோடா! —பெருஞ்சித்திரன்.)

தமிழால் பிழைக்கும் திருட்டுப் பாவலனே! ஒன்று செய்; ''செத்தொழி'' அந்த ''மானமேனும்'' இருக்கிறதா!

5-10-68 அருள்மணி, பெங்களூர்-21.

அன்புசான்ற ஐயா! வணக்கம். நலமாகுக. தாங்கள் என்ன நினைத்துக்கொண்டாலும், தமிழ்க்கழகப் பொறுப்பேற்ற தங்கட்கு என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு சிலர்க்கு நான் தாங்கள் பொறுப்பேற்கக் கூடாது என்று எழுதியிருந்தாலும், ஒரு மாதத்துக்கு முன்னே அப் பொறுப்பு தங்களுக்கே உரியது என்று முடிவு செய்துவிட்டேன். அதை எவர்க்கும் நான் எடுத்துரைக்காமலே அது முடியும் என்று அறிவேன் என்பதால் பின்னர் நான் எவர்க்கும் எதுவும் சொல்லவில்லை!

(உரு, கன்னி. கக) —சேயோன்—பட்டணம்.

பேரன்புடைப் பெருந்தகையீர்! வணக்கம்! தமிழ் மாநாட்டு அழைப்பிதழ் எனக்கும் கிடைத்தது. 'எ........... அவர்களுக்கும் கிடைத்திருந்தது. அவருக்கு மாநாட்டின்கண் 'பாவாணர்' கட்சி என்று ஒன்றும், தங்கள் கட்சி என்று ஒன்றுமாக இரண்டுகட்சிகள் இருக்கும் என்று ஒரு செய்தி கிடைத்தது. அஃது எந்த அளவு உண்மை எனத் தெரிவிக்கவும். அப்படி ஏதாவது நடந்ததா என்பதையும் கட்சிப் பிரிவிற்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதையும் தெவிக்கவும். நான் இதையெல்லாம் இப்பொழுது தெரிந்து கொள்ள வேண்டாமெனத்தாங்கள் நினைப்பின் தெரிவிக்கவேண்டா.

கன்னி உக —இரா. வ. செனார்த்தனம், பள்ளிநேலியனூர்.

தமிழ்நலஞ் சான்ற ஐயா! வணக்கம். வாழி! 'தென்மொழி' பயிலும் நெஞ்சங்களில் யானும் ஒருவன். கடந்த நான்காண்டுகளாகத் தென்மொழியின் ஆசிரிய உரையானும், ஆராய்ச்சிக் கட்டுரையானும், உணர்வூட்டும் பாடலானும், உண்மைத் தமிழ்க் கருத்துகளானும் யானொரு தமிழ் மகனாக வாழ்ந்து வருகிறேன்! தாங்கள் மூட்டிவிட்ட தமிழ்க்கனல் தமிழகம் விடுதலைபெற்றுத் தனித்தியங்கும் திருநாள் வரையில் தணியாது! தென்மொழியைக் கேடயமாகக்கொண்டிலங்கும் தமிழ்க் குமுகாயம் தன் பெருநடைச் செலவில் என்றும்குன்றாது! இடையில் ஏற்படும் தடைகள்எல்லாம் தென்மொழி எனும் வாளால் தூளாகும் என்பது திண்ணம்! ஆகலின் அகத்தானும் புறத்தானும் ஏற்படும் இன்னல்கள் குறித்து உளந்தளரவிடாமல் தென்மொழியின் செமமாந்த நடையைச் சிறப்புடன் நடத்த வேண்டுவல். காலந்தாழ்த்து வரினும் தென்மொழியின் இரு

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம்)

தென்மொழி

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி-6: ஓலை-8

கன்னி தி. பி. ககககூ (1968-அக்டோபர்)
பொறுப்பாசிரியர்:-பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

இருபெரும் மாநாடுகள்.

அண்மையில் திருச்சியில் மொழி மூதறிஞர் திரு. தேவநேயப் பாவாணர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பெற்ற "உலகத் தமிழ்க் கழகத்தின்" பொதுச் செயலாளர் என்ற முறையில் நான் இவ்வுரையை எழுதவில்லை. தென்மொழியின் ஆசிரியனாகவிருந்துகொண்டு, எனக்குள்ள இயல்பான போக்கிலேயே நான் அம் மாநாட்டு நிகழ்ச்சிகளை எழுதத் தொடங்குகின்றேன். ஏனெனில் தென்மொழியின் கருத்துரை, எந்த ஒரு தனித்த அமைப்பின் அல்லது கட்சியின் கருத்துரையாக இருந்துவிடக்கூடாது என்பதில் நான் மிகவும் விழிப்பானவன்; கண்டிப்பானவன். என்னை நானே எடைபோட்டுக்கொள்ளும் இக்கட்டான நிலைகளிலும் கூட நான் இப்படித்தான் இருக்க விரும்பினேன்; விரும்புகிறேன்; விரும்பு

நமக்கு வந்த மடல்கள்.

(பகை எனக்கு விழிப்பூட்டுகின்றது; வசைகள் என்னை உறுதியாக்குகின்றன; பொய்ச் செய்திகள் பாதையில் உள்ள பள்ளம் படுகுழிகளை எனக்கு எச்சரிக்கின்றன; நேர்மை எனக்கு வழிகாட்டுகின்றது; உண்மை எனக்குத் துணை வருகின்றது; கடமை என்னை வழிநடத்துகின்றது; நட்பு என் அயர்வைப் போக்குகின்றது; தமிழ் எனக்கு ஒளி தருகின்றது; தாயகம் என்னை எதிர்நோக்குகின்றது; இறையுணர்வு எனக்கு நம்பிக்கை யூட்டுகின்றது; என் வாழ்க்கைக்குப் பின் உள்ள எச்சமே நான் யார் என்பதை உலகுக்கு உணர்த்தும்! வெறும் வாய்கள் மனத்தை எடைபோடா! —பெருஞ்சித்திரன்.)

தமிழால் பிழைக்கும் திருட்டுப் பாவலனே! ஒன்று செய்; ''செத்தொழி'' அந்த ''மானமேனும்'' இருக்கிறதா!

5–10–68 அருள்மணி, பெங்களூர்–21.

அன்புசான்ற ஐயா! வணக்கம். நலமாகுக. தாங்கள் என்ன நினைத்துக்கொண்டாலும், தமிழ்க்கழகப் பொறுப்பேற்ற தங்கட்கு என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு சிலர்க்கு நான் தாங்கள் பொறுப்பேற்கக் கூடாது என்று எழுதியிருந்தாலும், ஒரு மாதத்துக்கு முன்னே அப் பொறுப்பு தங்களுக்கே உரியது என்று முடிவு செய்துவிட்டேன். அதை எவர்க்கும் நான் எடுத்துரைக்காமலே அது முடியும் என்று அறிவேன் என்பதால் பின்னர் நான் எவர்க்கும் எதுவும் சொல்லவில்லை!

(உரு, கன்னி. கக) —சேயோன்–பட்டணம்.

பேரன்புடைப் பெருந்தகையீர்! வணக்கம்! தமிழ் மாநாட்டு அழைப்பிதழ் எனக்கும் கிடைத்தது. 'எ........... அவர்களுக்கும் கிடைத்திருந்தது. அவருக்கு மாநாட்டின்கண் 'பாவாணர்' கட்சி என்று ஒன்றும், தங்கள் கட்சி என்று ஒன்றுமாக இரண்டுகட்சிகள் இருக்கும் என்று ஒரு செய்தி கிடைத்தது. அஃது எந்த அளவு உண்மை எனத் தெரிவிக்கவும். அப்படி ஏதாவது நடந்ததா என்பதையும் கட்சிப் பிரிவிற்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதையும் தெவிக்கவும். நான் இதையெல்லாம் இப்பொழுது தெரிந்து கொள்ள வேண்டாமெனத்தாங்கள் நினைப்பின் தெரிவிக்கவேண்டா.

கன்னிஉக —இரா. வ. செனுர்த்தனம், பள்ளிநேலியனூர்.

தமிழ்நலஞ் சான்ற ஐயா! வணக்கம். வாழி! 'தென்மொழி' பயிலும் நெஞ்சங்களில் யானும் ஒருவன். கடந்த நான்காண்டுகளாகத் தென்மொழியின் ஆசிரிய உரையானும், ஆராய்ச்சிக் கட்டுரையானும், உணர்வூட்டும் பாடலானும், உண்மைத் தமிழ்க் கருத்துகளானும் யானொரு தமிழ் மகனாக வாழ்ந்து வருகிறேன்! தாங்கள் மூட்டிவிட்ட தமிழ்க்கனல் தமிழகம் விடுதலைபெற்றுத் தனித்தியங்கும் திருநாள் வரையில் தணியாது! தென்மொழியைக் கேடயமாகக்கொண்டிலங்கும் தமிழ்க் குமுகாயம் தன் பெருநடைச் செலவில் என்றும்குன்றாது! இடையில் ஏற்படும் தடைகள்எல்லாம் தென்மொழி எனும் வாளால் தூளாகும் என்பது திண்ணம்! ஆகலின் அகத்தானும் புறத்தானும் ஏற்படும் இன்னல்கள் குறித்து உளந்தளரவிடாமல் தென்மொழியின் செம்மாந்த நடையைச் சிறப்புடன் நடத்த வேண்டுவல். காலந்தாழ்த்து வரினும் தென்மொழியின் இரு

(தொடர்ச்சி 3–ஆம் அட்டைப்பக்கம்)

மாநாட்டில், தமிழன் பிறந்தகம், தமிழ் நெடுங்கணக்குத் தோன்றிய காலம், தொல்காப்பியர் காலம், திருவள்ளுவர் காலம் முதலியவை அறுதியும், இறுதியும், உறுதியுமாக முடிவுசெய்யப் பெறவேண்டும் என்பதும், அடுத்த நாள் கூடிய தமிழ்க் கழக அமைப்பு மாநாட்டில் தமிழகம் முழுதும் தழுவியதும் கட்சிச் சார்பற்றதும், மாவட்டந் தொறும் கிளை கொண்டதும், இனிமேல் தமிழைக் காக்கும் முழுப் பொறுப்புந் தாங்குவதுமான தமிழ்க்கழகம் அமைக்கப்பெறல் வேண்டும் என்பதுமே வெளிப்படையான இரண்டு பெரிய நோக்கங்கள். என்றாலும் இந்நோக்கங்களன்றி வேறோர் உள்நோக்கமும் அம்மாநாட்டிற்கு இருந்தது என்றே சொல்லுதல் வேண்டும். கட்சிச்சார்பற்ற நாட்டுப்பற்று, குமுகாய மலர்ச்சி, தூய தமிழ்ப்பற்று என்பவற்றில் உண்மையாக ஈடுபாடு கொள்ளும் மெய்ம்மைத் தமிழன்பர்கள் தமிழகத்துள் எவ்வளவில் உள்ளனர் என்பதையும், அவர்க்குள்ள அவைபற்றிய உண்மையான அக்கறை எத்தகைய தென்பதையும் தமிழகத்துள் கழகக் கால முதல் இன்றுவரை இருந்துவரும் ஆரியரின் அரசியல், குமுகாய வரலாற்று, மொழிப் புரட்டுகளைத் தகர்த்தெறிய எத்துணையளவில் மக்கள் கிளர்ந்துள்ளனர் என்பதையும் அறிந்து கொள்ள இம்மாநாடு பயன்பட்டது.

மாநாட்டின் முதல் மூன்று தீர்மானங்களும், தமிழன் பிறந்தகத்தையும், தமிழ்மொழியின் நெடுங்கணக்குத் தோன்றிய காலத்தையும், தொல்காப்பியர், திருவள்ளுவர் காலங்களையும் உறுதி செய்கின்றன. இவை பற்றிய ஆராய்ச்சி முடிவுகள் ஏற்கனவே பாவாணர் அவர்களின் நுண்மாண் நுழைபுல மிக்க நூல்கள் பலவற்றுள் பொதுவாகவும் 'தமிழ் வரலாறு' என்னும் நூலுள் சிறப்பாகவும் வரையறுக்கப் பெற்றுள்ளன. மேலும் 'தமிழ் வரலாறு' நூலும், மாநாட்டில் திருவள்ளுவர் காலம்பற்றி ஆய்வுரை நிகழ்த்திய பேரா. நிலவழகனார் அவர்களும் திருவள்ளுவர் காலத்தை முதல் நூற்றாண்டு என்றே குறித்தமையும், மாநாட்டுத் தீர்மானம் 2-ஆம் நூற்றாண்டு என்று குறிக்கின்றமையும் மயக்கத்திற்குரியனவாகப் படினும், திருவள்ளுவர் காலத்தைக் கி. மு. 5-ஆம் நூற்றாண்டு வரையிலும் கொண்டு செல்வதில் எவ்வகைப் பிழையோ குற்றமோ இல்லை. மிக முன்தள்ளிக் கூறுவதினும் மிகப் பின்தள்ளிக் கூறுவது எவ்வகையானும் தவறாகாது. கால ஆராய்ச்சிக்கும் இழுக்கை விளைவியாது. எனவேதான் இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட காலமாக கி. மு. 2-ஆம் நூற்றாண்டு எனத் தீர்மானம் குறிக்

கிறது. இம் மூன்று தீர்மானங்களும் அன்று படிக்கப் பெறவில்லையேனும், முன்னரே குறிக்கப் பெற்றிருந்தன. அஃகியகன்ற மொழியறிவிலும், வரலாற்றறிவிலும் தமக்குத் தாமே நிகராக விளங்கும் தனித்தமிழ் ஞாயிறு பாவாணர் அவர்களின் நூன் முடிவுகளை மறுக்க வல்ல மதுகையும் துணிவும் மிக்கார் இன்றுவரை ஒருவரும் இலர்; இனி, எதிர்காலத்தும் இருப்பர் எனக் கருதவும் இடமில்லை. ஒருகால் இனிமேல் அறியப்பெறும் செய்திகளையும் வரலாற்றுச் சான்றுகளையும் கொண்டு பிற்காலத்துப் பேரறிஞர் எவரேனும் பாவாணர் அவர்களின் மூதறிவான் முகிழ்த்த முடிவுகளை மறுக்க நேர்ந்தாலும், அவர் வரையறை செய்த காலமுடிவுகள் இன்னும் முன்தள்ளிப் போகுமேயன்றிப் பின்தள்ளி வாரா. அவ்வளவில் பாவாணரவர்களின் கருத்துகள் எற்றம் பெறுவன.

இனி, முதல்நாள் மாநாட்டில் வரலாற்றுரையாற்றிய பேரா. சொக்கப்பனும், ஆராய்ச்சி யுரையாற்றிய பேரா. நிலவழகனும் தங்களுக்கிட்ட பொறுப்புகளை மரபுவழி நன்கு மதித்துப் போற்றினர் என்று லும், காலவரையறை செய்வது பற்றிய நோக்கங்களில், பாவாணர் அவர்களையே இடைச்சுட்டாகக் காட்டியது சப்பென்றிருந்தது. அவர் தம் உரை தமிழன் பிறந்தகத்தைப் பற்றித் தாறுமாறுகத் தம் மன வெறுப்புகளுக்கேற்ற முறையில் பொய்யும் புரையுமாக எழுதித் தீர்க்கும் தெ. பொ. மீ. போன்ற சில புல்லுருவிகளுக்கும் பிற வையாபுரி வழியினர்க்கும் பெருத்த மண்டையடியாகப் பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாரிய அடிமைகளின் பெயர்கள்கூட அவர்களின் மாநாட்டுரையில் சுட்டப் பெறவில்லை. இவ்வகையில் நம் பேராசிரியர்கள் இன்னும் துணிவாகவும், நேர்மையாகவும் நடந்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். துணிவும் தீர்மானமுமற்ற எத்தகைய ஆய்வுரைகளும் இன்றுவரை ஆரியத்தின் மிகச்சிறிய சல்லிவேரையும் அகழ்ந்து விடவில்லை. தமிழ்மொழி வரலாற்றைப் பொறுத்தமட்டில் பாவாணர் அவர்களின் கூணைப்பான, அறிவுப்பிடி சான்ற ஆய்வுக் கோடரி இவ்விருபதாம் நூற்றாண்டில் பயன்படுத்தப் பெற்றிருக்கவில்லையானால், எத்தனைப் பேராசிரியர்கள் வந்தாலும்—எத்தனை அரசியல் தலைவர்கள் முயன்றாலும், இதுவரை முளைத்துக் கிளையடர்ந்த ஆரியப் பெருமரத்தை வெட்டிச் சாய்த்திருக்க முடியவே முடியாது என்று அறுதியிட்டுரைக்கின்றேன். நாளையன்று, இனி ஆயிரமாண்டுகளுக்குப் பின்னும் அவர் ஊன்றிய தமிழ் வரலாற்று ஆய்வுரைகளை எவரும் தனித்தோ அன்றிக் கூடியோ அசைத்துவிட முடியாதென்ப

தைப் பனிமலையின் மேலேறித் துணிவுடன் முழக்குவேன். வெறும் ஆரவார வெற்றுணர்வால் முழக்கப்படுவதன்று இவ்வுரை. மெய்யுணர்வும், வெறுப்பும் விருப்புமற்ற நடுநிலைக் கண்ணோட்டம் கொண்டும் சொல்லப்படுவதாகும் இது.

இவ்வடிப்படையில் மாநாட்டில் பேசிய அறிஞர்கள் இன்னும் விரிவாகவும் செறிவாகவும் எடுப்பாகவும் விளக்கியிருந்திருப்பார்களாயின், அதுவே மாநாட்டின் நோக்கம் முழுமையுடையதாகவும் செழுமையுடையதாகவும் இருக்க வழி செய்ததாக விருந்திருக்கும். அவ்வாறின்றிப் பேராசிரியர்கள் மாநாட்டைச் சரிவரப் பயன்படுத்திக்கொள்ள வில்லை என்றே வருத்தத்துடன் குறிக்க வேண்டியுள்ளது. ஒருவேளை அவர்களுக்கென்று ஒதுக்கப்பெற்ற காலமும் அவர்களின் முழு வெளிப்பாட்டிற்குத் தடையாக விருந்திருக்கலாம்.

மேலும் தமிழ் நெடுங்கணக்கின் தோற்றம் பற்றிய பண்டாரகர் மெ. அழகனாரின் மாநாட்டுரையும் இடையிடையே கட்சிச் சார்புற்றதாய் விளங்கினதே யன்றித் தலைப்பை முழு அளவில் விளங்கக்கூறியதாக அமையாது போனது வருந்துதற்குரியதாகும். இன்றிருக்கும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப நெளிந்தும் சுழிந்தும் போவதில் அமைவன வல்ல, தமிழ் விடுதலை முயற்சியும் தமிழர் தலையெடுப்பு முனைப்பும், திரும்பத்திரும்பப் படிக்கப்பெறும் ஒரே பாடத்தால் வரலாறு திசை திருப்பிவிட முடியாது. ஊன்றிய அறிவாராய்ச்சியும். தெளிந்த மொழிப்புலமையும் போற்றிக் காக்கப்படுவதில்தான் வரலாற்றின் வெளிப்பாடும், குமுகாயப் புரட்சிப் பணியும் அமைந்து கிடக்கின்றன என்று இன்றைய அரசியல் தலைவர்கள் அனைவரும் அறிந்திடவேண்டும். அரசியல் தலைமை ஒன்றே வரலாற்றுத் தன்மையை நிலைநிறுத்தியதாகச் செய்யாது. சென்னையில் பக்தவத்சலங்கள் கோலோச்சிய காலம் கருகி நெடுநாள் ஆகிவிடவில்லை. ஆனால் பேரா. வையாபுரியார் தமிழ் வரலாற்றில் ஏற்றிவிட்டுப்போன கறை இன்னும் அழிக்கப்பெற வில்லை; காரணம் வரலாற்றில் தவறோ சரியோ, உயர்வோ, தாழ்வோ எதுநேரினும் அந்நேர்ச்சி அரசியல் துறை அறிஞர்களால் அமைக்கப் பெறுவதன்று. வரலாற்றாசிரியர்களின் நேர்மையும் துணிவும் அறிவாழமும் கொண்ட வினைப்புரட்சியால் அமைவதாகும் அது. தமிழுக்காக எந்த ஓர் அரசையும் சார்ந்து போதலே நடுநிலையாக ஆகுமன்றி, அரசுக்காகத் தமிழைச் சார்ந்து போதல் என்பது, நடுநிலையும் ஆகாது; தமிழை வளர்ப்பதும் ஆகாது. இவ்வாறு கூறுவதால் நாம்

அரசைப் பகைத்துக் கொள்வது ஆகாது; தமிழைக் கொண்டு, அரசியல் திசைதப்பிப் போகாமல் காக்கவேண்டும் என்பதே நம் நோக்கம்

இனி, இவ்வரலாற்று மாநாட்டில் சொற்பொழிவாற்றுவதற்கும் தம் தம் ஆராய்ச்சியுரைகளை நிலைநாட்டுவதற்கென்றும் அழைக்கப் பெற்ற -ஆனால் கலந்துகொள்ளாத பேராசிரியர்கள் பலரும் பலவகையான சாக்கும் போக்கும் காட்டி, இதில் கலந்துகொள்வதால் ஏற்படும் இழப்புகளினின்றும், இழுக்குரைகளினின்றும் தப்பித்துக் கொண்டுள்ளனர் என அறிய என் மனம் மிகவும் வருந்துகின்றது. தலைசிறந்த ஒரு மொழிப் பேராசிரியரின் தலைமையில் தாம் உரையாற்றுவதும், ஆய்வுரையின் முடிவுகூறுவதும் தமக்கு இயலாததும் அஞ்சத்தக்கதும் ஆகும் என்பதற்காக அவர்கள் அவ்வாறு தலையொளித்திருப்பார்களானால் நாம் அவர்களை விட்டுவிடுவதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் இதுபோன்று பாவாணர் தலைமையேற்கும் மாநாடுகளில் தாம் கலந்து கொள்வது இழுக்கெனக் கருதி யிருந்திருப்பார்களாயின், நாம் அவர்களை விட்டுவிடுவதாக இல்லை. அவர் தம் இறுமாப்பையும், புறக்கணிப்பையும், இவற்றால் தமிழும் தமிழரும் ஆரியத்தாலும் ஆரியராலும் நலிபட்டும் நசுக்கப்பட்டும் வந்ததையும் கண்டுகண்டு, இனியும் நாம் வாளாவிருந்திட விரும்பவில்லை. தமிழினதும் தமிழரினதும் ஆனமேம்பாட்டு விடுதலைக்காக இத்தகைய பேராசிரியர்களையும், அல்லது இக்கால்உள்ள அரசியல் தலைவர்களையும் நம்பி நெடுந்தொலைவு நடந்தாகிவிட்டது. அரசியல் பண்பை மதிப்பவர்களிடந்தான் அத்தகையதொரு பண்பு காட்டப்பெறுதல் வேண்டும். பண்பாடு நாகரிகம் என்பவற்றிற்கெல்லாம் அரசியல் வலிமை மிக்கவனிடத்தும், மெலிந்தவனிடத்தும் வேறு வேறு பொருள்கள் சொல்லப்பெறும். அடக்கியாள்பவன் அடங்கி இருப்பதையே பண்பென்றும் நாகரிகமென்றும் பாடம் படிப்பான். அடங்கியிருப்பவன் தன் அறியாமையையும், கோழைத்தனத்தையுமே பண்பென விளக்கஞ் செய்வான். அறிவுரிமைக்கும் மனவுரிமைக்கும் இப்புடவியின் எந்த ஒரு திண்கோளிலும் தடையிட எவர்க்கும் அதிகாரமில்லை. ஒருவனின் ஆள்காட்டிவிரல், இன்னொருவனின் மூக்கந்தண்டில் மோதாமல் இருக்கும்வரை எவனும் தன் உரிமைகளை அடைத்துப் போட்டும் கிடந்திடத் தேவை இல்லை. கோழைக்கும் அடிமைக்கும் கைகள் நீளுவதில்லை. எனவே அவர்கள் உரிமையைப்பற்றிப் பேசவும் இயல்வதில்லை; நினைக்கவும் முடிவதில்லை. உரிமை உயிர். உயிருள்ளவைதாம் எழும், நடக்கும்; இயங்கும்! உயிரற்ற பிணங்கள்

விழுந்தே கிடக்கும். இத்தகைய பிணைப் பேராசிரியர்களை வருங்கால உரிமை கொப்பளிக்கும் இளைஞர் உள்ளங்கள் புறமருட்டத் தெரிந்திருக்க வேண்டும். இல்லெனின் தமிழுக்கு மட்டுமன்று; தமிழனுக்கு மட்டுமன்று; தமிழகத்திற்கு மட்டுமன்று; இவ்வுயிரினத்திற்கே விடுதலை இல்லை.

ஓரினத்தான் ஓரினத்தானைத் தாழ்த்திக் கொண்டுள்ளான்; தாழ்த்தப் பட்ட இனத்தின் பேராசிரியன் தாழ்த்தும் இனத்தானிடம் கூலி பெற்றுக்கொண்டு வாழ்ந்துவிட முயற்சி செய்வானானால், நசுக்குறும் இனம் விசுப்புற எழவேண்டாவா? எந்தமிழ் இளைஞர்களே! உங்கள் உள்ளங்களில் உரிமைக்கு வித்திடுங்கள்! உங்கள் மூளைச்சேற்றின் முதன் வேளாண்மை உரிமை வேளாண்மையே! உரிமைச்சிறகு வாய்க்கப் பெற்ற விடுதலைப் பறவையே உயிர்ப்பறவை! ஊனை வளர்க்கு முகத்தான் உயிர்ப்பறவைக்குச் சிறகரியாதீர்கள்! துணிந்து நில்லுங்கள்! துணிந்து வாழ முற்படுங்கள்! இல்லெனின் துணிந்து சாவை மேற்கொள்ளுங்கள்! ஊனும் உயிரும் பொதிந்த உலக வாழ்வில் உரிமையைச் சுவைக்கவில்லையானால், ஊனைத் தரைசாய்த்து உயிருக்கேனும் விடுதலையளித்து உரிமையைச் சுவைக்கச் செய்யுங்கள்!

இத்தகைய நல்லுணர்வைத்தான் இம்மாநாடு எழுப்பி இருக்க வேண்டும்? தவறியிருக்குமானால் இம்மாநாட்டிற்கு வந்த ஒவ்வோருள்ளமும் அத்தகைய உணர்வைத் தனக்குத் தானாகவேனும் எழுப்பிக் கொள்ளட்டும்.

இனி, அடுத்துக் கூடிய 'உலகத் தமிழ்க் கழக' அமைப்பு மாநாட்டில் நிகழ்த்தப் பெற்ற உரைகளில் நாம் மதிக்கத் தகுந்தன திரு. ம. இலெ. தங்கப்பனாரின் 'மொழிப் பெயர்ப்பு' ப் பற்றிய ஆய்வுரையும், தமிழ் மறவர் திரு பொன்னம்பலனாரின் தன்மானவுரையும், இலக்குவனர் பெற்ற புலிக்குருளை மறைமலையின் வீறுரையுமே! திரு. தங்கப்பனார் அவர்கள் தமக்கே உரிய அமைதியினால் உரைமுறையில் எழுச்சியின்றித் தோன்றினும், உரைக் கருத்துகள் அறிஞரும் போற்றிப் புரக்கவேண்டிய வித்துமணிகளாகும். திரு. பொன்னம்பலனார் அவர்களின் தன்மான எழுச்சியுரை. மாநாட்டிற்கு வந்திருந்தார் பலருக்கு 'விழுந்திருந்த முதுகுக்கூனையும் நிமிர்த்தி விட்டதெனின் மிகையில்லை. பெரியார் பற்றி அவர் மொழிந்த கருத்துரைகள் தமிழைப் பொறுத்தமட்டில் பயன்தராமற் போயினும், தமிழரைப்

பொறுத்த மட்டில் மிகுதியும் பயன் தரத்தக்கன. அவர்தம் நெஞ்சுரம் இக்கால இளைஞர்க்கு இருக்கவேண்டுவனவற்றில் தலையாய ஒன்று. அவர்தம் நேர்மை பொதுத் தொண்டர் யாவரும் கைக் கொள்ள வேண்டிய அரும்பொருள். அவர் பட்ட தொல்லைகள் அவர் பெற்ற பட்டங்கள்! புலவர்க்கிருக்கவேண்டிய செம்மாப்பும், அஞ்சாமையும், உணர்வுத் தெறிப்புகளும் திரு. பொன்னம்பலனார் உரையில் இருந்தன. மாணவரேறு மறைமலை கனலுரை கக்கிய பொழுது, மெலிய தோற்றத்தினால் புடைத்து நெளிந்த அவர் நெடுங்கழுத்து இடைமுறிந்து தலைதாழுமோ என்று அஞ்சிக் கொண்டிருந்த நிலையில், அவர்தம் சொல்லறையால் அங்கிருந்த பலர் கழுத்து முறிவுற்றுத் தலைதொங்கிக் கிடந்ததை யாமறிந்து மிகவும் வியப்புற்றோம். மறைமலையின் எடுப்புரையும், தொடுப் புரையும் முடிப்புரையும் கூட்டத்தினர்க்குத் தினவேற்றின என் பது வெறும் புகழுரையன்று; பொருளுரையே! பிற மாணவ மணி கள் அவரைப் பின்பற்றுவார்களாக.

முதல் நாள் பேசிய தமிழ்க்குடிமகன் திரு. சாத்தையாவின் பேச்சிலும், இரண்டாம் நாள் பேசிய பாவலர். ம. இலெ. தங்கப்ப னரின் படிப்புரையிலும், அவர் முன்னுளில் தென்மொழியின் அக வினைப்பாடுகளில் ஈடுபட்டிருந்த முத்திரை பளிச்சிட்டது கண்டு உண்மையிலேயே என் உள்ளம் மகிழ்ந்தது. ஒருசில மணித்துளி களே பேசிய திருவாட்டி. தாமரை-பெருஞ்சித்திரன் பேச்சில் உண்மை மின்னலிட்டோடிக் கூட்டத்தினர்க்குக் கலகலப்பை உண்டாக்கியது. வரலாற்று மாநாடன்று இரவு நடந்த இசை நிகழ்ச்சியில் புலவர். திரு. நெறிமுடியார் பாடிய பாவேந்தரின் பாடல்கள் வந்திருந்த தமிழன்பர்க் கெல்லாம் குறைந்த உள் ளத்தை உணர்வால் நிறைத்தன. ஆரவார வெற்றுக் கனைப் பொலிகளை, இழுத்தும் படுத்தும் நெளித்தும் இசைக்காது, பொருள் பொதிந்த விடுதலைப் பாடல்களைத் தாமே அமைத்த தென்பாங்குத் தமிழிசைகளில் அவர் பாடிய திறமும் முறைபும் அன்பர்களை மிகவும் மகிழ்வித்தன எனலாம்.

இரண்டு மாநாடுகளிலும் தலைமையேற்ற பாவாணர் அவர் களின் உரை மாநாட்டினர் பசிநிரம்புமாறு படைக்கப் பெற வில்லை. அவர்மட்டும் ஒவ்வொரு நாளும் குறைந்தது மூன்று

மணிநேரம் பேசியும், நீண்ட முடிவுரை கூறியும் இம் மாநாட்டினை நன்கு பயன்படுத்திக்கொண்டிருக்க வேண்டுமென் பதே நம் கருத்து. சொற்பொழிவாளர்களைப் பற்றிய அறிமுக வுரை பாவாணர்க்கே உரிய முத்திரைச் சிறப்புடன் விளங்கியது. ஆனால் சொற்பொழிவாளர்களின் அறிமுகத்தோடு மட்டும் பாவா ணர் அவர்கள் நிறுத்திக்கொண்டு, ஆற்றப்பெற்ற சொற்பொழி வுகளைப் பற்றிக் கருத்துரையாகவோ, தொகுப்புரையாகவோ, அன்றிமுடிவுரையாகவோ எதுவும்கூறுமலிருந்தது சொற்பொழிவு களுக்கிடையில் ஒரு தொடர்பை உண்டாக்கிக் காட்டவில்லை. ஒருவேளை தலைவரவர்கள் அவ்வாறு கருத்துரை செய்வது தேவை யன்றெனக் கருதியிருக்கலாம். ஆனால் ஏதோ கரணியம்பற்றிப் பாவாணர் அவர்கள் சொற்பொழிவுகளைப் பற்றிய கருத்துரை களைத் தாம் கூறப்போவதில்லை எனத் தம் உரைகளுக்கிடையில் கூறினர்.

இனி, பாவாணரவர்களின் கருத்துரைகளை இத்தகைய மாநாடு களிலும், அல்லது தனித்தனிக் கூட்டங்களிலுந்தாம் கேட்க வேண்டுமென்பதில்லை. அவர்களின் முற்றி முதிர்ந்த மொழியறி வான் முகிழ்த்தெழும் ஆய்வுரைகளும் எடுத்துக்காட்டுகளும் அவர் இதுவரைஎழுதிய நூல்கள்எல்லாவற்றுள்ளும் தேவையான அளவு பொதிந்துள்ளன. அவற்றைத் தமிழர் என்று கூறிக் கொள்ள விரும்புவார் ஒவ்வொருவரும் தவருமல் படித்துத் தெளி வடைதல் வேண்டும். அவற்ருல் தம் ஈடும் எடுப்புமற்ற வரலா றும், பீடும் பெருமையுமுற்ற மொழியமைப்பும், நன்கு உணரப் பெறுதல் திண்ணம். ஏறத்தாழ நான்காயிரமாண்டுகளாக இத் தமிழினம் ஆரியப்பூசல்களுள் சிக்குண்டு அறிவிழந்து, பெருமை குன்றிக் கிடக்கின்ற இருள் நிலையினின்று விடுதலை பெறுதல் உறுதி. அக்கால் இத்தகைய மாநாடுகளும் தேவையில்லை; சொற்பொழிவுகளும் வேண்டியதில்லை. ஆனல் அதுவரை நாம் எவ்வளவோ செய்துகாட்ட வேண்டியுள்ளது.

அடுத்து, இரண்டாம் நாள் கூடிய மாநாட்டில் 'உலகத் தமிழ்க்கழகம்" அமைக்கப் பெற்றது. இக்கழகம் இக்கால் மாநில அளவிலேயே சிறப்பாகச் செயல்படுமாறு அமைக்கப் பெற்ருலும், விரைவில் உலகில் உள்ள மெய்ம்மைத் தமிழ் உள்ளங்களை யெல்

லாம் ஒன்றுசேர இணைத்துக்கொண்டு செயலாற்றும் என்பதில் எவரும் ஐயங்கொள்ளத் தேவையில்லை. இக்கழக அமைப்பிலும் செயன்முறையிலும் அங்கு வந்திருந்தவர்கள் எல்லாரும் நிறைவு கொண்டிருப்பர் என்று நான் கூறுதற்கில்லை. வந்திருந்தவர்களில் ஒருசிலர் மாநாட்டுக் கொட்டகைக்குள் நுழைந்த பொழுதும் சரி வெளிவந்தபொழுதும் சரி பொந்திகையற்ற உள்ளத்தோடுதான் இருந்தனர் என்பதைக்கூட நான் துணிவுடன் கூற முடியும். குறிப்பாகத் தென்மொழியின் வினையழுத்தத்தால் நானும், ஆ ர ா ய் ச் சி நூல்களின் வெ ளி யீ ட் டு த் தேவைகளால் த லை வ ர் பா வ ா ண ர் அவர்களும் ஒருவர்க்கொருவர் நேருக்கு நேராகவோ மடல் வழியாகவோ அடிக்கடி தொடர்பு கொள்ள வாய்ப்பில்லாமலிருந்த அந்த இடைவெளியை நன்கு பயன்படுத்திக்கொண்ட, எவற்றாலும் தெளிவடையாத உள்ளங்கள் சில, நான் மாநாட்டில் கலந்து கொள்ளாமல் தடுக்கும் போக்கிலுங்கூட அங்கு நிகழ்ச்சிகள் நடந்து வந்தனவாக அறிந்து மிகவும் வியப்புற்றேன். இனி இதனினும் வியப்பு என்ன வென்றால் பாவாணர் அவர்களுக்கும் எனக்கும் சில வகைகளில் பகைமூளும்படியும் முயற்சி நடந்துள்ளது என்பதே.

பாவாணர் அவர்களுக்கும் எனக்கும் உள்ள உணர்வை எவரும் வெளிப்படையான நிகழ்ச்சிகளைக் கொண்டு எடைபோட்டு விடமுடியாது. பாவாணர் என்மேல் வைத்துள்ள பற்றையும் நம்பிக்கையையும் நான் முழு அளவில் அறிந்தவன் என்று கூற முடியாமற் போயினும், நான் அவர்மேல் வைத்துள்ள அன்பிற்கும் அக்கறைக்கும் நம்பிக்கைக்கும் இதுவரை ஒருதுளியும் பழுதேற்பட்டதில்லை. அவரின் செம்மாந்த அறிவிற்கும் பீடுடைய ஆராய்ச்சிகளுக்கும் என்றும் நான் அடிமை. அவரின் குழந்தையுள்ளத்தால் நான் சில பொழுதுகளில் வருத்தமுற்றதுண்டெனினும், அத்தகைய நிலைகளே முன்னினும் அவர்மேல் அக்கறை கொள்ளுமாறு என்னைச் செய்தன என்பது மிகையாகாது. தமிழ்ப் பற்றுக் காரணமாக என்பாலும் அவர்பாலும் வெறுமனே வந்து போய்க்கொண்டிருக்கும் வாய்ப்பைப் பெற்ற ஒருசிலர் அவரையும் என்னையும் தாங்களே இணைத்துக் கொண்டுள்ளதாகப் பெருமைப் பட்டுக்கொள்ளலாம். அதனால் ஒரு சில நிலைகளில் தங்களையும் உயர்த்திக்கொள்ளலாம். ஆனால் அவர்களுடைய

போலி இணைப்புரைகளும் வினைகளும் என்றும் நிலையாக இருந்து விடா என்பதை அவர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டு கின்றேன்.

இனி, இத்தகைய மனநெகிழ்ச்சிகளால் தளர்வுற்றுப்போன அன்பர்களுக்கும், இவ்வுட்பூசல்களையே அறியாது தமிழ் விடிவு ஒன்றே கருதி அவண் வந்திருந்த மெய்ம்மைத் தமிழன்பர்களுக்கும், உலகத் தமிழ்க் கழகப் பொதுச் செயலாளன் என்ற முறையில் சில் வற்றைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

பாவாணர் உள்ளவரை உலகத் தமிழ்க் கழகத்தின் தலைமை அவர் ஒருவர்க்கே முற்றுந் தகுதியுடையது. அவர்க்குப்பின் இக்கழ கம் சிறந்த செயற்குழு ஒன்றினால் இயக்கப்பெறும். இதுபற்றிப் பின் னர் ஆராயப்பெறுமெனினும் அவர் தலைமையால் நிறைவுறாத ஒரு சில உள்ளங்களுக்காக இதனை இங்குக் குறிப்பிட நேர்ந்தது. (அவ் வுள்ளங்களை நான் அறிவேன்.) தலைமைப் பொறுப்பன்றி வேறு பொறுப்புகளில் அமர்த்தப் பெற்றவர்கள் சில பலகாரணங்களால் விரும்பப்படுபவரெனினும், வெறுக்கப்படுபவரெனினும், எவர் ஒரு வருடைய தனி விருப்பு வெறுப்பின் அடிப்படையில் தமிழ் ஆக்கத் திற்கு மாறாகவோ, தமிழர் முன்னேற்றத்திற்குத் தடையாகவோ எது வும் நேர்ந்துவிடாது என்பதை உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்பு கின்றேன். ஒருசிலரின் தனிப்பட்ட இயக்கங்களுக்கு ஒத்துவரக் கூடியதாக இக்கழகம் அமைக்கப்படாமல் இருக்கலாம். ஆனால் அஃதொன்றையே இக்கழகத்தின் சிறப்பான அமைப்பாகக்கொண்டு எல்லா வகையானும் தமிழ் வரலாற்றையே புதுப்பிக்கும் வகையில் ஈடுபடுமாறு அன்பர்களைப் பல்லாற்றானும் வேண்டிக்கொள்கின் றேன். நமக்குள் ஒருவருக் கொருவர் நிறைவளித்துக்கொள்ள முடி யாதவர்களாக இருப்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள் ளுதல் நலம். நம் அறிவிலும், உணர்விலும், வினையிலும் வேற்றுமை கள் வெளிப்பட்டே தீரும்.

ஒருவர்க்கு விருப்பமானது இன்னொருவருக்கு வெறுப்பானதாக லாம்; ஒருவரின் இன்பம் பிறிதொருவரின் துன்பமாகலாம்; ஒருவ ரின் வளர்ச்சி இன்னொருவர்க்குத் தளர்ச்சியை உண்டாக்கலாம்; ஒருவரின் அறியாமை மற்றவரின் அறிவாகக் கருதப்படலாம்; உலக மும் உலக உயிர்களும் உயிர்களின் மனவுணர்வு அறிவுணர்வுகளும் இத்தகைய வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டுதான் இயங் கிக் கொண்டுள்ளன. ஆனால் இவற்றிற்கு மேலாக, இவையெல்லா

வற்றையும் பின்னிப் பிணைத்துக்கொண்டு அன்பு என்ற ஒரு பேரு ணர்வு தலையோங்கி நிற்பதை எல்லாரும் உய்த்துணர்தல் வேண்டும். அத்தகைய அன்பு, நாம் பேசும் மொழியாலும் இனத்தாலும், இடத் தாலும் மேலும் மேலும் வலிவுற்று விளங்குவதாகும். அவ்வாறு தமிழ் என்ற கூட்டுக்குள் இணைந்து நிற்கும் இவ்வுயிர்க்கூட்டம், இப் பழைய மன்பதை—தந்நலமும், குலவெறியும், வேற்றுமை உணர்வும் மிக்கோங்கி உழைக்காமலே உண்ணும் ஒரு கூட்டத்தினரால் நூற் றுக் கணக்கான ஆண்டுகளாக அழுத்தி வைக்கப்பெற்றுச் சிறப் பிழந்து போனதை நாம் அறிவோம். அறிந்த வகையில் நாம் நம்மை வெளிப்படுத்திக் கொள்ளவும் விடுதலை பெறவும் செய்த பல்லாயிர முயற்சிகளில் இவ்வுலகத் தமிழ்க்கழக அமைப்பும் ஒன்றாகும். எனவே இவ்வுலகெங்கினும் சிதறிக்கிடக்கும் தமிழ் உள்ளங்களை யெல்லாம் ஒன்று கூட்டுவோம். அவ்வுள்ளங்களினின்றெழும் உணர் வலைகளையெல்லாம் ஒன்றாக முழங்கச்செய்வோம்; அவற்றின் அடிப் படையில் "நாம் அடிமைகளல்லர்; மாந்த இனத்தின் முதல் தோன் றல்கள்; நம் மொழி இழிந்தது அன்று; உலக மொழிகளுக்கெல்லாம் தலைமையானது; தாயானது" என்று உரக்கக் குரல் கொடுப் போம்.

இவ்வாக்கங்களுக்கும் எழுச்சிகளுக்கும் நம்மில் ஒருசிலராகி லும் நம்மை இழந்து கொண்டாக வேண்டும். அவ்வாறு இழந்து கொள்ளத் துணிந்தவர்களை, இழந்துகொள்ள விரும்பாதவர்கள் பல வாறு இழித்தும் பழித்தும்—பிறர் ஐயுறும்படி பேசியும் ஏசியும் வரத் தான் செய்குவர். ஆனால் எதிர்காலம் ஒன்றே எல்லாரைப் பற்றியும் எல்லார்க்கும் தெரிவிக்கும் எடைக்கருவியாகும். ஆதலால் முயற்சி யின் வெற்றி தோல்விகளைப் பற்றிக் கவலை கொள்ளாமல், ஐயுறுமல் முனைதல் ஒன்றே முழுமூச்சாகக் கொண்டு செயல்பட வருக வருக என்று செந்தமிழ் மறவர்களை மன மொழி மெய்களால் அழைக்கின் றேன். தமிழினத்தின் தனிவரலாறு படைக்கப்போகும் பெருமிதத் தால் வேற்றுமை யுணர்வுகளையும் மனப் பூசல்களையும் குழியிட்டுப் புதையுங்கள்; விருப்பு வெறுப்புகளைத் தூக்கிக் கடல்நீரில் மூங்குவி யுங்கள்!

இனி, முற்றும் தனித்தமிழ் அன்பர்களால் தூய தமிழ் நலம் நாடுபவர்களால், உண்மையான மொழிப்பற்றும் நாட்டுப் பற்றும் கொண்டவர்களால் கூட்டப்பெற்றதும், இற்றைக்குள்ள பேராசிரியர் களுக்கெல்லாம் முதுபெரும் பேராசிரியராக வுள்ளவரும் இனிவரும் மொழிப் பேரறிஞர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்கப்போகிற

வருமான மொழிமுதறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களால் தலைமையேற்று நடத்துவிக்கப்பெற்றதுமான இம்மாநாட்டைப்பற்றி தமிழ்நாட்டுத் தாளிகைகள் பேரளவில் இருட்டடிப்பு செய்தது நம் மக்களுக்கும் நாட்டிற்கும் ஏற்பட்ட பேரிழிவாகும். தமிழ் வளர்ப்ப தாகப் பறைசாற்றிக் கொண்டுள்ள அரசியல் சார்பற்ற- அரசியல் சார்ந்த நாளிதழ், மாதவிதழ்களெல்லாம் இதுபற்றி ஒருவரியும் எழு தாமற் போனது நம்மையெல்லாம், நம் கொள்கைகளை யெல்லாம், தூய தமிழ் வளர்ச்சியை யெல்லாம் இழிவு செய்ததே ஆகும். பார்ப் பன இதழ்கள் ஒன்றிரண்டு மிகமிகச் சிறிய அளவில் செய்தியைப் பொதுவாக வெளியிட்டிருந்தாலும், அச்செய்தியில் தலைவர் என்ப தற்கு'அக்கிராசனர்' என்றும், செயலாளர் என்பதற்குக் காரியதரிசி' என்றும், பொருளாளர் என்பதற்குப் 'பொக்கிஷதார்' என்றும், தேவ நேயப் பாவாணரைத் 'தேவநேயத் தேவர்' என்றும், பெருஞ்சித்திர னைப் 'பெருங்கீரன்' என்றுமே நையாண்டித்தனமாகக் குறித்துத்தம் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டதுடன் நம் வயிற்றெரிச்சலை யும் எழுப்பி விட்டன. இத்தாளிகை களெல்லாம் திரைப்பட நடிகை யரின் செய்திகளையும் படங்களையும் முழுப்பக்க அளவில்வெளியிட்டு, ஏதுமறியாப் பேதை மக்களை ஏய்த்துப் பணம்பறித்துத் தம் வயிறு கழுவுவதை ஒன்றே குறிக்கோளாகக் கொண்டவை ஆகும் என்பதைக் குறிப்பிடத் தேவையில்லை. பார்ப்பனப் பழங்கிறுக்கர்களை யும் அவர்தம் குஞ்சு குளுவான்களையும் நிலையங்களுக்குள் வருவித் துக்கொண்டு அம்மாமி அத்திம்பேர் நாடகங்களையும், மூக்கடைப் பும் முக்கலும் கலந்த கெக்கலி இசைகளையும் நாள்தோறும் இரைத் துக்கொட்டும் சென்னை, திருச்சி வானொலி நிலையங்களுங்கூட இத் தகையதொரு வரலாற்று மாநாட்டினைப் பற்றி ஒரு சொல் தானும் ஒலிபரப்பு செய்யவில்லை. ஏமாளித் தமிழரும், கல்லாக்களிமக்களும், வையாபுரித் தமிழரும், பக்தவத்சல சுப்பிரமணியன்களும் இந்நாட் டில் இருக்கும்வரை இத்தகையாரின் புறக்கணிப்பும், இருட்டடிப்பும் இருந்து கொண்டுதான் இருக்கும்.

இறுதியாக இம்மாநாடு எத்தனையோ இடர்ப்பாடுகளுக் கிடையி லும், பொருள் முட்டுப்பாடுகளுக்கிடையிலும் நடைபெற்றது மிகவும் பாராட்டத்தக்கதாகும். இப் பெரும் பணியில் பாவாணர் அவர்களுக் குப் பக்கத் துணையாகவும், பலவகைகளில் பொருள் தொகுத்துக் கொடுத்தும், அயர்வும் உறக்கமுமின்றித் தொடர்ந்து பலநாட்கள் மாநாட்டு அமைப்புப் பணிகளில் தம்மை ஈடுபடுத்தியும் நின்ற பொருளாளர் திரு. செங்கை. செந்தமிழ்க்கிழான் (செல்வராசன்)

அவர்களைத் தென்மொழிச் சார்பில் மிகவும் பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

மாநாட்டிற்கு வந்திருந்த தலைவர்களையும் சொற்பொழிவாளர்களை யும் ஓம்பிய வகையில் திருச்சி ஊரக அன்பர்கள் திருவாளர்கள். எழி லரசன், பிச்சுமணி, மகிழ்நன், சானகிராமன், பரமசிவம் முதலியவர் களும் திருச்சிஅன்பர்களான திருவாளர்கள். வெள்ளிமலை, செல்லத் துரை முதலியரும் குறிப்பிடத் தக்கவர்கள் இவர்கள் பொருளாலும். வினையாலும் புலவர்களைப்புரந்த பெருமைபெற்றவர்கள். தூய தமிழ்ப் பற்றும், வினைக்கஞ்சா விறலாண்மையும் கொண்ட இத்தகையார் போல் ஒவ்வொரு பெருநகரிலும் ஒவ்வொரு தனித்தமிழ்க்குழு வினை யாற்றுமானால் இன்னும் ஐந்தே ஆண்டுகளில் 'தெருவெல்லாம் தமிழ் முழக்கம்' கேட்கும்; 'தமிழ்நாட்டின் தமிழ்த்தெருவில் தமிழே ஒளி வீசும்'; தண்டமிழ்நாடு வல்லடிமைப் பருவிலங்கை அறுத் தெறிந்து விடுதலை பெற்றுத் திகழும்! இவை வெறும் கற்பனையல்ல; காலக்கணிப்பு! விளையப்போகும் தமிழ்வேளாண்மைக்கிடும் வித்து!

இறுதியாகத் தமிழ்ப் பகைவர்களுக்கொன்று கூறிக்கொள்ள விரும்புகின்றேன். ஆண்டாண்டுக் காலமாக அடிமைப் படுகுழியில் வீழ்ந்துகிடந்த தமிழன் உணர்வும் வலிவும் பெற்று எழுந்துவிட்டான். இனி அவனை வீழ்த்துவதோ தாழ்த்துவதோ என்றும் இயலாது; ஆரியப் பார்ப்பனராயினும் சரி! வடவராயினும் சரி! எவர்க்கும் இனி அவன் ஏவல் செய்யான். கிளர்த்தெழுந்த வல்லுணர்வு அவன் எலும்பினும் குருதியினும் இடைவிடாமல் ஓடத்தொடங்கிவிட்டது; அவன் மூளையுள் அறிவு விளக்கம் பிறந்து விட்டது; இரவினாலோ கரவினாலோ மதிமயங்கும் ஏமாளியல்லன் அவன்! உரமுறிய தோள் கள், வல் உணர்வேறிய நெஞ்சம், மறமேறிய பார்வை கொண்டவன் அவன்! இனி மறைந்தோடிடும் பகைமை!

-பெருஞ்சித்திரன்.

அட்டைப் படம்!

தென்மொழி முகப்புக்கென, பாவாணர் அவர்களின் ஒளியுருவப் படத்தைப் பிடித்துதவிய தென்மொழியன்பர் திரு. நாரா. மகிழ்நன் (திருச்சி) அவர்களுக்கும், அதனைச் சிறப்புறப் பெரிதுபடுத்தியுதவிய தென்மொழியன்பர் திரு. ந. சிதம்பரம் (உரிமையாளர், விநாயகர் படப்பிடிப்பகம், காட்டுமன்னார்கோயில்) அவர்களுக்கும் எம் மன முவந்த நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக! –பெருஞ்சித்திரன்.

'தமிழ்' எனும் கூட்டினுள் தமிழரே இணைக!

-துரை-மாணிக்கம்-

நெஞ்சிலும் நினைவிலும் தமிழனே நீதான்!
நெட்டுயிர்க் கின்றஎன் மூச்சிலும் நீதான்!
எஞ்சிய புகழினை எண்ணுதல் செய்வாய்.
எத்தனை நாட்டினை அடைக்கலம் கொண்டாய்.
கொஞ்சமும் நம்நிலை கருதுகி லாயே!
கூறு மொழிக்கிரு செவிகளும் தாராய்!
அஞ்சுதல் கண்டனை; அடங்குதல் செய்வாய்.
ஆயிர மாயிர மாண்டுகள் வீழ்ந்தாய்!

எண்ணிட எண்ணிடத் துணுக்குறும் நெஞ்சம்,
ஏங்கிட ஏங்கிடச் சாம்பிடும் மூச்சு!
பண்ணிலும் உரையிலும் பற்பல சொன்னோம்;
பாலிலும் நெய்யிலும் சொற்களைத் தோய்த்தோம்!
எண்ணறு மேடையில் விண்ணதிர்ந் தாட
ஏ!தமி ழா!விழி! விழி!-எனச் சொன்னோம்!
கண்ணிமை திறந்தனை திறந்தனை இல்லை;
காதுகள் தூர்ந்தனை தூர்ந்தனை! கண்டோம்!

'ஆரியன் என்றனைத் தாழ்த்தினன்'-என்றாய்;
'ஆயிர மாண்டுகள் வீழ்த்தினன்'-என்றாய்;
'பாரியும் ஓரியும் கொடைமடம் கொண்டே
பல்லினத் தாரையும் வளர்த்தனர்'-என்றாய்;
'வாரியும் கொண்டது பழஞ்சிறப்' பென்றாய்;
'வடவனும் புகுந்தனன்; ஒழித்தனன்'-என்றாய்;
ஆரிதை நம்புவர்? உன்றனை நீயே
அடிமைசெய் தாய்; உனைத் தாழ்த்தியும் கொண்டாய்!

வித்தப் படாதெனத் தடுத்தவர் யாரே?
விளைக்கப் படாதென மறித்தவர் யாரே?
தொத்தப் படாதெனச் சொன்னவர் யாவர்?
தூங்கிடப் போவென உரைத்தவர் யாவர்?
கத்தப் படாதெனும் கட்டளை ஏது?
கனைக்கப் படாதென நெறித்தகை யார் கை?
முத்தப் படாதெனில் உரிமையென் னாகும்?
முனையப் படாதென யாருனைச் சொன்னார்!

விழிக்கப் படாதெனை வெருட்டிய தாரே?
வீழ்ந்திவண் கிடவென மருட்டிய தாரே!
அழிக்கப் படாததா பகை, எழுந் திட்டால்?
ஆர்க்கப் படாதன வா,முர சங்கள்!
செழிக்கப் படாததா தமிழரின் வாழ்வு?
செகுக்கப் படாததா வடவரின் சூழ்ச்சி?
ஒழிக்கப் படாதன வா,மிடி சோர்வு?
ஒற்றுமை யுற்றன ரெனில்வரும் வாழ்வு!

உன்னையே உன்னவன் தாழ்த்துதல் செய்வான்!
உன்னுரை உன்செயல் பொய்யெனச் சொல்வான்!
பின்னையே குழியினைத் தோண்டமுற் பட்டான்!
பித்தனென் றுன்னையிங் கிகழுதல் செய்தான்!
சின்னதாய் அறிவெனும் கனல்புகக் கண்டால்
சீர்த்தது பேரறி வெனப்புகழ் செய்வான்!
'என்னைநீ எழுதுதல் பேசுதல்'–என்பான்
'எவர்க்கது தேவையாம்'–என்றிகழ் செய்வான்!

அன்புடைத் தமிழனே! ஒன்றுரைக் கின்றேன்;
ஆருடை மொழியிது நாள்வரை கேட்டாய்?
என்பினில், சதையினில், குருதியில் எல்லாம்
எண்ணிலா ஆண்டுகள் அடிமைமேற் கொண்டாய்!
தின்பதில், உடுப்பதில், துயில்வதில் எல்லாம்
திகழ்ந்தநல் அடிமைவாழ் வின்பமென் கின்றாய்!
மண்பதை திரிந்தது; திரிந்ததுன் உள்ளம்!
மற்றிவண் கூறுதற் கேதுகாண் உண்மை!

இன்னமும் கூறுவேன்; இறுதிவந் தில்லை!
இருள்மடிந் தொளிவரும்! ஒளிவரும்! அக்கால்
முன்னவை மீட்பதும் வாழ்வதும் உண்மை!
முழக்கிடு! வழக்கிடு! சோம்பியி ராதே!
சின்னவை–இழிந்தவை நினைவுகள் தூர்ப்பாய்!
சேர்ந்துகொள் உன்னினம்! ஒற்றுமை காண்பாய்!
சொன்னவை நினைவுகொள்! இணைகநீ இன்றே!
சொந்தஉன் மொழியினை நாட்டினை ஆள்வாய்!

உலகத் தமிழ்க்கழக மாநாட்டுத் தீர்மானங்கள்.

0 தமிழனை ஆரியனுக்கு (பிராமணனுக்கு)த் தாழ்ந்தவனாகக் காட்டும் எந்நிலையையும் உடனே நீக்குக!

0 குலப்பெயர்களை நீக்கித் 'தமிழர்' என்றே குறிப்பிடுக!

0 கோயில்களில் தமிழ் வழிபாடு கொணர்க.

0 இந்திப் பள்ளிகள் கொணரும் திட்டத்தை முறியடிக்க.

0 மறைமலையடிகள் பெயரால் தனித்தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவுக.

0 இவைபோன்ற நாற்பத்தைந்து சிறந்த தீர்மானங்கள்.

(தி. வ. ஆண்டு கககக. கன்னி 20-ஆம் பக்கல் (6-10-68) ஞாயிறன்று திருச்சி, தேவர் மன்றத்தில் மொழிப் பேரறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் (கலைமுதுவர்) அவர்கள் தலைமையில் கூடிய உலகத் தமிழ்க் கழக முதல் மாநாட்டில் நிறைவேற்றப் பெற்ற தீர்மானங்கள்)

சிறப்புத் தீர்மானங்கள்.

க/க மேலைநாட்டு நிலவியல், மாந்தவியல். மொழியியல், பேராசிரியர்களின் முற்றமுடிந்த ஆய்வுரைகளின் படியும், இக்கால் உள்ள பழந்தமிழ் நூல்களிற் குறிக்கப்பெற்ற செய்திகள், உரைக்குறிப்புகள் இவற்றின்படியும், புறச்சான்றுகளான-அகழ்ந்தெடுக்கப் பெற்ற பழம் பொருள்கள், மண்டையோடுகள், கருவிகள் முதலியவற்றைக் கொண்டும், பண்டைத் தமிழனின் பிறந்தகம், நிலநூல் வல்லாரால் காண்டுவானு (Gondwana) எனவும், உயிர்நூல் வல்லாரால் இலெமூரியா (Lemuria) என்றும் குறிக்கப் பெறும் குமரிநாடே என்று இம்மாநாடு அறுதியும் இறுதியும் உறுதியுமாகத் தீர்மானிக்கின்றது.

உ/உ இக்கால் நமக்குக் கிடைத்துள்ள அகப்புறக் கரணியங்களைக் கொண்டும், அறிவியலைக் கொண்டும், பகுத்தறிவைக்கொண்டும், தமிழ் நெடுங்கணக்கின் தோற்றம் கி. மு. 20,000க்கும் முன்பு இருத்தல் வேண்டும் என இம்மாநாடு உறுதியாகத் தீர்மானிக்கின்றது.

க/ரு அவ்வாறே தொல்காப்பியரின் காலம் கி. மு. ஏழாம் நூற்றாண்டு என்றும், திருவள்ளுவர் காலம் கி. மு. இரண்டாம் நூற்றாண்டு எனவும் இம்மாநாடு உறுதியாகத் தீர்மானிக்கிறது.

பொதுமக்களை நோக்கியவை:

ச/க தமிழர் யாவரும் தமிழ்ப் பெயரே தாங்கல்வேண்டும்.

ரு/உ இருவகைச் சடங்குகளையும், கோயில் வழிபாட்டையும் தமிழர் தமிழிலேயே நிகழ்த்துதல் வேண்டும்.

சு/ரு தமிழனை ஆரியனுக்குத் தாழ்ந்தவனாகக் காட்டும் எந்நிலைமையையும் உடனே நீக்குதல் வேண்டும்.

எ/ச ஊர்ப்பெயர், தெருப்பெயர், கட்டிடப் பெயர், பூங்காப் பெயர் முதலிய இடப்பெயர்களையெல்லாம் தமிழ்ச் சொற்களாகவே அமைத்தல் வேண்டும். அயற்சொற்களா யிருப்பவற்றை உடனே தமிழ்ச் சொற்களாக மாற்றுதல் வேண்டும்.

அ/ரு வரப்போகும் குடிமதிப்பில் (Census) தமிழர் எல்லாரும் குலப்பெயரைக் குறிக்காமல் தம்மைத் தமிழர் என்றே குறித்தல் வேண்டும்.

புலவர்களை நோக்கியவை:

கூ/க தமிழ்ப் புலவரும் தமிழாசிரியரும் தமிழிற் பேசும்போதெல்லாம் தனித் தமிழிலேயே பேசுதலும் எழுதுதலும் வேண்டும்.

க0/உ தமிழாசிரியர் மாணவர்க்குத் தமிழ்ப்பற்றையூட்டி என்றும் தூய தமிழிலேயே பேசப் பழக்குதல் வேண்டும்.

கக/ரு இந்தியாசிரியராயிருக்கும் தமிழர் தமிழாசிரியராக மாறுதல் வேண்டும்.

தாய்மாரை நோக்கியது:

கஉ/க தொட்டிலாட்டும் கையே நாட்டையாளும் கையாயிருப்பதால் தமிழ்நாட்டுத் தாய்மாரெல்லாரும் தங்கள் மக்களைத் தமிழுணர்ச்சியூட்டி வளர்க்குமாறும், தவறாகச்செல்லும் தங்கள் கணவன்மாரைத் தமிழ்நெறிக்குத் திருப்புமா
டிக் கொள்கின்றது.

மாணவரை நோக்கியவை:

கரு/க உயர்நிலைப்பள்ளி மாணவர்களும், கல்லூரி மாணவர்களும் எவ்வகை அரசியல் கட்சியிலும் ஈடுபடாமல் முழுக்கவனத்தையும் கல்வியிலேயே செலுத்துதல் வேண்டுமென்றும், தமிழைத் தூய்மையாகவே எழுதியும், பேசியும் வருதல் வேண்டுமென்றும், தமிழுக்கு எவ்வகையிலேனும் கேடு நேரின் அதை இயன்ற வகையெல்லாம் நின்று தடுக்கவேண்டுமென்றும் இம்மாநாடு அவர்களைக் கேட்டுக்கொள்கிறது.

கழகங்களையும் படிப்பகங்களையும் நோக்கியவை:

கச/க தனித்தமிழாற்றல் அல்லது பற்றுள்ளவரையே சொற்பொழிவாளராகவும் விழாத்தலைவராகவும் அமர்த்துதல் வேண்டும்.

கரு/உ தென்மொழி, பாவை, தமிழ்ப்பாவை, தமிழ்ச்சிட்டு குறள்நெறி, மாணுக்கன், பூஞ்சோலை முதலிய தூய தமிழிதழ்களை படிப்பகங்கட்கு வருவித்தல் வேண்டும்.

கசு/ங 'கருநாடக சங்கீதம்' என்பதைத் "தமிழிசை" அல்லது 'தென்னிசை' யென்றும், பரதநாட்டியம் என்பதைத் தமிழ் நடனம் என்றுமே குறித்தல் வேண்டும்.

வெளிநாட்டுத் தமிழரை நோக்கியது:

கள/க தமிழைக்காட்டிக்கொடுக்கும்வையாபுரிக் கூட்டத்தைச் சேர்ந்த ஆய்வர் தனிநாயகம் தோற்றுவித்த உலகத் தமிழ்ப் பேரவையைத் தமிழ்நாடு ஒப்புக் கொள்ளாததினுல், ஈழம், சிங்கை, மலையா முதலிய வெளிநாட்டுத் தமிழ் மன்றங்கள் மறைமலையடிகள் வழிப்பட்ட இவ்வுலகத் தமிழ்க்கழகத்தோடு உடனே இணையுமாறு இம்மாநாடு அவாவுகின்றது.

பாரிசு உலகத்தமிழ் மாநாட்டுத்தலைவரை நோக்கியது

கஅ/க வருகின்ற 1970–ஆம் ஆண்டுப் பாரிசு உலகத்தமிழ் மாநாட்டிற்கு இவ்வுண்மைத் தமிழ்க் கழகத்தினின்றே விடை முகவரை வரவழைக்குமாறு, அம்மாநாட்டுத் தலைவரை இம்மாநாடு வேண்டிக்கொள்கின்றது.

தமிழ்நாட்டு அறநிலையப் பாதுகாப்புத் திணைக்களத் தலைவரையும் மடவளாகத் தலைவரையும் நோக்கியன

கக/க சிவநெறியும் திருமால் நெறியும் தமிழர் கண்ட சமயங்களே யாதலாலும், தமிழ்நாட்டுக் கோயில்களில் வழிபடுவார் பெரும்பாலும் தமிழ் மக்களே யாதலாலும், மக்கள் தம் மேலான தந்தையாகிய இறைவனைத் தம் தாய்மொழியில் வழிபடுவதே பயன்படுவதுடன் பகுத்தறிவிற்குப் பொருந்துவதாலும், திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமான தமிழே உண்மையான தேவமொழி யாதலாலும், தமிழ்நாட்டுச் சிவ, திருமால் கோயில்களிலெல்லாம் தமிழிலேயே வழிபாடு நடப்பித்தல் வேண்டுமென்று, அறநிலையப் பாதுகாப்புத் திணைக்களத்தலைவரையும் மடவளாகத் தலைவரையும் இம்மாநாடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.

உ0/உ முழுமுதற் கடவுளை வெவ்வேறு பெயரால் வழிபடும் சிவமதமும் திருமால் மதமும் தூய தமிழ்மதங்களாதலாலும் பிரமன் என்னும் ஆரியத் தெய்வத்தோடு சிறிதும் தொடர்பற்றவை யாதலாலும், அவற்றைத் தமிழர் மதம் என்றே குறித்தல் வேண்டுமென்றும் இந்துமத மென்று குறித்தல் கூடாதென்றும், இம்மாநாடு கேட்டுக் கொள்கின்றது.

தமிழ்நாட்டு அரசை நோக்கியவை:

உக/க தமிழ்வாயிற் கல்விப் பாடப் பொத்தகங்களை யெல்லாம் தூய தமிழிலேயே எழுதுவித்தல் வேண்டும்.

உஉ/உ தனித்தமிழ் நூல்கட்கும் இதழ்கட்கும் பரிசளித்தல் வேண்டும்.

உங/ங தமிழ் ஒரு சமற்கிருதக்கிளை அல்லது கலவைமொழி என்னும் கருத்துப்படத் தமிழ்ப் பகைவரான பிராமணத் தமிழ்ப் பண்டிதரால் தொகுக்கப்பட்ட சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகர முதலி, தமிழைக் கெடுப்பதாலும் அயல்நாட்டார்க்குத் தமிழைப் பற்றி மிகத்தாழ்வான எண்ணத்தை உண்டுபண்ணுவதாலும் தக்காரைக்கொண்டு உடனே அதைத் திருத்துவித்தல் வேண்டும் என்று சென்னைப் பல்கலைக்கழகத்தை உலகத் தமிழ்க் கழகம் வேண்டிக் கொள்கின்றது.

உச/ச தமிழ் வளர்ச்சிக்கும் தமிழர் முன்னேற்றத்திற்கும் இன்றியமையாத செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலியை

மொழிநூல் மூதறிஞர் திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களைக் கொண்டு தொகுக்கச் செய்து அந்நூல் வெளியிடுவதற்காக உரு. 50,000 நல்குமாறு தமிழ்ப்பற்று நிறைந்த தமிழக அரசினை உலகத் தமிழ்க் கழகம் வேண்டிக்கொள்கின்றது.

உரு/ரு மதுரைப் பல்கலைக் கழகத் துணைத்தலைவர் திரு. தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர் தமிழுக்கும் தமிழ் மாணவர்க்கும் தமிழாசிரியர்க்கும் பலவகையிலும் கேடுசெய்வதால் அவரைத்துணைவேந்தர் பதவியினின்று அகற்றிவிட்டு, பர். இலக்குவனுர் அவர்களை அப் பதவிக்கு அமர்த்துதல் வேண்டும் என்று உலகத் தமிழ்க் கழகம் வேண்டிக்கொள்கின்றது.

உசா/சா தக்கார் பலரிருக்கவும், தமிழ்ப்பற்றும் பெருந்தமிழ்ப் புலமையும் அற்ற திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரனுரை இரசியாவில் நடைபெறும் தமிழ்க்கலை விழாவிற்கு விடை முகவராக விடுத்தது பற்றி இம்மாநாடு மிகமிக வருந்துகின்றது.

உஎ/எ செல்வன், செல்வி என்னும் சொற்கள் மணமக்கட்கே பொருந்துவதனுலும், குமரன், குமரி என்னும் சொற்கள் ஆரியர் வரு முன்பே குமரிநாட்டில் வழங்கிய தூய தென்சொற்களாதலாலும், திருமதி என்னும் கூட்டுச்சொல்லில் வரும் 'மதி' என்னும் சொல் வடசொல்லாதலாலும், மக்கட் பெயர் மதிப்படை மொழிகளாகக் குமரன், குமரி என்ற சொற்களையே மணவாதார்க்கும், திருவாளர் திருவாட்டி என்ற சொற்களையே மணந்தார்கட்கும் வழங்குமாறு, இம்மாநாடு அரசினரைக் கேட்டுக் கொள்கின்றது.

உஅ/அ நடுவணரசினர் 360 இந்திப் பள்ளிகளைத் தமிழ்நாட்டில் ஏற்படுத்தத் தீர்மானித்துள்ள திட்டத்தை எல்லாவகையிலும் முறியடித்தல் வேண்டும் என்று உலகத் தமிழ்க் கழகம் முடிவுசெய்கிறது.

உசு/கூ தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் துணைக் கண்காணகர் பதவிக்குத் தமிழறிஞரும் தமிழ்ப்பற்றுளருமானவரையே இனிமேல் அமர்த்துதல் வேண்டுமென்று தமிழக அரசை இம்மாநாடு வேண்டிக்கொள்கின்றது.

ஙட0/க0 தமிழ்ப்பற்று நிறைந்த தமிழ்ப் பேராசிரியர்களையே கல்லூரி முதல்வர்களாக அமர்த்துமாறு கல்லூரி ஆட்சியாளர்களை உலகத் தமிழ்க் கழகம் வேண்டிக் கொள்கின்றது.

௩௧/கக தமிழ்நாட்டில் 'தமிழ்ப் பல்கலைக்கழகம்' இல்லை என்ற குறை நீங்க 'மறைமலையடிகள்' பெயரால் ஒரு பல்கலைக்கழகம் அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென் இம்மாநாடு கேட்டுக் கொள்கின்றது.

௩௨/கஉ பேருந்துகளில் திருக்குறளை எழுதுவித்த தமிழக அரசினை உலகத் தமிழ்க் கழகம் பெரிதும் பாராட்டுகின்றது. தமிழகத்தில் உள்ள 6824 பேருந்துகளிலும் பேருந்துக்கு ஒன்றாக 6824 தூயதமிழ் இலக்கிய அறிவுரைகளைப் பொறிக்க வேண்டுமென இம்மாநாடு தமிழக அரசைக் கேட்டுக்கொள்கின்றது.

௩௩/க௩ தமிழ் வளர்ச்சிக்காகத் தமிழ்க் கல்லூரிகளை ஒன்று சேர்த்துத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவி, அதற்குத் தமிழ்ப் பற்றும் பெரும் புலமையும் நிறைந்த தமிழ்ப் பேராசிரியர் ஒருவரைக் கண்காணகராக அமர்த்த வேண்டுமென இம் மாநாடு அரசினரைக் கேட்டுக்கொள்கின்றது.

௩௪/க௪ சென்னை மாநிலத்தைத் தமிழ்நாடு என்று மாற்றிய தமிழக அரசு அவ்வாறே வேதாரண்யம், விருத்தாசலம், மாயூரம், ஸ்ரீரங்கம், சிதம்பரம், முதலிய ஊர்ப்பெயர்களையும் முறையே, திருமறைக்காடு, முதுகுன்றம், மயிலாடுதுறை, திருவரங்கம், சிற்றம்பலம் போன்ற தூய பழந்தமிழ்ப் பெயர்களாக மாற்றியமைக்க வேண்டுமென இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

௩௫/க௫ இந்தியை நீக்கியதற்காகவும், சீர்திருத்தத் திருமணத்தைச் சட்டமுறைப் படுத்தியதற்காகவும், தமிழக அரசை இம்மாநாடு பெரிதும் பாராட்டுகின்றது.

பல்கலைக் கழகங்களை நோக்கியவை:

௩௬/க சென்னை, மதுரைப் பல்கலைக்கழகங்களின் தமிழ்க் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணக்கர்களுக்கு 'வித்துவான்' (Oriental Title) என்ற பட்டம் வழங்கி வருவதை விடுத்து, அதற்கிணையான 'புலவர்' என்ற தமிழ்ப் பட்டத்தை வழங்க ஆவன செய்ய வேண்டுமாறு துணைக் கண்காணகர்களை இம்மாநாடு வேண்டிக்கொள்கின்றது.

௩௭/உ அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்க் கல்லூரி மாணவர்களுக்குப் 'புலவர்' என்ற தமிழ்ப் பட்டம் அளித்து வருவதற்கு இம்

மாநாடு மகிழ்ச்சியினையும், பாராட்டினையும் தெரிவித்துக்கொள்வதோடு இசைக்கல்வி பயிலும் மாணவர்களுக்கு 'சங்கீதபூஷிணம்' என்ற வடமொழிப் பட்டம் வழங்குவதை விடுத்து, அதற்கீடான 'இசைப்புலவர்' என்ற தமிழ்ப் பட்டத்தை அளிக்க வேண்டுமென அப் பல்கலைக்கழகத் துணைக் கண்காணகரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

௩அ/௩ மதுரைத் தியாகராசர் கல்லூரியில் வெறுமையாயுள்ள முதல்வர் பதவிக்கு மாணவர்களின் பெரும் நம்பிக்கைக்கு உரியவரும், தமிழ்ப் பற்றுளரும் ஆகிய, தக்க தமிழ்ப் பேராசிரியர் ஒருவரைக் கல்லூரி முதல்வராக அமர்த்துமாறு கல்லூரிக் கல்வித் தந்தையார் உயர்திரு. கருமுத்து தியாகராசர் அவர்களை உலகத் தமிழ்க் கழகம் வேண்டிக்கொள்கின்றது.

௩௯/௪ மதுரைப் பல்கலைக்கழக முதுகலை (எம். ஏ.) வகுப்பிற்கு இதுவரை பாடமாக இருந்துவந்த 'தமிழ் நாகரிகமும், பண்பாடும்' என்ற பாடத்தினைச் சென்ற ஆண்டுமுதல் மதுரைப் பல்கலைக் கழகம் நீக்கிவிட்டதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், தமிழ் வரலாற்று உணர்ச்சி பரவ, மீண்டும் முதுகலை வகுப்புப் பாடத்திட்டத்தில் சேர்க்குமாறு கேட்டுக்கொள்கின்றது.

௪0/௫ 1969-70-ஆம் ஆண்டு மதுரைப் பல்கலைக்கழக இளங்கலை (பி. ஏ.) வகுப்பிற்கு உரைநடை நூலாகிய பேராசிரியர் மறைமலையடிகள் அவர்களியற்றிய 'அறிவுரைக் கொத்து' எனும் பனுவலினின்று 'தமிழ்த்தாய்' என்னும் பத்தாவது பாடத்தினை நீக்கிவிட்ட மதுரைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பற்றற்ற செயலினை வன்மையாகக் கண்டிப்பதுடன் அப்பாடத்தினை மீண்டும் பாடத் திட்டத்தில் சேர்க்குமாறு பல்கலைக்கழகத்தை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

௪௧/௬ தனித்தமிழ்ப் புலவர்களின் தகுதிச் சான்றிதழைப் பட்டமாக ஆக்கித் தமிழ் இளங் கலைஞர்க்கு (பி. ஏ.) இணையாகப் பொதுக் கல்வித் தகுதியாக்குமாறு சென்னை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களை இம்மாநாடு கேட்டுக்கொள்கின்றது. பதினைந்து விழுக்காடு வேலையிடங்களைத் தமிழ்ப் புலவர்களுக்காக ஒதுக்கவேண்டுமென இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

௪௨/௭ தமிழ்க் கல்லூரிகளில் முதற்பகுதி தமிழ், இரண்டாம் பகுதி மொழியாக்கம், மூன்றும் பகுதி உலகவரலாறு, தமிழக வரலாறு

என்ற வரிசையில் பாடப் பகுதிகள் அமையுமாறு பாடத்திட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமெனப் பல்கலைக் கழகங்களை இம்மாநாடு கேட்டுக்கொள்கின்றது.

பொதுவானவை:

சங/க மறைமலையடிகளின் தாய்மொழிக்கட்டுரையைக்கண்டித்த பிராமணத் தலைமையாசிரியரையும், தமிழாசிரியரையும், இதழாசிரியரையும் இக்கழகம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

சச/உ தமிழ்நாட்டுச் சட்டப் பேரவை இந்தி நீக்கத் தீர்மானம் நிறைவேற்றிய பின்பும், மாணவர் இந்தி யெதிர்ப்பையும் தமிழறிஞர் இந்தி வெறுப்பையும் கண்ணூரக்கண்டு கொண்டும் இந்திக் கல்விச் சாலையைத் தொடங்கி வைத்துத் தமிழ்க் கேட்டிற்கு வழிகோலிய திரு. பக்தவச்சலனாரின் தீச்செயலுக்கு இம்மாநாடு தன் வன்மையான கண்டனத்தைப் புலப்படுத்திக் கொள்கின்றது.

சரு/ங இந்தியால் தமிழ் கெடும் என்பது தெளிவாதலால் இந்திப் பரப்புக் கழகம் தன் பணியை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டுமென்றும் இனிமேல் தொடர்ந்தால் அது தமிழர்க்கும் தமிழ் நாட்டிற்கும் பகையானது என்று கருதப்படும் என்றும் இம்மாநாடு எச்சரிக்கின்றது O

தென்மொழி-கடலூர்-1.

[உலகத் தமிழ்க்கழகச் செய்திகள் முழுமையாகத் தொடர்ந்து வரும் ஒரே இதழ்]

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்:	9 உருபா.	10-50 உருபா.	13 உருபா.
தனிஇதழ்:	75 காசு.	90 காசு.	1 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

திருச்சிராப்பள்ளியில்

திருவள்ளுவராண்டு 1999 கன்னி (புரட்டாசி)த் திங்கள் 19, 20-ஆம் பக்கல் (5,6-10-68) நடைபெற்ற

தமிழ் வரலாற்று, தமிழ்க்கழக அமைப்பு மாநாடுகளின்

நிகழ்ச்சிச் சுருக்கம்.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த திருச்சிராப்பள்ளியில் தமிழ் வரலாற்று மாநாடும் (உலகத்) தமிழ்க்கழக அமைப்பு மாநாடும் திருவள்ளுவர் ஆண்டு *1999* கன்னித் திங்கள் *19, 20*-ஆம் நாட்களில் (காரி, ஞாயிறு கிழமைகளில்) திருச்சி தனித்தமிழ் அன்பர்களின்பெருமுயற்சியால் பேராசிரியர், திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களின் தலைமையில் சிறப்புற நிகழ்வுற்றன.

மாநாட்டிற் கலந்துகொள்ளும் பொருட்டுத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பேராசிரியர்களும், அறிஞர் பெருமக்களும்; தாளிகையாசிரியர்களும், அறிக்கையாளர்களும், புலவர்களும், கல்லூரி மாணவர்களும் பெருந்திரளாக (ஏறத்தாழ *3000* பேர்) வந்திருந்தனர்.

கன்னித்திங்கள் *19*-ஆம் நாள் காரி (சனிக்)கிழமையன்று காலை மணி *8-50*க்குத் திருச்சி, தேவர் மன்றத்துத் தலைவாயிலில் தனித்தமிழ் அன்பர் அனைவரும் குழுமி, தலைவர்கள் பேச்சாளர்கள் ஆகியோர் வருகையை எதிர்நோக்கி நின்றனர்.

அவ்வமயம் மாநாட்டுத் தலைவர், மொழிநூல் முதுபெரும் புலவர் திரு ஞா. தேவநேயப் பாவாணரும், "தென்மொழி" ஆசிரியர், பாவலர். திரு. பெருஞ்சித்திரனாரும், மற்றும் பேராசிரியர்கள் திரு. சொக்கப்பனார். திரு. நிலவழகனார், திரு. மறை. திருநாவுக்கரசு, ஆகியோரும் மன்ற வாயிலினுட் புகுந்தனர். அதுகாலை, 'மொழிநூற் பெரும் புலவர் வாழ்க'' "மொழியியற் பேராசிரியர் வாழ்க!" "தனித்தமிழ் அரிமா பாவாணர் வாழ்க!" எனவும், "தென்மொழி ஆசிரியர் வாழ்க!" "பாவலர். பெருஞ்சித்திரனார் வாழ்க!" என

வும் "தனித்தமிழ்ச் செம்மல்கள் வாழ்க!" "தமிழ்ப் பெருமக்கள் வாழ்க" எனவும் தனித்தமிழ் ஆர்வலர்கள் வாழ்த்தொலிகளை முழக்கினர்.

பின்னர் அனைவரும் மன்றத்தினுட் புகுந்தனர். தலைவரும் பேச்சாளர்களும் மாநாட்டு மேடையில் வீற்றிருக்க, ஏனையோர் தமக்கு உரிய இடத்தில் அமர்ந்தனர். மாநாட்டு வரவேற்புக் குழுவினர் அறிக்கையாளர்க்கும், பார்வையாளர்க்கும், படிநிகராளியர்க்கும் (Representatives) தனித்தனி இருக்கை ஏற்பாடுகள் செய்திருந்தமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

காலை 9-மணிக்குக் குடந்தை. திரு அழகவுடையாரின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் மாநாடு தொடங்கியது. திரு. நா. செல்வராசனார், க. இ.. ப. இ. அவர்களின் வரவேற்புரைக்குப்பின், தலைவர் அவர்கள் தமது முன்னுரையில், குலம், மதம், கட்சி என்பனவற்றின் சார்பாக அன்றி, மொழியடிப்படையில் நடைபெறும் முதன் மாநாடு என்ற முறையில், தமிழக வரலாற்றில் சிறப்பிடம் பெறுதற்குரியது திருச்சி மாநாடு எனக் குறிப்பிட்டு, மாநாட்டில் தமிழன்பர்கள் திரளாகக் குழுமியிருப்பது பற்றித் தாம் பெருமகிழ்வு எய்துவதாகக் கூறினார்.

தொடர்ந்து பேசுகையில், தமிழ்நாட்டில் தமிழுணர்ச்சியும் 'தமிழன்' என்ற இனவுணர்ச்சியும் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, அஃதாவது கடைக்கழகக் காலத்திலிருந்தே குன்றிவிட்டன எனவும், அதற்கு முன்பே ஆரியர் இந்நாட்டிற்குவந்து தமிழர்களுடன் கலந்து விட்டமையே இதற்கு ஏதுவாம் எனவும், ஆரியர்கள் முதலில் அரசியல் துறையில் (அரசரை யடுத்துத்)தலைமையும், பிறகு சமயத்துறையில் (வழிபாடாற்றுவோராகத்) தலைமையும், பின்னர் குமுகாயத் துறையில் (மேற்குலத்தார் என்ற முறையில்) தலைமையும் பெற்றுப் படிப்படியாக வடமொழிச் சொற்களையும், வடவர் பழக்கவழக்கங்களையும், தமிழிலும் தமிழரிடத்திலும் புகுத்தித் தமிழர் பண்பாட்டையும் நாகரிகத்தையும் பாழ்படுத்தியதுடன், அவர்களைப் பொருளியல் துறையிலும் முன்னேற விடாமல், பிறப்பு, திருமணம், இறப்பு முதலியவற்றின் சார்பாகச் சடங்குகள் வகுத்து, அவற்றில் தலைமைதாங்கிப் பொருள் சுரண்டியும் வந்துள்ளனர் எனவும் எடுத்துக் காட்டினார். மற்றும் சமயத்துறையில், முழுமுதற் கடவுளியல்புக்குப் பொருந்தாத பழமைக் கதைகளையும், கற்பனைகளையும் நுழைத்து, மடமையை வளர்த்துப் பகுத்தறிவு வளர்ச்சியைத்

வரவேற்புக் குழுத்தலைவர்
திரு. செங்கை. செந்தமிழ்க்கிழான்
(செல்வராசனார்) வரவேற்புரை
ஆற்றுகிறார்.

தனித்தமிழ் அரிமா,
மொழிநூல் மூதறிஞர்
ஞா. தேவநேயப்பாவாணர்
அவர்கள் தலைமையேற்கிறார்.

பாவாணர்
தலைமையுரை ஆற்றுகிறார்.



'தென்மொழி' ஆசிரியர்
பாவலர் பெருஞ்சித்திரனார்
'தமிழின் வளர்ச்சிக்கான தடை'களை
விளக்குகிறார்.





மதுரைப் பேராசிரியர்
திரு. மெ. அழகனார் (சுந்தரனார்)
'தமிழ் நெடுங்கணக்கின் தோற்றம்'
என்பது பற்றிச் சொற்பொழிவு
ஆற்றுகிறார்.

திரு. ம. இலெ. தங்கப்பனார்.
'மொழிபெயர்ப்பு' என்னும்
பொருள்பற்றி உரையாற்றுகிறார்.



தடைசெய்து, தமிழர்களை என்றென்றும் அடிமைப் படுகுழியில் ஆழ்த்திவைத்துத் தாம் இட்டதைச் செய்யும் ஏவலர் ஆக்கினர் என்பதைச் சுட்டிக்காட்டினுர்.

இறுதியாக, தமிழின் விடுதலையே தமிழன் விடுதலை யென்றும், தமிழும் தமிழரும் ஆரியப் பிடிப்பிலிருந்து விடுபடுதல் வேண்டும் என்றும் குறிப்பிட்டு, கடந்த சிலத் திங்களில் சென்னையில் நடந்த உலகத் தமிழ் மாநாடு இந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் அமையவில்லை யென்றும், உண்மையான தமிழ்ப் பற்று உடையவர்களை அம் மாநாட்டிற்கு அழைக்காததே இதற்குத் தக்க சான்ருகும் என்றும் விளக்கித் தமது தலைமையுரையை முடித்தார்.

பின்னர், சேலம் நகராட்சிக் கல்லூரி வரலாற்றுப் பேராசிரியர் திரு வை, சொக்கப்பனுர் அவர்கள் "தமிழன் பிறந்தகம்" என்னும் பொருள்பற்றிய தமது சொற்பொழிவில், இந்திய வரலாற்றை எழுதியுள்ள மேனுட்டறிஞர்களுக்குப் போதிய அளவு தமிழிலக்கிய அறிவு இல்லாமையால், அவர்கள் வடமொழிப் புலவர்கள் ஆங்கிலத்தில் எழுதியிருந்த நூல்களைச் சான்ருகக் கொண்டு, இந்திய வரலாற்றைச் சிந்து, கங்கைக் கரையிலிருந்து தொடங்கினர் என்றும், அதனுல் தமிழ்கத்தைப் பற்றிய வரலாறு அவர்தம் நூல்களில் ஒருசில பக்கங்களிலே, அல்லது ஒரு பத்தியிலேயே அடங்கும் அளவிற்குச் சுருக்கப்பட்டுவிட்டது என்றும், கரிகாலன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், சேரன் செங்குட்டுவன் போன்ற பெருமன்னர்கள் தமிழகத்தில் ஆட்சி புரிந்திருந்தும், அவர்களைப் பற்றிய விரிவான செய்திகள் முந்திய வரலாற்று நூல்களில் உரிய இடம் பெறவில்லை யென்றும், இவ்வாறு தமிழரைப் பற்றியும் தமிழகத்தைப் பற்றியும் இருட்டடிப்புச் செய்யப்பட்டதனுலேயே, உலகின் முதல் மாந்தனது பிறந்தகம் எகிப்து எனவும், மெசப்படோமியா எனவும், கிரேக்க நாடு எனவும் பல்வேறுபட்ட தவருன கருத்துகள் வரலாற்று நூலாசிரியர்களிடையே உலவி வந்துள்ளன என்றும், இவை முற்றும் தவருனவை என்றும் குறிப்பிட்டார்.

மேலும் உரையாற்றுங்கால், உலகின் முதற் குடிமகன் தமிழனே எனவும், அவன் பிறந்த இடம் கடலாற் கொள்ளப்பட்ட குமரிநாடே எனவும் சுட்டிக்காட்டி, இக்குமரி நாட்டை இசுகாட்டு எலியட் (Scott Eliot) என்னும் வரலாற்ருசிரியர் 'இலெமூரியா' என்னும் பெயராலும்,

நிலநூலாசிரியர்கள் 'காண்டுவாஞ' என்னும் பெயராலும் குறிப்பிட்டுள்ளனர் எனக்கூறி, அறிஞர் திரு. இசுகாட்டு எலியட்டு என்பார் "இழந்த இலெமூரியா" (Lost Lemuria) என்னும் தமது நூலில், இப்போதுள்ள குமரிமுனைக்குத் தெற்கே பெரியதொரு நிலப்பரப்பு இருந்ததென்றும், அஃது அடிக்கடி நிகழ்ந்த நிலநடுக்கங்களாலும், அவற்றை யொட்டிய வெள்ளப்பெருக்குகளாலும் சிறு சிறு பகுதியாகத் தென்கடலில் மூழ்கி மறைந்ததென்றும், இப்பொழுது உலகின் எப்பகுதியிலும் காணப்படாத 'இலெமூர்' (Lemur) என்னும் ஒருவகைக் குரங்கினம் அங்கு வாழ்ந்து வந்ததனால் அப்பகுதியை 'இலெமூரியா' என வாலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர் என்றும், இங்குத்தான் முதல் மாந்தன் தோன்றியிருத்தல் வேண்டும் என்றும், அவன் இன்றைய தமிழரின் முன்னோன் ஆதல் வேண்டும் என்றும் கூறியுள்ளவற்றை எடுத்துக்காட்டினார்.

அடுத்து, அப் பெருநிலப்பகுதி கிழக்கே சுமத்திரா, சாவா, போர்னியோ, ஆத்திரேலியா போன்ற தீவுகளையும், மேற்கே ஆப்பிரிக்காக் கண்டத்தையும் தன்னுள் அடக்கியதாக இருந்ததென்றும், இந்தியக் காடுகளில் இன்று காணப்படும் சில மரவகைகள், பறவைகள் இத் தீவுகளிற் காணப்படுதலும், ஆப்பிரிக்காவில் 'தமிரி' என்று தங்களைக் குறிப்பிட்டுக்கொள்ளும் ஒருவகைப் பழங்குடியினர் பெயரும், அவர்கள் தங்கள் மொழியாகக் குறிப்பிடும் 'தமிளி' என்பதும் தமிழர், தமிழ்த் தொடர்புடையதாதலும் இக்கொள்கைக்குச் சான்றுகளாம் எனவும் உணர்த்தினார்.

அன்றியும், தமிழிலக்கியங்களாகிய புறநானூறு, சிலப்பதிகாரம் போன்றவற்றில் பல கடல்கோளும், மூன்று கழகங்களின் அமைப்பும் குறித்த செய்திகள் காணப்படுதல் இக் கொள்கைக்கு அரண்செய்வதாகும் எனவும் விளக்கி திரு. வின்செண்டு சுமித்து (Vincent A. Smith) திரு. நீலகண்ட சாத்திரி போன்ற வரலாற்றாசிரியர்களின் மேற்கோள்களுடன் உரை நிகழ்த்தினார்.

இதன்பின் இடைவேளை யுணவிற்காக மாநாடு கலைந்தது.

பிற்பகல் மூன்றுமணியளவில் மீண்டும் மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கப்பெற்றன.

முதலில், காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரித் துணை முதல்வரும், தலைமைத் தமிழ் விரிவுரையாளருமான, பேராசிரியர் திரு. கோ. நில

வழகனுர் (இராமச்சந்திரனுர்) "திருவள்ளுவர் காலம்" என்னும் பொருள்பற்றிப் பேசினுர். அப்பொழுது, திருவள்ளுவர் காலத்தைச் சில ஆராய்ச்சியாளர்கள் (திரு. சு. வையாபுரியார் போன்றவர் கள்) கி, பி. ஐந்தாம் நூற்ருண்டு எனவும், பத்தாம் நூற்ருண்டு என வும் கூறுவதைக் குறிப்பிட்டு, அவர்தம் கூற்றுகள் போதிய சான்று களில்லாதவை யென மறுத்து, திருக்குறட் சொற்களும், கருத்துகளும் கடைக்கழக இலக்கியங்களிற் காணப்படுதல் கொண்டு, வள்ளுவர் காலத்தைக் கி மு. 5-ஆம் நூற்ருண்டளவு முன்னர்க்கொண்டு செல் லுதல் கூடுமெனினும், காலஞ்சென்ற பேராசிரியர் திரு. மறைமலை யடிகளாரின் கருத்திற்கு உடன்பட்டுக் கி. மு. முதல் நூற்ருண்டே (கி. மு. 31) திருவள்ளுவர் காலம் எனத் தாம் முடிவுகட்டுவதாகச் சான்றுகளுடன் விரிவுரை நிகழ்த்திஞர்.

பின்னர், "தென்மொழி" ஆசிரியர், பாவலர். திரு. பெருஞ்சித் திரனுர் அவர்கள், "தமிழ் வளர்ச்சிக்கான தடைகள்" என்பது பற்றிப் பேசுங்கால், "இந்திய வரலாறு" (History of India) தமது நூலில் வரலாற்ருசிரியர் திரு. வி. ஏ. சுமித்து (Vincent A. Smith) 'திரா விட மொழிகளிற் சிறந்த புலமையுடைய வரலாற்ருசிரியர் ஒருவர் எழுதுகின்ற இந்திய வரலாறே உண்மையான, பிழையற்ற இந்திய வரலாருக இருத்தல் இயலும்' என்று கூறியிருத்தலைக் குறிப்பிட்டு, அத்தகைய தகுதி முழுவதும் வாய்ந்துள்ள திரு. பாவாணர் அவர் களின் தலைமையில் தமிழ் வரலாற்று மாநாடு நிகழ்வது குறித்துத் தாம் பெரிதும் மகிழ்வுறுவதாகக் கூறினுர்.

அடுத்து, இன்றைய தமிழகத்தில் கல்வித்துறையிலும், அரசியல் துறையிலும், சமயத்துறையிலும், குமுகாயத்துறையிலும் தமிழ்வளர்ச் சிக்குத் தடைகள் மலிந்திருப்பதைத் தொகுத்துச்சுட்டி, தொடக்கப் பள்ளியில் தமிழ் கற்கப் புகும் இளஞ்சிருர்க்கு, வடமொழித் தொடரா கிய 'அரிநமோத்து சிந்தம்' என்பதே முதலிற் கற்பிக்கப்படுகிறது என்றும், அவர்கள் படிக்கும் சுவடியும் அத்தொடரை யொட்டி "அரிச் சுவடி" எனக் குறிக்கப்படுகிறது என்றும், மற்றும் உயர்நிலைப்பள்ளி களில் தமிழ் பயிற்றும் (புலவர். பொன்னம்பலனுரைப் போன்ற) ஆசி ரியர்கள் தங்கள் மனத்தில் உண்மையெனப் படும் கருத்துகளை மாண வர்களுக்கு எடுத்துச் சொல்வதற்குத் தலைமையாசிரியர்கள் தடையாய் உள்ளனர் என்றும், கல்லூரி நிலையிற் பார்க்கும் பொழுது, தமிழ் வாயி

லாகப் படித்துப் பட்டம் பெறுவோர்க்கு அரசினர் அலுவல்களோ, ஏனைய பணிகளோ கிடைத்தல் அரிதாக இருக்கிறது என்றும், பல் கலைக்கழகங்களில் பன்மொழி வல்லுநரான பாவாணரைப் போன்ற சிறந்த ஆராய்ச்சியாளர்களுக்கு உரிய இடம் அளிக்கப்படாமலிருப்பதுடன், அறிவும் திறமையும் குறைந்தவர்கள் ஆரியரின் அடிவருடிகளாக இருத்தலால் உயர்ந்த பதவிகள் அளிக்கப்படுகின்றனர் என்றும், சமயத்துறையில் தமிழ் வழிபாட்டுக்கும், திருமணம் போன்ற சடங்குகட்கும் உரிய மொழியன்றெனப் புறக்கணிக்கப் படுகிறதென்றும். குமுகாயத்துறையில் தமிழ்நாட்டுத் தாளிகைகள் வடமொழிச் சொற்களையும், கருத்துகளையும் வரம்பின்றிக் கலந்து எழுதிவருகின்றன என்றும், எடுத்துக்காட்டாக, மதுரையிலிருந்து வெளிவரும் "தினமணி" ஏடு (மாணவர் தலையீட்டிற்குப்பின்) "ஸ்ரீ" என்னும் சொல்லைக் கைவிட்டுத் "திரு" என்னும் சொல்லைக் கையாளவும், சென்னைத் "தினமணி" இன்னும் "ஸ்ரீ"யையே பயன்படுத்துவதைக் குறிப்பிடலாம் என்றும், செந்தமிழ் வளர்த்த தென்மதுரை நகரிலே, தெருப் பெயர்களும் கடைப்பெயர்களும் (விதிவிலக்காகக் குறிப்பிடுவதற்குக் கூட ஒரு தமிழ்ப்பெயர் இல்லாத வகையில்) பிறமொழிப் பெயர்களாகவே காணப்படுகின்றன வென்றும், இப்போது வெளிவரும் தமிழ்த் திரைப்படங்களில் உரையாடல்களும் பாடல்களும் வடமொழிச் சொற்களும் கொச்சைச் சொற்களும் பெரிதும் விரவப்பெற்றுந் தமிழர் பண்பாட்டுக்கொவ்வாத முறையில் அமைந்துள்ளன வென்றும் வகுத்துக் காட்டினர்.

மேலும் உரை நிகழ்த்துங்கால், தமிழரிடையே 'தமிழன்' என்ற இனவுணர்ச்சி மழுங்கிப்போனதே இத்தகைய சீர்கேடுகளுக்கு ஏதுவாம் எனக் குறிப்பிட்டு, தமிழர் தம்மை எஞ்ஞான்றும் எவ்விடத்தும் குலப்பெயர் பற்றிக் குறிப்பிடாமல், தமிழர் என்றே குறித்தல் வேண்டும் எனவும், நடுவண் அரசு மீண்டும் இந்தியைப் புகுத்த மேற்கொள்ளும் நடவடிக்கைகளைத் தமிழ்மக்கள் ஒன்றுபட்டு எதிர்த்தேயாதல் வேண்டும் எனவும், அவ்வெதிர்ப்பைப் பொருட்படுத்தாது இந்திய அரசு செயல்பட முனையுமாயின், தனித்தமிழ்நாடு பெற முயலுதல் வேண்டும் எனவும், மாநாடுகள் கூட்டித் தீர்மானங்கள் நிறைவேற்றுவதால்மட்டும் உண்மையான பயன்கள் விளையமாட்டா; ஆதலின் வினையாண்மையும் செயல்-திறமும் வேண்டும் எனவும் அழுத்தந் திருத்தமாக அறிவுரை பகர்ந்தார்.

பிறகு, மதுரைப் பேராசிரியர் திரு. மெ. அழகனுர் (சுந்தரனுர்) அவர்கள் "தமிழ் நெடுங்கணக்கின் தோற்றம்" என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினுர். அவர், சிந்துவெளியிற் கண்ட கல்வெட்டெழுத்துகளோடு தமிழ் எழுத்துகள் பெரிதும் ஒத்திருத்தலைத் திரு. ஈராசு பாதிரியார் குறிப்பிட்டுள்ளார் என எடுத்துக்காட்டி, அவ்வாற்ருல் தமிழ் எழுத்துகளின் தோற்றம் கி. மு. 5000க்கு முந்தியதென்றும், சென்னையில் நிகழ்ந்த உலகத் தமிழ் மாநாட்டில் திரு. ஐராவதம் மகாதேவன் கூறியதுபோல் கி. மு. மூன்ருண்டுக்குப் பிற்பட்டதன்று என்றும் விளக்கிப் பேசினுர்.

மாலை மணி 6–30 அளவில் இரவு உணவின் பொருட்டு மாநாடு கலைந்தது. பின்னர், இரவு 8-மணி அளவில் முதல்நிகழ்ச்சியாகத் திரு. அழகவுடையாரின் இசையரங்கு நடந்தது. அடுத்து மணி 8–30 முதல் 10-மணி வரையில் புலவர். திரு. நெறிமுடியார் அவர்கள், பாவேந்தர் பாரதிதாசன் இயற்றிய இன்னிசைப் பாடல்களைப் பாடினுர். அத்துடன் முதல்நாள் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

இரண்டாம்நாள் (6–10–68 ஞாயிறு) முற்பகல் நடந்த கூட்டத்தில், தலைவர் முன்னுரைக்குப் பின், திரு. ம. இலெ. தங்கப்பனுர், க. மு., ப. இ. அவர்கள் "மொழிபெயர்ப்பு" ன்னும் பொருள்குறித்துப் பேசிய பொழுது, ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்ப்புச் செய்தலைவிட, தமிழிலிருந்து ஆங்கிலத்தில் ஒரு கருத்தை மொழிபெயர்த்தல் அரிது என்றும், கற்பு, நொதுமல் போன்ற தமிழ்ச்சொற்களுக்கு இணையான ஆங்கிலச் சொற்களைக் காண்டல் இயலாதென்றும் மற்றும் பல சிறந்த கருத்துகளையும் பேசினுர். (இவருடைய முழுச் சொற்பொழிவின் சுருக்கத்தைப் பிறிதோரிடத்தில் காண்க.)

பின்னர், "தமிழ்த்தூய்மை" என்பதுபற்றிப் பேராசிரியர். திரு. மறை. திருநாவுக்கரசு அவர்களும், "பெண்டிர் தமிழ்த்தொண்டு" என்பது குறித்துப் பாவை ஆசிரியர். திரு. இறைக்குருவனுர் அவர்களும், "மாணுக்கன்" இதழ்பற்றிப் புலவர். திரு. பழனிவேலனுரும், "தமிழ்வளர்ச்சித்திட்டம்" பற்றிப் புலவர். திரு. முத்துக்குமாராண்டாரும், "தமிழர்நலன்" குறித்துத் திரு. அருளனுரும், "தமிழ்ப் புலவர் கடமை" பற்றித் திரு. பொன்னம்பலனுரும் உரைநிகழ்த்தினர். (இவர்களின் பேச்சுகள் பற்றிய விளக்கங்கள் தனித்தனியே தரப்பட்டுள்ளன.)

பிறகு மணி 1-15க்குக் "குறள்நெறி" ஆசிரியர். திரு. மறைமலை (பேராசிரியர் திரு. இலக்குவனாரின் மகனார்) "மாணவர் தமிழ்த் தொண்டு" பற்றிப் பேசிய பொழுது, பெரும்பான்மையான பேராசிரியர்கள் அவ்வப்போது ஆட்சிபுரியும் அரசியற் கட்சிகளுக்குச் சார்பாக இருந்து பதவியுயர்வு பெறுதலிலேயே நாட்டம் கொண்டுள்ளனர்; இத்தகையோரிடம் முழுமையான தமிழ்த்தொண்டு எதுவும் எதிர்பார்த்தல் இயலாது என்றும், மதுரையில் தெருப்பெயர்கள் தமிழில் வரையப் படவில்லை என்று பாவலர் திரு. பெருஞ்சித்திரனார் குறிப்பிட்ட குறையை நீக்க மதுரைத் தியாகராயர் கல்லூரி மாணவர்கள் முயல்வர் என்றும், அடுத்த தடவை அவர் மதுரைக்கு வரும்பொழுது குறைந்த அளவு இரண்டு தெருக்களிலேனும் முழுக்க முழுக்கத் தமிழ்ப் பெயர்களைக் காணுதல் கூடும் என்றும், மொழிப் புரட்சியில் என்றும் முன்னிற்பவர்கள் மதுரைநகர் மாணவர்களே என்றும் குறிப்பிட்டு, மதுரைப் பல்கலைக்கழகக் கண்காணகர் திரு. தெ. பொ. மீ. அவர்களை மதுரை மாணவர்கள் விரைவில் பதவியிலிருந்து விலகச் செய்வர் என உறுதிகூறினார். மேலும், அடுத்து நடைபெறும் 2-ஆம் உலகத் தமிழ்க் கழக மாநாட்டை மதுரையில் நடத்தத் தமக்கு இசைவு தருதல் வேண்டுமென்று, தலைவர் அவர்களைக் கேட்டுக்கொண்டு தமது உரையை முடித்தார்.

அவரையடுத்துத் திரு இளவழகன், திரு. நிலவழகன் ஆகிய மாணவர்கள் பேசினர்.

பின்னர் நண்பகல் உணவின் பொருட்டுக் கூட்டம் கலைந்தது.

பிற்பகலில், திருவாட்டி. தாமரை–பெருஞ்சித்திரன் அவர்கள் 'பொதுத்தொண்டில் குடும்பத் தலைவியரின் பங்கு" என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்தினார்

அவர், ஆடவர் பேரளவில் கூடியிருக்கும் மாநாட்டிற்குப் பெண்டிர் நான்கைந்து பேரே வந்திருத்தல் மாநாட்டிற்கே பெருங்குறையாகும் என்றும், அங்ஙனம் வராதது பெண்டிர் பிழை அன்று; அவர்களை அழைத்து வராத ஆடவர்தம் தவறே எனவும், திரைப்படங்களுக்கும் திருவிழாக்களுக்கும் தத்தம் குடும்பத்துப் பெண்பாலாரைப் பகட்டுடை உடுக்கச் செய்து, பொன்னணிகள் பூணச்செய்து, உடன் அழைத்துச் செல்லுதலில் உவகை கொள்ளும் ஆடவர், இத்தகைய அறிவு வளர்ச்சி நிலையங்களுக்கு அவர்களை அழைத்து வராதது, பெண்கள் முன்னேற்

'பாவை' ஆசிரியர்
திரு. இறைகுருவனார்
'பெண்டிர் தமிழ்த்தொண்டு'
என்பதுபற்றிப் பேசுகிறார்.



'மாணுக்கன்' ஆசிரியர்
திரு. வி. பொ. பழனிவேலனார்
தனித்தமிழ்த் தாள்கள் குறித்து
உரை நிகழ்த்துகிறார்

தமிழ்க்குடிமகன்
திரு. மு. சாத்தையா
'இன்றையத் தமிழர்கடமை'
என்பதுபற்றி உரையாற்றுகிறார்.



பேரா. திரு. வை. சொக்கப்பனார்.
'தமிழன் பிறந்தகம்' பற்றி
உரையாற்றுகிறார்.



தமிழ்மறவர்.
புலவர் பொன்னம்பலனாரைப்
பாராட்டி வெண்பட்டாடையைப்
பாவாணர் அவர்கள் போர்த்துகிறார்

திருவாட்டி.
தாமரை. பெருஞ்சித்திரன்
"பொதுத்தொண்டில் குடும்பத்
தலைவியரின் பங்கு" என்னும்
தலைப்பில் பேசுகிறார்.



றத்தில் அவர்கட்குக் கருத்தின்மையையே காட்டுகிறது என்றும், இஃது ஒருவகைப் பெண்ணடிமைக் கோட்பாடே என்றும், இந்நிலை மாறிப் பெண்டிரும் சம அளவில் பொதுத்தொண்டில் பங்கு கொண்டாலன்றித் தமிழகத்தில் மறுமலர்ச்சி காணுதல் இயலாதென்றும் பொதுத் தொண்டென்பது தம்மைத் தாமே அப்பணிக்கு முழுவதும் ஒப்படைத்து விடுதலே என்றும் தமது சொற்பொழிவிற் குறிப்பிட்டார்.

பாவாணர் தம் பேச்சுக்கிடையில் தென்மொழி யிதழ் தமிழகத்திலும், வெளிமாநிலங்களிலும், கடல்கடந்த நாடுகளிலும் உள்ள மாணவர்களிடத்தும், ஆசிரியர்களிடத்தும், தமிழன்பர்களிடத்தும் ஆழ்ந்த தமிழுணர்ச்சியைக் கடந்த ஆறேழு ஆண்டுகளாக ஊட்டிவந்ததைக் குறிப்பிட்டு, இத் தனித்தமிழ் இயக்கம் இவ்வளவு விரைந்து எங்கணும் பரவுவதற்கு அதுவே காரணமாக நின்றது என்றும் பாராட்டியதை ஈண்டுக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

இனி, நிகழ்ச்சி நிரலிற் பெயர் குறிப்பிடாத சிலரும் மாநாட்டிற் கலந்துகொண்டு, சிறப்பாகச் சொற்பொழிவாற்றியது சுட்டத்தக்கதொன்றாகும். முதல்நாள் நிகழ்ச்சிகளின் இடையே தென்மொழியின் முன்னாள் துணையாசிரியர் திரு. சாத்தையா, க. மு அவர்கள் பேசிய பொழுது, தமிழுக்காகப் பாடுபட விரும்புகின்றவர்களிற் பலர் உண்மையான தமிழ்ப் பற்றுடையவர்களாக இருப்பதில்லை யென்றும், பாரதிதாசனின் புலமையையும் தமிழார்வத்தையும் முன்னர்ப் பழித்துப் பேசிய ஒருவர் உலகத் தமிழ் மாநாட்டில் பாவேந்தரின் பெருமை குறித்து வானளாவப் புகழ்ந்து பேசினார் என்றும், இத்தகைய போலிகளே தமிழ்ப்பணித் துறையில் மலிந்துள்ளனர் என்றும் கூறினார்.

இரண்டாம்நாள் நடந்த நிகழ்ச்சிகளில் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தது, தமிழ்க்கழக மாநாட்டுச் சார்பாக அதன் தலைவர் மொழிப் பேரறிஞர் திரு. பாவாணர் அவர்கள், மெய்ம்மையான தமிழ்த்தொண்டால் பரவலாகத் தனித்தமிழ் உணர்ச்சியைப் பரப்பி வந்தவரும், ஆரிய எதிர்ப்பு உணர்ச்சியை மாணவர் உள்ளங்களில் வித்திட்டவரும், இவற்றால் பற்பல தொல்லைகளையும், இழப்புகளையும், இகழ்ச்சிகளையும் தாங்கிக் கொண்டவரும் ஓய்வுபெற்ற தமிழாசிரியருமான பொன்னம்பலனார் அவர்களைப் பாராட்டி, வெண்பட்டாடை போர்த்திய

தாகும். அப்பொழுது மாநாட்டிற் கூடியிருந்த தமிழ் அன்பர்கள் அனைவரும் பேருவகையுடன் கைதட்டி, ஆரவாரித்தனர்.

இரண்டாம் நாள் பேசிய, சட்டக்கல்லூரி மாணவர், இந்தி எதிர்ப்பு மறவர் திரு. காளிமுத்து அவர்கள், தமிழின் நலத்துக்கான ஆக்கப் பணிகளைச் செய்வதில் அரசின் உதவியைத் தாம் எதிர்பார்ப்பதாகவும், அங்ஙனம் அரசு செய்யாவிடில் மக்களேதமிழ் வளர்ச்சிக்கான தொண்டுகளில் முழு முயற்சியுடன் ஈடுபடுவதையே தாம் விரும்புவதாகவும், மொழி வளர்ச்சிக்கான ஒரு கருவிதான் அரசே யன்றி, அரசின் முன்னேற்றத்துக்கான கருவியாக மொழியைக் கருதுதல் தவறெனத் தாம் எண்ணுவதாகவும் குறிப்பிட்டார்.

பிறகு, பல தீர்மானங்களுக்கிடையில் தமிழ்க்கடல் மறைமலையடிகள் பெயரால் தனித்தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்படுதல் வேண்டும் என்ற சிறந்ததொரு தீர்மானமும் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. அத்துடன் மாநாட்டுத் தீர்மானங்களைச் செயற்படுத்தத் திரு. தேவநேயப் பாவாணர் அவர்களைத் தலைவராகவும், திரு. மெ. அழகனார் அவர்களைத் துணைத்தலைவராகவும், திரு. பெருஞ்சித்திரனார் அவர்களைப் பொதுச் செயலாளராகவும், திரு. இறைக்குருவனார் அவர்களைத்துணைச் செயலாளராகவும், திரு. நா. செல்வராசனார் அவர்களைப் பொருளாளராகவும் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. மாவட்டத் தமிழ்க்கழகங்களின் தலைவர்களும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

பின்னர், தலைவரது முடிவுரை நிகழ்ந்தது. இறுதியாகப் புலவர். திரு. சேந்தமாங்குடியார் நன்றிகூற, மாநாடு இனிதே முடிவுற்றது.

பொதுவாகக் கூறின், இம் மாநாடு தமிழக வரலாற்றில் சிறப்பிடம் பெறத்தக்க ஒன்றெனலாம். ஏனெனில் குல, மத, கட்சி வேறுபாடின்றித் தமிழர் என்ற மொழியுணர்ச்சி அடிப்படையில் நடத்தப் பெற்ற முதல் மாநாடு இதுவேயாம் ஆதலின் என்க. அடுத்து, இம் மாநாட்டில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதியிலிருந்தும், (நீலமலை உட்பட, வடக்கே செங்கழுநீர்ப்பட்டு மாவட்டம் முதல் தெற்கே குமரி மாவட்டம் வரையில் உள்ள) தனித்தமிழ் அன்பர்கள் கலந்து கொண்டதும் குறிப்பிடத் தக்கது. புன்செய்ப் புளியம்பட்டி மறைமலையடிகள் மன்றம், அவிநாசி திரு. வி. க, மன்றம், பாளையங்கோட்டை தனித்

தமிழ் மன்றம், உரத்தநாடு தொல்காப்பியர் மன்றம், செங்கழுநீர்ப்பட்டு தனித்தமிழ் மன்றம், நெய்வேலி மூத்தமிழ் மன்றம் போன்ற பல்வேறு தமிழ் மன்றங்களின் படிநிகராளியர் (Representatives) மாநாட்டிற் கலந்து கொண்டனர்.

மாநாட்டுப் பந்தலில், சுமேரிய, இந்து-ஐரோப்பிய மொழிகளிற் கலந்துள்ள தமிழ்ச் சொற்களின் பட்டியலும், "தென்மொழி"யில் வெளி வந்த சிறந்த கருத்துகள் கொண்ட தொடர்கள் பொறித்த அட்டை களும் தொங்கவிடப்பட்டிருந்ததும், சிந்து சமவெளியில் கண்டுபிடிக் கப்பட்ட பொருள்களில் திரவிட நாகரிகத்தை யுணர்த்துவன பார்வை யாளர்களின் காட்சிக்கு என வைக்கப்பட்டிருந்ததும் பாராட்டத் தக்கனவாகும்.

இம் மாநாட்டை நடத்துதற்கான செயல்களில் பெரும்பங்கு கொண்டு, தம் உழைப்பையும் பொருளையும் ஒருங்கு நல்கிப் பெருந் தொண்டு புரிந்தவர்கள் திருச்சி தனித்தமிழ் அன்பர்களும், ஊரகத் தைச் சேர்ந்த தென்மொழி யன்பர்களும் ஆவர். இவர்கள் மாநாட்டுத் தலைவர், சொற்பொழிவாளர்களையும் மற்ற விருந்தினர்களையும் வர வேற்பதிலும், அவர்களுக்கு உணவு, உறைவிடம் போன்ற ஏந்து களைச் செய்து கொடுப்பதிலும் காட்டிய ஆர்வம் வியந்து புகழத்தக்க தொன்றாகும். இவர்களில் திரு. எழிலரசன் [சுந்தரராசன்] திரு. நாரா. மகிழ்நன் [நித்தியானந்தம்] திரு. சானகிராமன், திரு. பிச்சுமணி, திரு. அ. செல்லத்துரை, திரு. மு வ. பரமசிவம், திரு. ஆ. பழ. குமரப் பன், புலவர். சேந்தமாங்குடியார் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர்.

இம்மாநாடு சிறப்புற நிகழ்ந்து, வெற்றியுடன் முற்றுப்பெறப் பல்லாற்றானும் அரும்பாடுபட்டுத் தொண்டாற்றிய திரு. நா. செல்வ ராசனார் அவர்களுக்கும், மாநாட்டுத் தலைவர், பேச்சாளர்களின் ஒளிப் படங்களை அனுப்பி யுதவிய, தலைமலைப்பட்டி அரசினர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் திரு. ஆ. துரைசாமி அவர்களுக்கும், தென்மொழி சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்வதுடன் இக் கட்டுரையை முடிக் கின்றேன்.

—தென்மொழிப் பார்வையாளர்: கு. ஐந்தெழுத்தன்.

தமிழ்த் தூய்மை.

(தனித்தமிழியக்கத் தந்தை உயர்திரு. மறைமலையடிகளின் திருமகனார், பேரா. மறை. திருநாவுக்கரசு அவர்கள் கன்னி 20-ஆம் பக்கல் (6.10.68) அன்று தமிழ்க்கழக அமைப்பு மாநாட்டில் ஆற்றிய உரைச்சுருக்கம்.)

செந்தமிழ் வளர்க்கும் அரும் பெறல் தலைவர் அவர்களே! தமிழ் வாழ்வே நம் வாழ்வென்னும் பேருணர்ச்சியுடன் குழுமியிருக்கும் தமிழ்ப் புலவர்களே! அன்பர்களே! அனைவீருக்கும் என் உளமார்ந்த வணக்கங்கள் உரியன வாகுக.

எனக்குப் பேசுதற்குத் தரப்பட்ட பொருள் "தமிழ்த்தூய்மை" என்பதாகும். 'தண்ணார்தமிழ்' என்று மாணிக்கவாசகராலும் 'பண்ணாரின் தமிழ்' என்று நம்பியாரூரராலும் போற்றப்பட்ட நம்மருமைத் தமிழ் மொழியில் ஆரியம், ஆங்கிலம் முதலிய பிற மொழிச் சொற்கள் சேர்க்கப் படுவதால் நம் தமிழ் தன் தூய்மையை இழக்கும். அது பற்றிச் சிறிதாராய்வோம். உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் மக்கள், தத்தம் நாட்டின் தட்பவெப்பநிலை, உடல்நிலை, பழக்க வழக்கங்கள், பண்பு, நாகரிகங்களுக் கேற்பச் சொற்களையும், ஒலிகளையும் இயற்கையாகப் பெற்றுள்ளனர். எடுத்துக் காட்டாகத் தமிழகத்தில் தொண்டை, சேர, சோழ, பாண்டி, கொங்கு நாடுகளில் வாழும் நந்தமிழ் மக்களி

டையேகூடத்தமிழ்ச்சொற்களிலும், ஒலிகளிலும் சிறுசிறுமாறுபாடுகள் காண்கின்றன அல்லவோ? இங்கேயே இப்படி இருக்க, வேற்றுநாட்டு இன, மக்கள் பேசும் வேற்று மொழிகளின் சொற்களும், ஒலிகளும் நம் மொழிக்கு எத்துணை வேறுபட்டிருக்கு மென்பதை எண்ணிப்பாருங்கள்!

இவ்வாறு மாறுபட்ட சொற்களும், ஒலிகளும் உள்ள மொழிகள் ஒன்றோடொன்று கலப்பதால் திகைப்பு, அருவருப்பு, இனிமைகுன்றல், விளங்காமை, நகைப்பு, புதுமை உணர்வு முதலியன தோன்றி இயல்பான உணர்வு நிலைமாறி மக்கள் விருப்பு வெறுப்புக்காளாகின்றனர். மேலும் மொழிகள், குறிப்பிட்ட வாய்பாடுகளில் ஒலிக்கும். அவ்வாய்பாடுகளுக்கேற்பச் சொற்கள், தொடர்கள் அமையும். இவ்வாறு வடமொழி, தெலுங்கு, மலையாளம், ஆங்கிலம் போன்றனைத்து மொழிகளும் இயங்கும்.

தமிழர் ஒருவர் ஆங்கிலம் பேசினால் அதனை அவர் தந் தாய்மொழியின் வாய்பாடு ஒலியமைப்பிற்றான் பேசுவர். அது கண்டு ஆங்கிலேயர் அருவருப்பர். இவ்வாறே ஆங்கிலேயர் தமிழைத் தம் மொழியின் வாய்பாடு, ஒலிகளுக்கேற்பத்தான் பேசுவர். இதுகண்டு நாம் நகையாடுவோம். இவ்வியல்பு எல்லா மொழியாளர்க்கும் பொதுவாகும். இம்முறையில் ஒரு மொழியில் பிறமொழிச் சொற்களைக்கலப்பதால் வேறுபட்ட ஒலிகளைக்கண்டு நகைப்பேற்படுகின்றது. காரணம், ஒரு மொழியின் ஒலி, ஓசைகள் ஏனைய மொழியின் ஒலி, ஓசைகளில் இயல்பாகக் கலவாமையேயாம். கலந்தால் இனிய உணவுண்ணுங்காற் கற்கறித்தது போன்ற வெறுப்புணர்வுண்டாம். ஆகவேதான், ஆங்கிலம், வடமொழி முதலிய மொழிகள் நம் தமிழ்மொழிச் சொற்களைத் தம் நூல்களிலும் தாள்களிலும், உரையாடல்களிலும் சேர்த்துக்கொள்வதில்லை. அப்படிச் சேர்த்துக்கொண்டால் அரிசியை 'ரைஸ்' என்றும், மாலையை 'மாலா' என்றும் தம்மொழி அமைப்பிற்கேற்ப மாற்றிக்கொள்ளும். அப்படிச் சேர்க்குஞ் சொற்கள் அம்மொழிகளில் ஆயிரத்தில் ஒன்றாக இருக்கும். பிற மொழிச் சொற்களைச் சேர்த்துக் கொள்ளாமலிருப்பதே தம்மொழி இனிமை குன்றாதிருத்தற்காம் தூய்மையான வழி என்று அம் மொழியாளர்களும், பிறமொழியாளர்களும் கருதுகின்றனர்; கடைப்பிடிக்கின்றனர். அது தவறன்று; பொருந்தியதே. இஃதுணர்ந்தே ஆங்கில-வடமொழிப் பித்தர்களான-உடன் பிறந்தே கொல்லும் நோய்களான நம் தமிழர்களிற் பலர் ஆங்கிலம் வடமொழி முதலியவற்றில் தமிழ்ச் சொற்களைச்சேர்ப்பதில்லை. ஆனால் இவர்கள் தமிழில்

மட்டும் ஏராளமான ஆங்கில, வடமொழிச் சொற்களைத் தமிழ் ஒலி முறைக்கேற்ப மாற்றாமல் அம்மொழிகளின் ஒலியிலேயே, எழுத்துகளிலேயே சேர்த்து வருகின்றனர். இவ்வாறு சேர்த்தலே தமிழ் வளர வழி என்று இவர்களில் ஒரிருவர் உண்மையாகக் கருதுவார்களாயின் அவர் இரங்கத்தக்கவரே யாவர். பெரும்பாலான ஆங்கில வடமொழிப்பித்தர்கள் வெளிக்குத் தமிழ்வளர என்று பொய்கூறி உள்ளுக்குள் தமிழை அழித்தொழித்து ஆங்கில, வடமொழி ஆக்கங்களையே வளர்த்தல் வேண்டுமென்னுங் குறிக்கோளுடையவர்களே! இப்படித்தான் சேர நாட்டில் வடசொற்களைத் தமிழிற் புகுத்தி அதை மலையாள மாக்கினர்; தமிழ் மொழியை அங்கழித்தனர்.

இவ்வுண்மைகளை உணருங்கால் தமிழ் தன் தூய்மையை இழக்காதிருக்கவும் பிறமொழிச் சொற்களை, ஒலிகளை, எழுத்துகளைத் தன்பால் ஏற்கலாகாது என்பது வெள்ளிடைமலையன்றோ?

இதனை மறுக்கும் ஆங்கில, வடமொழியாளர்கள் தம் மொழிகளில் தமிழ்ச்சொற்கள், ஒலிகள், எழுத்துகளை எடுத்தாள்கின்றார்களா? ஆங்கிலேயர்கள் இருக்கட்டும். நம் தமிழ்நாட்டில் தம்மையே ஆங்கிலராகத், தம் தாய்மொழியே ஆங்கிலமாகக் கருதும் 'இந்து' 'இந்தியன் எக்சு பிரசு' முதலிய செய்தித்தாளாசிரியர்களும், தாள்களும் வெள்ளையர்க்கேற்ப, ஆங்கில மொழிக் கேற்பத் தமிழ்ச் சொற்களில் பொன்மலையை "கோல்டன் ராக்" என்றும், தாமோதர முதலியாரை "டாமோடர் முதலியார்"என்றும், கலைக்கழகத்தைக் "கல்ச்சரல் சொசைட்டி" என்றும் மாற்றியன்றோ வழங்குகின்றனர், வழங்குகின்றன?

அம் முறையைப் போற்றும், தினமணி, ஆனந்தவிகடன், கல்கி போன்ற தமிழ்த் தாள்கள் யாதாமோர் ஆங்கில நகரின் பெயரைத் தமிழில் மொழி பெயர்த்தா கூறுகின்றன? ஷேக்ஸ்பியர் என்ற ஆங்கிலர் பெயரைத்தமிழ்ஒலிக்கேற்ப 'சேக்சுப்பியர்'என்றா எழுதுகின்றன? இங்கிலீஷை, இங்கிலீசு என்றா சொல்கின்றன? நுண்கலைக்கழகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக்கொண்டு 'பைன் ஆர்ட் சொசைட்டி' என்றன்றோ கூறுகின்றன! ஒரு நாட்டிற்கே உரியதாயுள்ள பொருட்பெயரான 'ஆப்பிள்' 'பார்லி' போன்ற பெயர்களைத் தமிழ் அப்படியே எடுத்தாள்வது போல மிளகுத்தண்ணீர், கட்டுமரம் போன்ற சிலதமிழ்ச் சொற்களை ஆங்கிலம் எடுத்தாள்வதை ஆங்கிலப் பித்தர்கள் எடுத்துக் காட்டித்தமிழார்வத்தினரை நோக்கிப் 'பாருங்களய்யா, ஆங்கிலம் இச்

சொற்களை எடுத்தாளவில்லையா? ஆதலால் நாமும் ஆங்கிலச் சொற்களை எடுத்தாள்வதில் தவறில்லை" என்று அழிவழக்குப்பேசுவர். மொழி பெயர்க்கக் கூடாத ஒரு நாட்டுக்கே உரிய இப்பண்டங்களை ஊர்ப்பெயர்களை, மக்கட்பெயர்களை அப்படியே எம்மொழியினரும் எடுத்தாளலாம். தவறில்லை. ஆனால், இம்முறைக்கு மாறாகத் தமிழ்ச் சொற்களிருக்க, அவற்றை விட்டு அவற்றிற்கு நேரான ஆங்கிலச் சொற்களை வழக்கில் கொண்டுவந்து ஆங்கிலப் பித்தர்கள் நாள்நாளுந் தமிழ்ச் சொற்களை, தமிழ்த்தாயைக் கொலைசெய்து வருகின்றனர். இதே போன்ற கொடுமையைத் தமிழுக்கு வடமொழிப்பித்தர்கள் பண்டு தொட்டுச் செய்து வருவது உலகறியும். இப்படி வடமொழி, ஆங்கிலப் பித்தர்கள் தமிழ் மொழியை உருத்தெரியாமல் அழித்து விட்டார்கள். அழித்துக் கொண்டிருக்கிறார்கள். வடமொழிப்பித்தர்கள், தில்லை, திருமறைக்காடு, திருவரங்கம், முதலிய ஊர்களைச் சிதம்பரம், வேதாரணியம், ஸ்ரீரங்கமாக்கி விட்டார்கள். தாய், தந்தை. உடன்பிறந்தாரை மாதா, பிதா, சகோதரராக்கி விட்டனர். சமயத்துறையில் உள்ளம், உரை, உடலை, மனை, வாக்குக் காயங்களாக்கி விட்டனர். இப்படிப் பலதுறைச் சொற்களிலும் ஆயிரம் ஆயிரம் தமிழ்ச் சொற்களை அழித்தே விட்டனர். அதேபோல்தான் இன்று ஆங்கிலப்பித்தர்கள் "தபால் தந்தி இலாக்கா ஊழியருக்கு டிஸ்மிஸ் நோட்டீஸ்" "யூனியன் நிர்வாகிகள் கைது" "சதர்ன் இண்டஸ்ட்ரீஸ்" என்று ஆங்கிலம், உருது முதலிய சொற்களைத் தம் தாள்களிற் கலந்தெழுதுகின்றனர். இது போலப் பல துறைகளிலும் ஆயிரம், ஆயிரம் தமிழ்ச் சொற்களை அழித்துப் பிறமொழிகளை அவ்விடத்தில் அமர்த்து கின்றனர். தமிழ்ச் சொற்களுடன் தமிழ் ஒலிகளையும் ஆங்கில ஒலிகளுக்கேற்ப மாற்றி விடுகின்றனர். மானமும், உரிமையுணர்வுமுடைய எந்த இனத்தவரேனும் இவ்வாறு அடிமையுணர்வில் மகிழுங் கயவர்களாக இருப்பார்களா? இந்தி, வடமொழிச் சொற்கள்—ஆக்கங்களை ஒழிக என்பார் ஆங்கிலத்திற்கு மட்டும் தமிழை அடிமைப்படுத்தலாமா? அம் மொழிச்சொற்கள், ஒலிகள், எழுத்துகள் கொண்டு தமிழை அழிக்கலாமா? தமிழ்த்தூய்மையைக் கெடுக்கலாமா? நம் தெருக்கள், சாலைகள், கடைகள், நிலையங்கள், தொழில் நிலையங்கள், வணிக நிலையங்கள், அரங்கங்கள், கல்விக்கூடங்கள் எங்கு நோக்கினும் எல்லாம் ஆங்கிலம், ஆங்கில எழுத்துகள்! நம் தமிழ்ச் சொற்கள் வீற்றிருக்க வேண்டிய இவ்விடங்களிலெல்லாம் ஆங்கிலத்தை வைத்து வணங்கும் நாம் உரிமை நாட்டவர்களா? உரிமையுணர்வுடையவர்களா? மானமற்ற

அடிமைக் கோழைகளே! அயல்நாட்டவர் நம்நிலை கண்டு நாணங் கொள்கின்றனர்.

ஒரு நாடு மேம்பட வேண்டுமாயின் அது தனக்கு வேண்டும் பொருள்களுக்கு அயல்நாடுகளை நம்பியிருத்தல் கூடாது. இன்றியமையாது வேண்டப்படுவதாய்த், தன்னாட்டில் இல்லாததாய் உள்ள பொருள்களைப் பிற நாடுகளிலிருந்து வாங்கிக் கொள்வது தவறன்று. ஆனால், உள் நாட்டிலுள்ளனவும், அல்லாது உண்டாக்கிக் கொள்ளக் கூடியனவுமான பொருள்களைப் பிறநாடுகளிலிருந்து வருவித்தால் தன் நாட்டில் வளர்ச்சியேது? தாழ்வும், வறுமையுந் தாம் மிஞ்சும். அதனாற்றான் நாட்டின் பெருந்தலைவர்கள், நாட்டுப் பொருள்களை வாங்குக என்று முழங்குகிறார்கள். இம் முழக்கம் குறுகிய நோக்கமா? அல்லது அயல்நாடுகளை வெறுப்பதாகுமா? பிறநாடுகளுக்குக் கேடு சூழ்வதாகுமா? ஒருமைப்பாட்டைக் குலைப்பதாகுமா? இல்லையே! இம்முழக்கம் ஒரு நாட்டில் மட்டுமா? எல்லா நாடுகளிலும் உண்டு. இவ்வுண்மையை அடிப்படையாகக் கொண்டுதான் தமிழ்ச்சொற்களிருக்கத் தமிழில் பிற மொழிச் சொற்களைச் சேர்ப்பது தமிழ் வாழ்வுக்குந் தூய்மைக்கும் கேடாகும் என்று பேச நேர்ந்துள்ளது. அன்றிப் பிறமொழிகளின்பால் வெறுப்பினால், பகைமையினால், குறுகிய நோக்கினாலன்று என்பதைக் கூறிக்கொள்கின்றேன். மேலும் தூய்மை தமிழுக்கு மட்டுமன்று, எல்லா மொழிகளுக்குமே வேண்டுமென்பதை இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன். மற்று, மொழித்தூய்மை எற்றுக்கு என்று கேள்வி எழலாம். தூய்மையில்லாப் பொருள்கள் விரும்புவாரற்றுப், போற்றுவாரற்று யார்க்கும் பயனின்றி அழிதல்போல், தூய்மையில்லா மொழிகளும் அழிந்தொழிந்து போதலை மொழியின் வாழ்வும், வீழ்வும் அறிந்தார் நன்கறிவர். மொழித்தூய்மை போற்றாமையாலன்றோ சேரநாட்டில் தமிழ் மாறி அல்லது அழிக்கப்பட்டு மலையாளம் தோன்றுவதாயிற்று! இன்றும் தூய்மை செய்யப்பெறாத காட்டுவாழ் மக்களின் மொழிகள் நாளும் மாறிக்கொண்டிருக்கின்றன. ஆப்பிரிக்க நாடுகளில் ஒவ்வொரு தலைமுறைக்கும் மொழிகள் மாறிக்கொண்டிருக்கின்றன. இன்னும் நம் நாட்டிலும் மலைக்காடுகளில் வாழும் நாகரிகமற்ற மொழிகளும் நாளும் மாறிக் கொண்டிருக்கின்றன. அதுவும் அம்மக்களிடையேகூட ஒரு பிரிவார் பேசும் மொழி மற்றவர்க்குத் தெரியாது.

காரணம், நாகரிகமற்ற மக்களின் மொழிக்கு எழுத்தோ—நூல்களோ இல்லை. இன்ன சொல்லை இன்ன ஒலியில் இப்படித்தான் ஒலிக்க

வேண்டும் என்ற வரையறையும் இல்லை. அதனால் எழுத்துஞ் சொல்லும் ஓசையும் நாளும் மாறிக்கொண்டிருப்பதால் ஆற்று வெள்ளம் போல ஒவ்வொரு கணமும் தூய்மையில்லா மொழிகள் மாறிக்கொண்டே இருக்கும்.

தமிழ் நாட்டின் வடபகுதியில் வாழும் எழுத்தறிவில்லார் 'தின்கின்றான்' என்பதனைத் துண்றான்' என்றும், தென்பகுதியி லுள்ளவர்கள் 'திங்குறான்' என்றும் பேசுகின்றனர். இவ்வாறு பன்னூறு சொற்களைத் திரித்துப் பேசுகின்றனர். தமிழ், எழுத்துரு வம், சொல்லுருவம் பெறாத மொழி என்றிருந்தால் இப்படியே உருமாறிப் பல்வேறு மொழிகளாய் மாறியிருக்குமன்றோ? வட நாட்டிலுள்ள இந்திமொழி ஒன்றே, அதனை அடுத்துள்ள மாநிலங் களில் மொழித்தூய்மை காவாதவர்களால் பல்வேறு மொழிகளாக வழங்கலாயிற்று. நந்தமிழ் நாட்டை யடுத்த கன்னட நாட்டில் மொழித்தூய்மை காக்கப்படாமையால் அஃதொன்றே கொங்கணி, குடகு, துளு என்ற மொழிகளாக எழுத்துருவம், சொல்லுருவ மின்றி வழக்கி வருகின்றது. நற்பேறாக, இற்றைக்குப் பல்லா யிரம் ஆண்டுகளுக்கு முந்தியே, தொல்காப்பியர் காலத்திற்கு முந்தியே தமிழ்மொழிக்கு எழுத்துருவம் சொல்லுருவங்கள் வரை யறுக்கப்பட்டமையால் இன்றளவும் தமிழ்மொழி வாழ்ந்து வரு கின்றது.

ஒலி, எழுத்து சொல்லுருவங்களும், இலக்கண அமைதியு முடைய தமிழ் வழங்கிய சேரநாட்டில் ஏன் மலையாளந் தோன் றிற்று என்ற கேள்வி எழுமன்றோ? அதற்கான விடையைச் சற் றாய்வோம். பாண்டி, சோழ நாடுகளில் பன்னூற்றாண்டுகளாக வடமொழி என்ற சமசுகிருதத்தின் ஆக்கம் பெருகலாயிற்று. ஆக்கமும், ஆட்சியுரிமையும் பெறும் மொழிகளின் சொற்கள், ஒலிகள், எழுத்துகள் வாழும் மொழிகளில் சிறிது சிறிதாக நுழை யும்; இல்லை-நுழைக்கப்படும். நுழைந்த மொழிச்சொற்கள் வாழும் மொழிகளில் நிலைபெறும். அவ்விடங்களில் வாழ்ந்த மொழிச் சொற்கள் வழக்கிழக்கும். இவ்வாறே வாழும் மொழிகளில் நூற் றுக்குப் பத்து, இருபது என்று ஏறிக்கொண்டே சென்று இறுதி யில் எழுபது எண்பது சொற்கள் நுழைந்து விடும். அவ்விடங்க ளில் வாழ்ந்த மொழியின் சொற்கள் வழக்கிழக்கும்; அழிந்து போய்விடும். பின், ஒண்டவந்தபிடாரி ஊர்ப்பிடாரியை ஓட்டியது

போல்தான்; இடங்கொடுத்தால் மடத்தைப் பிடுங்கிய கதைதான். எழுபது போக எஞ்சிய முப்பதில் இருபது சொற்கள் வினைச்சொற்கள். பழைய மொழியில் பத்துச் சொற்கள்தாம் புது மொழியிலிருக்கும். அவையும்உருமாறி-ஒலிமாறி நிற்கும்.

மேற்கண்ட மொழிகளை உருவாக்கியவர்கள் அஃதாவது இலக்கிய இலக்கணங் கண்டவர்கள், தூய்மை கெடுக்கப்பட்ட தமிழ்ச் சொற்களை அப்படி அப்படியே அமைத்துக் கொண்டனர். தமிழில் "நான்" என்பது மலையாளத்தில் "ஞான்" என்றும், தெலுங்கில் "நேன்" என்றும் வழங்குதல் இதற்குச் சான்றாகும். இவைபோலப் பன்னூறு தமிழ்ச்சொற்கள் அம்மொழிகளில் திரிக்கப்பட்டுள்ளன. ஒரு மொழிக்குத் தூய்மையாவது அம் மொழி, தன் சொற்களைக் கொண்டே இயங்கும் ஆற்றலுடையதாக இருத்தல் வேண்டுமென்பதும், பிறமொழிச் சொற்களின் கலப்பால் மொழிகள் தம் தூய்மை இழப்பதோடு அழிந்தும் போகுமென்பதும் மேற்காட்டிய செய்திகளால் நன்கு விளங்குவதாகும்.

இன்றுங்கூட வடமொழிச் சொற்களை அறவே நீக்கிவிட்டால், சொற்சிதைவுகளை அகற்றிவிட்டால் மலையாளம் தமிழாய் விளங்கும் என்பதில் யாரும் ஐயுறவேண்டாம். இவ்வழியை மேற்கொண்டால் ஆந்திரமும், கன்னடமுங்கூடத் தமிழாகலாம்.

செந்தமிழ் மறவர்களே! சென்ற ஆயிரம் ஆண்டுகளாக வடமொழி, பாரசீகம், அரபு முதலிய மொழிச் சொற்களால் தமிழ் குற்றுயிருங், குறையுயிருமா யிருந்ததனைப் பேரளவுக்கு மாற்றி விட்டோம். மேலும் அப்பணியில் முயல்வோமாக! O

தமிழன்பர்களுக்கு

ஓர் அறிவிப்பு.

உங்கள் ஊரில் தமிழ்க்கழகம் உண்டா?

உண்டெனின், அதை உலகத் தமிழ்க்கழகத்தின் கிளைக் கழகமாக்குதற்கு உங்கள் மாவட்டத்தின் தமிழ்க் கழகத் தலைவருடன் இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

இல்லையெனின், கிளைக்கழகம் ஒன்றை உங்கள் ஊரில் நிறுவுவதற்குத் தக்க முயற்சிகளை மேற்கொண்டு, அதன் தொடர்பாக உங்கள் மாவட்டத் தமிழ்க் கழகத் தலைவரோடாகிலும் கழகப் பொதுச் செயலாளரோடாகிலும் உடனே தொடர்பு கொள்ளுங்கள்.

பெருஞ்சித்திரன்,
பொதுச்செயலாளர்,
உலகத் தமிழ்க் கழகம்,
மே/பா. 'தென்மொழி' கடலூர்-1.

திருவள்ளுவர் காலம்.

திருச்சி வரலாற்று மாநாட்டில் 'திருவள்ளுவர்காலம்' என்ற தலைப்பில் பேராசிரியர் திரு. கோ. நிலவழகனார், க. மு. அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.



குமரிக்கண்டம் அழிவுற்றது.

பண்டைத் தமிழர்களால் குமரிக்கண்டம் என அழைக்கப்பட்ட நிலப்பகுதி, நிலநூல் வல்லாரால் (Geologists) காண்டுவாணு (Gondwana) எனவும், உயிர்நூல்வல்லாரால் (Biologists) இலெமூரியா (Lemuria) எனவும் குறிப்பிடப்பட்டது. எரிமலைப் பிழம்புகளால் இலெமூரியா அழிக்கப்பட்டது என Scott Elliot என்பவர் தம்முடைய நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"The Continent of Lemuria perished by Volcanic action. It was raked by the burning ashes and the red-hot dust from numberless Volcanoes Earthquakes and Volcanic eruptions, it is true, heralded each of the great catastrophs which overtook Atlantis, but when the land had been shaken and rent, the sea rushed in and completed the work, and most of the inhabitants perished by drowning. The Lemurians, on the other hand, met their doom chiefly by fire or suffocation." – "The Story of Atlantis & The Lost Lemuria" (pp 38-39)

தமிழர் நாகரிகமே இந்தியர் நாகரிகம்

குமரிக்கண்டம் அழிவெய்திய பின்னர் வடக்கு நோக்கி வந்த தமிழர்கள் பண்டைத் தமிழகத்தில் நெடுங்காலம் தங்கி வாழ்ந்தனர். பின்னர் வடக்குநோக்கிச் சென்று வட இந்தியாவின் பலபகுதிகளிலும் வாழத்தலைப்பட்டனர். அப்படி வாழ்ந்த தமிழர்களில் ஒருபகுதியினரே-பிரிவினரே-சிந்துவெளி நாகரிகம்தோன்றக் காரணராய் அமைந்தனர். கிடைக்கின்ற சான்றுகளின் துணைக்கொண்டு ஆராய்ந்து பார்க்கும் பொழுது கி. மு. 4000 ஆண்டுகளுக்கு முன்னர் நாகரிகத்தில் சிறப்புடையவராய்த் தமிழகத்தில் வாழ்ந்தவர்கள் தமிழர்களேயாவர் என்பதும் கி. மு. 2500 ஆண்டுகளுக்கு முன்னர் உலகம்வியக்குமளவிற்கு நாகரிகச் சிறப்புடன் சிந்துவெளியில் தமிழர்கள் வாழ்ந்தனர் என்பதும் இன்றைய ஆந்திரமாநிலமாக விளங்கும்பகுதியிலும் கி.மு. 2300ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர் வாழ்ந்தனர் (Harappa remains unearthed in South) என்பதும் புலனுகின்றன. எனவே இந்திய நாகரிகத்திற்கு வித்திட்டவர்கள் தமிழர்களே யாவர் எனக் கூறுவது மிகையாகாது.

"Recent excavations near Chitaldrug, in Mysore reveal six levels of burried cities, rising from stone age implements and geometrically adorned pattery apparently as old as 6,000 B. C-, to remains as late as 1,200 A. D," என "The Story of Civilization" என்னும் நூலை எழுதிய உவில் துரந்து (Will Durant) என்னும் பேராசிரியர் குறிப்பிடுகிறுர். அங்கு வாழ்ந்தவர்களை இன்னுர் என அவர் குறிப்பிடவில்லையென்ருலும் அவர்கள் தமிழர்களே யாவர் என்பதை அறுதியிட்டுச் சொல்ல முடியும். ஏனென்ருல் சுமேரியா போன்ற நாடுகளுடன் கி. மு. 4,000 ஆண்டுகளுக்கு முன்னர் வாணிகத் தொடர்புகொண்ட பெருமை தமிழர்களுக்கே உண்டு என வரலாற்றின் மூலம் அறிகிறேம்.

சிந்து சமவெளியில் வாழ்ந்தவர்கள் திராவிடர்களே-தமிழர்களே-ஆவர் எனத் தம்முடைய "Glimpses of World History" (ப-14) என்னும் நூலில் மறைந்த பேரறிஞர். திரு. சவகர்லால்நேரு அவர்கள் குறிப்பிட்டார். "The Indian Aryans were influenced greatly by the still older Civilisaton of India-that of the Dravidians and perhaps the remains of the Civilisation whose ruins we see at Mohenjo-Daro.'' எனவே இந்தியர் நாகரிகம் என்பது தமிழர் நாகரிகமே அன்றி வேறன்று என்பது இதனுல் தெளிவாகிறது.

தொகை நூல்களின் காலம்

கடைக்கழக நூல்களெனக் குறிக்கப்படும் தொகைநூல்கள் கி மு. 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தனவாகவே விளங்குகின்றன. அவற்றுள் சிறப்பாகப் புறநானூறு, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு முதலிய நூல்களால் குறிக்கப்படும் வேந்தர்களும் அரசர்களும் அசோகன் காலத்தவர்களாகவே காணப்படுகின்றனர். அசோகன் அன்றைய தமிழ் வேந்தர்கள்பால் தூதுவர்களை அனுப்பினான் எனக்கல்வெட்டுக் களே குறிப்பிடுகின்றன. இந்தியா முழுவதையும் (பண்டைத் தமிழகம் நீங்கலாக) ஒரு குடைக்கீழ்க் கொண்டுவந்த அசோகன் தமிழகத்தை நெருங்கவில்லை.

"அன்றியும், பாரசீகம், கிரேக்கம் முதலிய அயல்நாடுகளைப் போலவே தமிழ்நாட்டை மதித்துத் தன் சமயத் தூதுவர்களைத் தமிழ் வேந்தரிடம் அவன் விடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. இவற்றால் அப்பேரரசன் காலத்துக்கும் முன்பே தமிழரசரின் பேராற்றல் ஆரிய-வேந்தரும் மதிக்கத்தக்க நிலையில் அமைந்திருந்தது என்பது ஐய மின்றி விளங்கும்," (ஆராய்ச்சித் தொகுதி-ப-179; மு. இராகவை யங்கார்) என்னும் விளக்கம் பண்டைத் தமிழக அரசர்களுடைய ஆற் றலை நன்கு புலப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

"மலிதிரை யூர்ந்து மண்கடல் வௌவலின்," என்னும் கலித் தொகை வரி, தமிழகத்தின் ஒரு பகுதி, கடலால் கொள்ளப்பட்டது என்பதைக் குறிப்பிடுகிறது.

"நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே," என்னும் புறநா னூற்றுவரி, பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என் பான் பஃறுளியாற்று மணலைக் காட்டிலும் மிகுந்த ஆண்டுகள் வாழ வேண்டும் எனக் குறிப்பிடுகிறது. எனவே அந்த வேந்தன் காலத்தில் பஃறுளி ஆறு உண்டு என்பது தெளிவாகிறது.

"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக்கோடுங் கொடுங்கடல் கொள்ள" எனச் சிலப்பதிகாரத்தின் வாயிலாகப் பஃறுளி யாறும் குமரிக்கோடும் அழிக்கப்பட்டன என்பதை இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். எனவே பாண்டியனை வாழ்த்திய நெட்டிமையார் காலத்திற்கும், இளங்கோவடிகள் காலத்திற்கும் இடைப்பட்ட காலத் தில் பஃறுளியாறு அழிக்கப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

கி. மு 3-ஆம் நூற்றாண்டின் இறுதியில் (கி. மு. 289-இல்) தமிழகத்திற்கு வந்த மெகசுதனிசு (Megasthenes)ஈழமும் (இலங்கை) தமிழ்நாடும் ஓர் ஆற்றினால் பிரிக்கப்பட்டிருந்தது எனக் குறிப்பிட்டுள்ளார். அஃது பஃறுளியாறாக இருந்திருக்கலாம். எனவே மெகசுதனிசு (Megasthenes) தமிழகத்திற்குவந்த காலத்தில் முன்னர்க் குறிப்பிடப் பட்ட பாண்டிய வேந்தன் பஃறுளியாற்றைப் பயன்படுத்தித் தமிழர்களுக்கு வேண்டிய வளங்களையும் நல்லாட்சியையும் வழங்கியிருத்தல் வேண்டும். நெட்டிமையார் பாடிய அந்தப் புறப்பாடலின் காலம் கி. மு 289-க்கு முற்பட்டது என்பது மேற்கூறிய விளக்கங்களால் தெளிவாகிறது. புறப்பாடல்களுள் பெரும்பாலானவை கி. மு. 3-ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே இயற்றப்பட்டிருக்கவேண்டும். 'Ancient India' (By Megasthenes and Arrian) என்னும் நூலில் காணப் படும் குறிப்பு வருமாறு:

"Taprobane is separated from India by a river flowing between; for one part of it abounds with wild beasts and elephants much larger than India breeds, and man claims the other part.". (p-61)

தொகைநூல் பாடல்களும்திருக்குறளும்

சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய பாவியங்களிலும், தொகை நூல்களாக விளங்கும் எட்டுத்தொகை பத்துப்பாட்டு முதலியவற்றிலும் குறட் கருத்துகள் எடுத்தாளப்பட்டுள்ளன. எனவேதொகைநூல் பாடல்களுக்குக் காலத்தால் முற்பட்டது திருக்குறள் என்பது வெள்ளிடைமலையாம்–அஃதாவது கி. மு. 3-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது என்பது தெளிவு. சான்றுகள் இந்தஉண்மையை வலியுறுத்துகின்றன:

"பொது நோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்," (குறள்–528), என்னும் கருத்து

"வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்த," (வரிகள் 217-218), என்னும் சிறுபாணாற்றுப்படைப் பகுதியிலும்;

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்," (குறள்–69) என்னும் கருத்து,

"ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளோ," என்னும் புறப்பாடல் (புறம்-278) வரியிலும்;

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு," (குறள்-110), என்னும் கருத்து,

"நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பா டிற்றே ஆயிழை கணவ," என்னும் புறப்பாடல் (புறம்-34) பகுதியிலும்;

"செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை," (குறள்-1151), என்னும் கருத்து,

"வருவீர் ஆகுதல் உரைமின் மன்னோ
நின்றாங்குப் பெயருங் கானஞ்
சென்றோர் மன்னென இருக்கிற் போர்க்கே," என்னும் அக நானூற்றுப் பகுதியிலும் (அகம்-387);

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்," (குறள்-549), என்னும்கருத்து,

"குடிபுறங் காத்தோம்புஞ் செங்கோலான் வியன்றானை
விடுவழி விடுவழிச் சென்றாங்கு அவர்
தொடுவழித் தொடுவழி நீங்கிற்றாற் பசப்பே" என்னும் கலித் தொகை (கலி-130), பகுதியிலும்,

"பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்," (குறள்-805), என்னும் கருத்து,

"பேதை மையாற் பெருந்தகை கெழுமி
நோதகச் செய்ததொன் றுடையேன் கொல்லோ'" என்னும் குறுந்தொகை (குறு-230) பகுதியிலும்;

"பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்," (குறள்-580), என்னும் கருத்து,

"முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சு முண்பர் நனிநா கரிகர்," என்னும் நற்றிணை (நற்றிணை-355) பகுதியிலும் மேற்கோள்களாக அமைத்துக் காட்டப்பட்டுள்ளன.

சந்திரகுப்த மோரியன் கி. மு. 350 முதல் 301 வரை வடநாட்டில் ஆட்சிபுரிந்தான். அவனுடைய காலத்தவனுகக் கருதப்படுபவன் கௌடிலியன். அவன் அருத்தசாத்திரம் என்னும் பொருள்நூலை வடமொழியில் இயற்றியவன் ஆவான். அவன் தன்னுடைய நூலில் திருக்குறள் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பல விளக்கங்களைத் தந்துள்ளான். எனவே திருக்குறள் கௌடிலியன் காலத்திற்கும் (கி. மு. 4-ஆம் நூற்றாண்டிற்கும்) முற்பட்டதாதல் வேண்டும் என்றும் கொள்ள இடமுண்டு.

"அறம் பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்," (குறள்–501), என்னும் கருத்து,

If any one or all of the Ministers refuse to acquiesce in such a measure, he or they shall be considered pure. This is what is called religious allurement," என்னும் பொருள் நூல் பகுதியில் (Arthasastra: Book I, chapter-10 p-17,-by Kautilya) அமைத்துக்காட்டப்பட்டுள்ளது, இவ்வாறு பலதிருக்குறள் கருத்துகள் பொருள்நூலிலே இடம்பெற்றுள்ளன. இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து பார்த்தால் திருக்குறள், கௌடிலியனுடைய பொருள்நூலுக்கும் காலத்தால் (கி. மு 400-க்கு) முற்பட்டது என்பது வெளிப்படுகிறது. அஃதாவது கி. மு. 5-ஆம் நூற்றாண்டிலே திருக்குறள் இயற்றப்பட்டிருக்கலாம். திருவள்ளுவர் உயிர்க்கொலையை மறுத்தது போலவே, புத்தரும் மறுத்துள்ளார். ஆகவே புத்தர் வடநாட்டில் உயிர்ப்பலி கூடாது எனக் கூறிய அதே காலத்தில் திருவள்ளுவரும் தமிழகத்தில் வேள்விகள் கூடா எனக் கூறியுள்ளமையால் இருவரும் சமகாலத்தவர்களாதல் கூடும்.

"தமிழரிடத்திருந்த பல அரிய விஷயங்களையும் மொழி பெயர்த்துத் தமிழர் அறியு முன்னரே அவற்றைத் தாமறிந்தன போலவும், வடமொழியினின்றுமே தமிழிற்கு அவை வந்தன போலவுங் காட்டினர்," என்னும் கருத்தை ('தமிழ்மொழியின் வரலாறு,'–ப–33; வி. கோ. சூரியநாராயண சாத்திரியார்) மனத்திற் கொண்டு ஆராயும் பொழுது ஆரியர் பல கருத்துகளைத் தமிழினின்றும் பெற்றனர் (திருடினர்) என்பது தெளிவாகும். அவ்வாறே கௌடிலியன் பலகுறள் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டே பொருள்நூலை எழுதி முடித்தான்.

(57-ஆம் பக்கம் பார்க்க)

உடலின் அரண்கள்.

—அ. பொன்னம்பலம்.

நாம் உயிர்க்கும் வளியானது அவ்வளவு தூய்மை உள்ளது என்று கூற இயலாது; நாம் பருகும் நீரானது மிகவும் தூய்மை நிறைந்தது என்றும் திண்ணமாகக் கூற இயலாது. நாம் உண்ணும் உணவானது, நிரம்ப உடல்நலம் காப்பது என்றும் இயம்ப இயலாது. இவ்வாறு இருந்தும், மாந்தனின் உடலானது, இயற்கையோடு ஒன்றி இயைந்த பல்வகையான பிணிதரும் நுண்ணுயிர்கள் உடலில் நுழைந்து பல்வகையான சிக்கலான பிணிகளைத் தோற்றுவிக்காது, தடுத்துக் காக்கும் அரும்பெரும் ஆற்றலைப் பெற்றுள்ளது. பிணிதரும் நுண்ணுயிர்களின் படையெடுப்பினின்று மாந்தனைக் காக்கும் பொருட்டு, உடலானது இயற்கையாகவே பல்வகையான அரண்களைப் பெற்றுள்ளது. இத்தகைய அரண்கள் எவ்வாறு உடலைக் காக்கின்றன என்பதுபற்றிச் சுருக்கமாகக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அரணாக அமையும் தோல்:-

புறச்சூழ்நிலையில் ஒன்றோடு ஒன்றாகக் கலந்துள்ள பல்வகையான நுண்ணுயிர்கள், மாந்தனின் உடலிற்குள்நுழையாதவாறு, ஒரு தடுப்புச் சுவராகத் தோலானது அமைந்துள்ளது; நோயற்ற நிலையிலுள்ள மாந்தனின் தோலான்து பிணிதரும் நுண்ணுயிர்களைத்தடுக்கும் ஒப்பற்ற ஆற்றல் பெற்றிருப்பதோடு அல்லாமல், அழிக்கும் ஆற்றலையும் பெற்றுள்ளது. கைப்பகுதியில் உள்ள தோலானது அடுக்குத் தொடர் நுண்ணுயிர்களைத் (Strepto-cocci) தடுக்கும் ஆற்றலைப் பெற்றுள்ளது. தோலில் பொதிந்துள்ள கொழுப்புக் காடிகள் (Fatty Acids), தொண்டை அடைப்பு நோயைத் தோற்றுவிக்கும் (Diphtheriabacilli) நுண்ணுயிரை அழித்துக் கெடுக்கும் ஒப்பற்ற வலிய தன்மையைப் பெற்றுள்ளது. இதுபோன்றே வியர்வையில் பொதிந்துள்ள காடியானது (Acid) பல்வகையான நுண்ணுயிர்களை அழிக்கும் ஆற்றலைப் பெற்றுள்ளது.

முள்ளை முள்ளால்…… …

"ஒரு முள்ளை மற்றொரு முள்ளைக்கொண்டு எடுக்க வேண்

டும்" என்பது பழமொழி. இத்தகைய உண்மையானது, உடலின் காப்புத் திறனிற்கு மிகவும் பொருந்தும். நம் உடலிலே பல்வகையான நச்சுத்தன்மையற்ற (Non-Toxic) நுண்ணுயிர்கள் உள்ளன; இத்தகைய நுண்ணுயிர்கள், உடலைப் பல்வகையான நச்சுத்தன்மை வாய்ந்த நோய்தரும் நுண்ணுயிர்களின் படையெடுப்பினின்று காக்கும் காவலர்களாகப் பணியாற்றுகின்றன. சான்றாக, வாய்ப்பகுதியில் உமிழ்நீருடன் கலந்துள்ள வன்மையற்ற அடுக்குத் தொடர் நுண்ணுயிரானது தோற்றுவிக்கும் ஒரு வகையான வேதிப்பொருள், வாய்வழியாக நுழையும் பல்வகையான நுண்ணுயிர்களை அழிக்கும் வன்மையைப் பெற்றுள்ளது. இதுபோலவே, மகளிரின் அல்குல்பாட்டையில் (Vaginal canal) இயற்கையாகப் பொதிந்துள்ள தோதர்லின் நுண்ணுயிர்கள் (Doderlein's Bacilli), அல்குல்பாட்டை வழியாக நுழையும் சில வகையான பிணிதரும் நுண்ணுயிர்களைத் தடுக்கும் ஆற்றலை இயற்கையாகவே பெற்றுள்ளன.

உயிர்ப்புப்பாட்டையும் (Respiratory Tract), சிறுநீர்ப்பாட்டையும், ஈரமான புறத்தோலைப் பெற்றுள்ளன; இத்தகைய ஈரப்பசையானது நுண்ணுயிர்களைத் தன்பால் ஈர்த்து அழிக்கும் ஒப்பற்ற ஆற்றல் பெற்றுள்ளது. வளைவு, நெளிவுகளை உடைய மூக்குக் குழியானது (Nasal Fossa) இயற்கையாகவே, நோய்தரும் நுண்ணுயிர்கள் உள்ளே நுழையாதவாறு தடுக்கும் வடிப்பான்களாகப் (Filters) பயன்படுகின்றது. இவைமட்டுமன்றி, மூச்சுக் குழலும், மூச்சுக் கிளைக்குழலும் உட்புறமாகக் கோழைப்படலத்தினுல் (Mucous Membrane) சூழப்பட்டுள்ளன. மேலும் இவை சுரக்கும்கோழையானது, நோய்தரும் நுண்ணுயிர்களினின்றுமூச்சுப்பாட்டையைக் காக்கும் ஆற்றல் பெற்றுள்ளது. இவைமட்டுமல்லாமல், இருமலானது தொண்டை, மூச்சுக்குழல் பகுதிகளில் தேங்கியிருக்கும் நோய்தரும் நுண்ணுயிர்களை வெளியே தள்ளும் திறனைப் பெற்றுள்ளது.

இரைப்பைச் சாற்றின் (Gastric Juice) காடித்தன்மையானது, இரைப்பையில் தேங்கும் நுண்ணுயிர்களின் இனப்பெருக்கத்தைத் தடுப்பதோடு அல்லாமல், அவற்றை அழிக்கும் திறனையும் பெற்றுள்ளது. பொதுவாக, இரைப்பைக் காடியானது (Acid) வயிற்றுப்போக்கை (Bacillary Dysentery) உண்டுபண்ணும்

நுண்ணுயிர்களை அழிக்கும்வன்மை பெற்றுள்ளது. மேலும், வயிற்றுப்போக்கு நோயின் பொழுது மாந்தன் தொல்லையுறுங்கால் சிறுகுடலின் விரிந்து சுருங்கும் தன்மை மிகுதியாவதாலும், சிறுகுடல்சாற்றின் (Intestinal Juice) சுரப்புத்திறன் பெருகுவதாலும், சிறுகுடலின்கண் தேங்கிய மற்றைய வலிமை பொருந்திய நுண்ணுயிர்களை அழிக்கப் பெரிதும் துணையாக இருக்கின்றது.

இரண்டாம் அரண்கள்:-

மேற்கூறிய அரண்கள் யாவையும் தாண்டி, நுண்ணுயிர்கள் உடலில் நுழைந்து விட்டன என்று வைத்துக்கொள்வோம். இத்தகைய இடுக்கண் நிலையில், உடலின் இரண்டாம் அரண்கள் உடலை எவ்வாறு நுண்ணுயிர்களினின்று காக்கின்றன என்பது பற்றி நோக்குவோம். நுண்ணுயிர்கள் உடலில் நுழைந்ததும், நுண்ணுயிர்கள் நுழைந்த இடத்திலுள்ள நுண்குருதிக் குழாய்கள் (Capillaries) விரிவடைகின்றன; இதன் காரணமாகக் குருதிக் குழாய்களின் ஊடுருவும் தன்மை மிகுதியாவதால், வண்ணமற்ற குருதி நீரானது குழாய்களின் வழியாக நுண்ணுயிர்கள் தங்கியிருக்கும் இடத்திற்குச் செல்லுகின்றது. இதன் மூலமாக, எதிர்ப்பொருள்கள் (Antibodies), குருதியிலுள்ள நுண்ணுயிர் விழுங்கிகள் (Phagocytes), குருதியின் மூலமாகப் போரிடத் தேவையான தற்காப்புப் பொருள்களைப் போர்க்களத்திற்குக் கொண்டுவந்து குவிக்கின்றன. குருதியிலுள்ள நார்ப்பொருளானது நீண்ட வலைபோன்ற அமைப்பை ஏற்படுத்துவதால் நுண்ணுயிர்களின் இயங்குந் திறனைக் கட்டுப்படுத்தி ஒரு வளையத்திற்குள்ளே சிறைப்படுத்துகின்றன; இதனால் நுண்ணுயிர் விழுங்கிகள் மிக எளிதாக நுண்ணுயிர்களை விழுங்க வாய்ப்பு ஏற்படுகின்றது. மேலும் நுண்ணுயிர்கள் தேங்கியுள்ள உடலின் பகுதிகளில் இடைக்கால ஏற்பாடாகக் குருதியோட்ட அளவு மிகுதியாவதால், நுண்ணுயிர்கள் வெளியிடும் நச்சுப்பொருள்களின் (Toxic Substances) வலிமையைக் குறைப்பதோடு அல்லாமல், அவற்றை உடலினின்று வெளியேற்றவும் துணை செய்கின்றன.

குருதியில் சுழன்று கொண்டிருக்கும் நுண்ணுயிர் விழுங்கிகள் (Phagocytes), அவற்றை விழுங்குவதன்மூலம், குருதியில்

சேரும் காளான்வகைகள் (Fungi), நுண்ணுயிர்கள், "வடிப்பான்புகு நுண்ணுயிர்கள்" (Viruses) என்னும் இவற்றைக்குருதியினின்று களைகின்றன. மாந்தனின் குருதியில் நுண்ணுயிர் விழுங்கிகளின் அமைப்புகளிலோ அல்லது எண்ணிக்கையிலோ குறைவு ஏற்படும்பொழுது, நோய்தரும் நுண்ணுயிர்கள் பல்வகையான நோய்களை எளிதாகத் தோற்றுவிக்கின்றன. மற்றப் பாட்டைகளைவிட, குருதியின் வழியாக நுண்ணுயிர்கள் நுழையும் பொழுது, இந்த நுண்ணுயிர் விழுங்கிகள் மிக எளிதாக நுண்ணுயிர்களை விழுங்கி அவற்றைச் செயலற்றவையாக ஆக்கிவிடுகின்றன. தமயோவ் என்ற மருத்துவத்துறை ஆய்வு வல்லுநர், குழிமுயலின் உடலில் குருதிவழியாகக் கோடிக்கணக்கான நுண்ணுயிர்களைச் செலுத்தியபொழுது, குருதியிலுள்ள "நுண்ணுயிர் விழுங்கிகள்" 20 நிமைய நேரத்தில் எல்லாவற்றையும் விழுங்கிட, குருதி தூய்மை ஆக்கப்பட்டதைக் கண்டுள்ளார். இவைமட்டுமல்லாமல், கல்லீரல் (Liver), மண்ணீரல் (Spleen), நிணநீர்க்கணுக்கள் (Lymph nodes) போன்ற உறுப்புகளும், குருதியினின்று நுண்ணுயிர்களை வெளியேற்றப் பெரிதும் துணையாக இருக்கின்றன.

உடலிலுள்ள கண்ணறைகள் பல்வகையான "வடிப்பான் புகு நுண்ணுயிர்களுடன்" இயைந்து, நீரில் கரையும் தன்மை உடைய சிலவகையானபுரதத்தைத் தோற்றுவிக்கின்றன. இத்தகைய புரதவகையானது வேறுவகையான வடிப்பான்புகு நுண்ணுயிர்களை அழிக்கும் ஆற்றல் பெற்றுள்ளது. வடிப்பான் புகு நுண்ணுயிர்களைத் தாக்கி அழிக்கும்தன்மைகள் பெற்ற இத்தகைய புரதவகைகளை ஆங்கிலத்தில் "இண்டர் பெரான்" (Interferon) என அழைக்கின்றனர். இத்தகைய புரதவகைகள் உடலிலுள்ள கண்ணறைகள் இளம்பிள்ளை வாதம் (Poliovirus) அம்மைநோய், தட்டம்மை (Measles), பொன்னுக்கு வீங்கி (Mumps) போன்ற நோய்களை உண்டுபண்ணும் வடிப்பான் புகு நுண்ணுயிர்களுடன் இயையுங்காலை தோன்றுகின்றன.

மாந்தனின் நோய் தடுப்புத் திறனானது, அவனது உடல் அமைப்பை மட்டுமல்லாமல், வழித்தோன்றல் பண்புகள் (Hereditary Factors) இனம், பால், வாழும் சூழ்நிலை—இவைபோன்ற பல்வகையான காரணங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

இயங்குயிர்களின் உடலில் நீரின் பங்கு.

(ROLE OF WATER IN ANIMAL BODY)

-மா. பழனிச்சாமி, வேளாண்மைக் கல்லூரி, கோவை.

நீர் இல்லாத உலகத்தைக் கற்பனைப்படுத்திக் காண்பதும், கூறுவதும் அரிது. அஃது இயலாததும் ஆகும். இவ்வுலகில் வாழும் ஒவ்வோர் உயிரும், ஓரணு உயிரினத்திலிருந்து, வளர்ச்சியும், புரட்சியும் நிறைந்த இம் மாந்த உயிரினம்வரை நீரை நம்பித்தான், அடிப்படையாகக் கொண்டுதான் வாழ்ந்து வருகின்றன என்று கூறினால் அது மிகையாகாது. ஒவ்வோர் உயிர்வாழும் பொருளின் உடல் கனத்தில் 50 விழுக்காடு, நீரினுடைய எடையே என்று அறிவியல் கூறுகிறது. ஒவ்வோர் அணுத்திரளையிலும் 70 முதல் 90 விழுக்காடுவரை நீர்தான் உள்ளது. அத்தகைய நீரையும், அதன் குணங்களையும் அது புரியும் பணிகளையும் விரிவாகக் கூறுவதாய் இக்கட்டுரை அமைகிறது.

நீரின் குணமும் அதன் வேலைகளும்: (Properties and Functions of Water) நீர் ஒரு முடக்கப்பொருள் (Inert matter) அன்று; மாபெரும் ஓர் இயக்க ஆற்றல். தண்ணீர் பொதுவான கரைப்பான் மட்டுமன்று; அஃது ஒரு பொருட்கூறும், மூலக்கூறும் ஆகும். எடுத்துக்காட்டாகச் சில நுண் சிரெடைகள் உள்ள தவளை முட்டைகளை எடுத்து வடித்த தூய்மையான நீரில் ஊறவைத்தால் பல சிரெடைகள் எடையுள்ள தலைப்பிரட்டைகள் (Tadpoles) வெளிவருகின்றன இந்த எடை மாற்றத்திற்கு இன்றியமையாத காரணம் என்னவெனில், அக்கரு மிகுதியான நீரை உட்கொண்டு, தன் வளரும் உடலோடு உடலாக இயைத்துக் கொண்டதேயாகும். நீர் ஓர் இயக்கு ஆற்றலாகிய காரணத்தால்தான் அது பல கண்ணறைகளிடையே நடைபெறும் வேலைகளைக் கண்காணித்து வருகிறது. மிகுதியான தன் வெப்பத்திறனால் (High Specific heat)தான், பல்வேறு உறுப்புகளின் உராய்வினால் வெளிப்படும் வெப்பத்தைத் தாங்கிக்கொள்கிறது.

தண்ணீரின் இன்றியமையாத் தன்மைக்கொரு விளக்கமும்கொடுக்கலாம். உடலில் சேமித்து வைத்துள்ள கொழுப்பு முழுவதும் அன்றி, சேமித்து வைத்துள்ள புரதச்சத்தில் (Protein) பாதியளவும் பயன்

படுத்தப்பட்டுச் செலவான பின்பும், நாம் உயிர்வாழ முடியும். ஆனால், 1/10 பகுதி தண்ணீரை இழந்துவிட்டால் உயிருக்கு ஏதம் விளையும் என்று இரப்னர் என்ற செருமானிய அறிவியலார் கூறுகிறார்.

ஐம்பொறிகளும் நீரும்: உணவுமண்டலத்தில் செரிக்கப்பட்டுத் தன்னுருவான உணவுச் சாரங்களைக் கடத்திச் செல்லுதல் முதல், கழிவுப் பொருள்களைக் கடத்திச்சென்று கழிக்கும் வரையிலும் தண்ணீர்-தான் பெரும்பங்கு கொள்கிறது. செரிமான நீர்களைச் சுரப்பதிலும் இதன் பங்கு குறிப்பிடத் தக்கதாயுள்ளது. மூட்டுநீரில் (Synovial Fluid) காணப்படும் நீர், மூட்டுகளில் ஏற்படும் உராய்வினால் எலும்பு களுக்குச் சேதம் ஏற்படாமல் காக்கிறது. நரம்புமண்டலத்திலுள்ள நீர், (Cerebro-spinal fluid) உணர்வுகளைக் கடத்திச் செல்லும் நரம்பு களுக்கு நீர்ப்பஞ்சணையாக (Water Cushion) உதவுகிறது. காதில் ஒலி அலைகளை மிதக்கவிட்டுக் கடத்திச் செல்வதற்கும், கண்ணின் ஒளி அலைகளைக் கடத்திச் செல்வதற்கும் நீரே பெருத்த உதவிபுரிகிறது.

நீரின் வகைகள்: (Kinds of Water) தண்ணீரை வகைப்படுத்து வதில் வேதியல் துறையினர் கடினநீர் (Hard Water) மென்னீர் (Soft Water) என்று கையாள்வது போக, உயிரியல் துறையினர் (Biologist) தடையற்ற நீர், தடைநீர் (Free and Bound Water) சிதைவு நீர் (Metabolic Water) என்று வகைப்படுத்துகின்றனர்.

தடையற்ற நீர் (Free Water):- நாம் அன்றாடம் உட்கொள் ளும் தண்ணீரும், உணவுப் பொருட்களில் சேர்ந்துள்ள நீரும் இதனுள் அடங்கும்.

தடைநீர் (Bound Water):- உடலில் ஒவ்வொரு கண்ணறைக் குள்ளும், கண்ணறைகளிடையேயும் குறித்த அளவு நீர் அடைபட் டுள்ளது. இந்நீர் ஊடாப் பொருள்களினால் (Colloidal Particles) உறிஞ்சப்படுகிறது. இந்நீருக்குக் கரைக்கும் திறன் (Dissolving Power). கிடையாது. இத்தகு தனிப்பட்ட குணம் படைத்த இந்நீர் தான் சவ்வூடுபரவுதல் (Osmosis) போன்ற இயக்கங்களுக்குக் காரண மாக உள்ளது செருமானிய அறிஞர் இரப்னர் தடைநீரை வரையறுக் கும் நிலையில் "-20°C ச்குக் கீழும் குளிரவைக்கும் நிலையில்ஒவ்வொரு கண்ணறையிலும் உறையாமல் தேங்கி நிற்கும்நீரே, தடைநீராகும் (Bound Water)" என்கிறார்.

தடைநீரும் அதன் பயன்களும்:- குளிர்காலத்தில் வளரும் கோதுமையின், சூழலுக்கேற்ற பொறுத்தல் தன்மை இத் தடைநீரையே சாரும். ஒரு சில பூச்சிகளின் உடலில் மிகுதியாக அடங்கியுள்ள இத் தடை நீர்தான், அப் பூச்சிகளின் நேர்த்தியான வாழ்க்கைச் சுழற்சிக்கு அடிகோலுகிறது.

சிதைவு நீர்:- (Metabolic Water) நம் உடலுக்குத் தேவையான நீரை நீராகவோ, அன்றி வேறு உணவுப் பண்டங்களின் வாயிலாகவோ நாம் உட்கொள்கிறோம். ஆனால் உணவு மண்டலத்தில், செரிமான மாற்றங்களாலும், தன்னுருவாதல் நெறிகளாலும் உணவுப் பொருட்கள் சிதைக்கப்பட்டு மிகுதியான நீர் வெளிப்படுகிறது என்ற உண்மை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. மாவுப் பொருட்களும், சர்க்கரைப் பொருள்களும் எரிக்கப்படும்போதும் (Metabolism of Carbohydrates and glucose) கரியிருதீயகையும் (Corbon-di-oxide) நீரும் கிடைக்கின்றன. குளுக்கோசு எரிக்கப்பட்டால் 60 விழுக்காடு நீரும், புரதச்சாரம் எரிக்கப்பட்டால் 42 விழுக்காடு நீரும் வெளிப்படுகையில், கொழுப்பு மட்டும் 100 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட அளவு நீரைக் கொடுக்கிறது என்ற உண்மை நமக்குப் பெரிதும் நன்மையாக உள்ளது. இங்ஙனம் வெளிப்படும் நீர் பூச்சிகளின் உறக்க நிலைக்கும் (Hyberration) பயன்படுகிறது. மேலும், வெயர்ப்பு, உயிர்ப்புபோன்ற கழிவுகளால் ஏற்படும் இழப்பையும் ஈடுசெய்ய இந்நீரே பெரிதும் துணை செய்கின்றது.

நீரின் தேவையையும், அதன் கழிவையும் கட்டுப்படுத்தும் கரணியங்கள்:- (Factors governing Water exeretion and Requirment) புதிதாகப் பிறக்கும் ஒவ்வொரு கண்ணறைக்கும் 75 விழுக்காடு நீர் தேவைப்படுகிறது. ஆனால் வளர்ச்சியடைந்த உயிரினங்கள் பால் சுரப்பதற்கும், முட்டைகளிடுவதற்கும் மிகுதியான நீரை ஈடு கொடுக்க நேரிடுகிறது. உணவு மண்டலத்திற்குத் தேவையான செரிமான நீர்களைச்சுரப்பதற்கும் சிறுநீர் போன்ற கழிவு நீர்களைச்சுரப்பிப்பதற்கும் பெருமளவு நீர் தேவைப்படுகிறது. மேலும் மூச்சுப்பை, தோல்போன்ற கழிவு உறுப்புகளின் வாயிலாகக் கழிவாகப் போக்கப்படும் நீரையும் ஈடு செய்வதற்கு மிகுதியான நீர் உட்கொள்ள வேண்டியிருக்கிறது.

உயிர்களின் உடல் கனத்தைப் பொறுத்தும், அதன் உட்கொள்ளளவைப் பொறுத்துமே இத்தேவை உணரப்படுகிறது. எனினும் ஒரு

சதுர விரற்கடைக்கு 800 "கனச் சிறுகோல் அளவு நீர் உட்கொண்டாலே போதுமானது என்று கண்டறிந்துள்ளார்கள்.

பொதுவாகவே, அன்றாட வாழ்க்கையில், நாம் உட்கொள்ளும் உணவில் புரதச் சாரமும், உப்புச் சாரமும் (Protein and Minerals) மிகுதியாக இருந்தால் சிறுநீர் மூலம் மிகுதியான கழிவு வெளியாக வேண்டியிருப்பதால் நாம் மிகுதியான தண்ணீரைப் பருக வேண்டிய தேவையும் உண்டாகிறது. குட்டிபோட்டுப் பாலூட்டும் (Mammalia) இனத்தைச் சேர்ந்த விலங்குகளில் பொதுவாக மாந்த இனத்தில், சிறுநீர்தான் சிறப்பான புரதச் சிதைவாலுண்டாகும் கழிவாகும். இச் சிறுநீரின் உயர்ந்த திண்காரம (High Concentration) கண்ணறைகளைக் கொன்று சேதம் விளைவிக்கும். எனவே, அதன் இயல்பான திண்காரத் தன்மையை மட்டுப்படுத்த இந்நீர் பெரிதும் பயன்படும். எனவே அதன் தேவையும் மிகுதியாகின்றது. ஆயின் பறவைகளின் எச்சங்கள் கெட்டியாகவும் சற்று உலர்ந்தும் இருப்பதால் பறவைகள் மிகுதியான நீரைக் கழிப்பதில்லை; எனவே அவற்றின் தேவை குறைகிறது. எனவேதான் நீர்குறைந்து, புரதச்சாரம் நிறைந்த உணவை மிகுதியாக உட்கொண்டால் விரைவில் இறப்பு ஏற்படும் என்று கண்டறிந்துள்ளார்கள்.

ஒட்டகமும், நீர்த்தேக்கமும்:– பாலைவனத்தில் உலவித்திரியும் ஒட்டகங்கள் ஆங்காங்கே காணப்படும் பசுஞ்சோலைகளில் தழைத்து நிற்கும் புற்களையே உண்கின்றன. எனவே இம்மாவுப் பொருள்களினின்றும் (Carbohydrates) சிதைவுநீர் குறைந்த அளவே வெளியாகிறது. அதன் காரணமாகச் சிறுநீரும் குறைந்த அளவில்தான் கழிக்கப்படுகிறது. இந்தக் குறைந்த அளவுச் சிறுநீரின் திண்காரத் தன்மையை மட்டுப்படுத்தக் குறைந்த அளவு நீரே போதுமானது. ஆயின் இக்குறைவான தேவையையும் அவ்வப்பொழுது நிறைவு செய்ய இயலாத நிலையில் பாலைநில வாழ்க்கை அமைந்துள்ளது. இருந்தும் ஒட்டகங்கள் வெற்றியாக வாழ்க்கை நடாத்துகின்றன என்றால் அதன் காரணம், ஒட்டகத்தின் திமிலில் சேமித்து வைக்கப்படும் கொழுப்பும், அக் கொழுப்பின் சிதைவால் வெளியாகும் 100 விழுக்காட்டிற்கும் மேலான சிதைவு நீருமே யாகும். மேலும் ஒட்டகத்தின் தோல் கனமாகவும், மயிர்கள் நிறைந்ததாகவும் உள்ளது. எனவே வெயர்வையின் அளவும், அதன்வழி வீணாகும் நீரின் அளவும் குறை

(48-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தவறான கருத்துகள்.

ஒய்வுபெற்றுள்ள வரலாற்றுப் பேராசிரியர் க. அ. நீலகண்ட சாத்திரியார் குறளின் காலம்பற்றிய தம்முடைய கருத்தை "A History of South India" என்னும் நூலில் (ப-356) பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

"If, as is often affirmed, he and some other writers of this age belonged to a Sangam, it must have been a latter institution than the one which flourished in the early centuries of the christian era: 450-50, may be suggested as the best date for the Kural"

"இவ்வாறுக வடநூற் சாத்திரக் கருத்துகளை ஆண்டுள்ளமையும் இவர்காலம் சுமார் கி. பி 600 என்பதை வலியுறுத்துகிறது," என (தமிழ்ச்சுடர் மணிகள்; ப–73) திரு. வையாபுரியவர்கள் தவறான கருத்தையே கூறியுள்ளார்

"The Kural of Tiruvalluvar, dating not later than the 10th century A. D. is said to have been the work of a poet belonging to the depressed classes. It enforces the Sarkya Philosophy in 1330 poetical aphorisms based on three subjects: Wealth pleasure and Virtue," (The Gazetteer of India)
[Vol I Country and People; p-432; 1965]

எனத் தவறான கருத்தையே இந்திய அரசிதழ் குறிப்பிடுகிறது. மேலை நாட்டவர்களோ அன்றிக்கீழை நாட்டவர்களோ தமிழர்களின் நாகரிகச் சிறப்பையும் தமிழ்மொழியின் பழமையையும் பாராட்டக்கூடாது என்பதற்காகவே இத்தகைய கருத்துகளை இந்தியாவிலுள்ள பேரறிஞர்கள் வெளியிட்டு வருகின்றனர்.

முடிவு

திருவள்ளுவர் காலத்தை, ஆராய்ச்சிக் கருத்துகளின் துணைக் கொண்டு கி. மு. 5-ஆம் நூற்றாண்டு எனக் கொள்ள வழியுண்டு என்பதை மேலே கண்டோம். ஆராய்ச்சி என்பது, பரந்த நோக்குடன் புதிய கருத்துகளைத் திறம்பட உண்மைக்கு மாறுபடாமல் எடுத்துக் கூறும் ஒருவழி (துறை) என்பதை வரலாற்றுசிரியர்களும் பிறரும் நினைவிற் கொள்ளுதல் வேண்டும். அந்த நாள் எந்த நாளோ?

அடுத்த ஆண்டு, திருவள்ளுவர் ஆண்டு 2,000 எனக் கொண்டாடப்படவேண்டிய ஆண்டாகும். குறைந்த அளவு எனக் கொண்டாலும், திருவள்ளுவர் காலம் கி மு. 1-ஆம் நூற்றுண்டு என்பதை எவரும் மறுத்தற்கில்லை. தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றில் மலையாக விளங்கிய மறைமலையடிகளும், அவர் காட்டிய வழிநின்று தமிழ்வளர்ச்சிக்காகவும், பாதுகாப்பிற்காகவும் தொண்டுபுரியும் மொழிநூல் மூதறிஞர் தேவநேயப் பாவாணர் அவர்களும், திருவள்ளுவர் காலம் பற்றிக் குறிட்பிடும் கருத்துக்களை ஏற்றுக் கொள்வது இழுக்காகாது. அவர்கள் கூறும் முடிவுகளையே தயங்காமல் தமிழ்நாடு ஏற்றுக்கொள்ள இன்று முன்வந்துள்ளது. கருத்துக்கள் வருமாறு:

"இனி, இங்ஙனம் ஆராய்ந்துணர்த்திய வரலாற்று வழியே புகுந்து நோக்கும்வழி ஆசிரியர் பிறந்தவாண்டு ஒருவாறு உறுதிப்படுத்தப்படும். கி. மு 20-ஆம் வருடத்திலே ஆசிரியர் திருக்குறள் அரங்கேற்றிய பின்னரும் பத்துவருடம் இருந்தாரெனக்கொண்டு, பண்டைக்கால மக்களெல்லாம் நெடுநாள் உயிர்த்திருப்பதோர் முறை பற்றி ஆசிரியரும் எண்பத்தைந்து வருடம் இருந்தாரெனக் கொள்வோமாயின் இவர் கி. மு. 95-ஆம் ஆண்டிலே பிறந்தாரென்று நிலைபெறுத்தப்படும். இவ்வாறு நிறுவுதல் சரித மரபுக்கு இசைந்த வழக்கேயாமென்க." (திருக்குறள் ஆராய்ச்சி: ப-99) -மறைமலையடிகள்.

"திருவள்ளுவர் (கி. மு. முதல் நூற்றுண்டு)-:திருவள்ளுவர் ஆரியப் பல்சிறு தெய்வ வழிபாட்டை நீக்கிக் கடவுள் வழிபாட்டை நிறுவியும், அருள் நிறைந்த துறவியரே அந்தணர் என்று வரையறுத்தும், குலத்திற்கேற்பத் தண்டனைகூறும் ஆரிய முறையை அகற்றி நடுநிலை நன்மை நாட்டியும், தமிழ்ப்பண்பாட்டைக் கிளர்வித்தார்." (தமிழ் வரலாறு–ப-291)–ஞா. தேவநேயப் பாவாணர். O

(56-ஆம் பக்கத்தொடர்ச்சி)

வாக உள்ளது. அனைத்திற்கும் மேலாக ஒட்டகத்தின் கழிவுப்பொருள் (மலம்) உலர்ந்தும், கட்டியாகவும் இருப்பதால் மிகுதியான அளவு நீர் வீணாக்கப்படுவதில்லை.

எனவே, உடலில் ஏற்படும் பல்வேறுபட்ட ஆக்க, அழிவு இயக்கங்களால் உண்டாகும் இழப்பை ஈடு செய்யவும், புதிய கண்ணறைகளை உருவாக்கி, உடல் வளர்ச்சியடையச் செய்யவும், நாம் போதுமான அளவு நீரை உட்கொள்ள வேண்டியிருக்கிறது. இதை வலியுறுத்த வந்த அடால்ஃப் என்ற அறிஞரும் ஒவ்வொரு மாந்தனும் தான் உட்கொள்ளும் ஒவ்வொரு கலோரி உணவிற்கும், ஒருகனச்சீரடி (1c.c) நீரை உட்கொள்ளல் தேவை என்கிருர் நோயுற்ற நிலை தவிர, பிறவேளைகளில் தேவைக்கும் மிகுதியான நீரை உட்கொள்வதால் ஏதம் ஒன்றும் இல்லை என்று கூறும் அவர், கறவை மாடுகளுக்கு (Milch Cows) ஒரு நாளைக்கு ஒருமுறை நீர் காட்டுவதைவிட, மூன்று முறை காட்டுவதால் நல்ல பலன் கிடைக்கும் என்றும் கூறுகிருர். O

தமிழ்மறவர், புலவரேறு.

திரு. பொன்னம்பலனார் அவர்களின் சொற்பொழிவுச் சுருக்கம்.

திருச்சிராப்பள்ளியில் நிகழ்ந்த தமிழ் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியிற் பங்குகொண்ட திரு. வை. பொன்னம்பலனார் அவர்கள் ஏறத்தாழ ஒருமணி நேரம்வரை ஆற்றிய விரிவுரையின் சுருக்கம் வருமாறு:

பேரன்பு மிக்க தலைவர் அவர்களே! மற்றும் இங்குக் குழுமியுள்ள தமிழ் அறிஞர்களே! அன்பர்களே! தாய்மார்களே!

இந்தத் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பு கிடைத்தமை குறித்துப் பெரிதும் மகிழ்கின்றேன். இத்தகைய வாய்ப்பை நல்கிய மாநாட்டுச் செயலாளர்க்கும், மற்றும் வரவேற்புக் குழுவினர்க்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்குப் பட்டாடை போர்த்திச் சிறப்பித்தீர்கள். இந்த ஆடை எனக்குப் போர்த்தப்பட்டதாக நான் கருதவில்லை, ஆரியர்கள் இந்த நாட்டில் அடியெடுத்து வைத்தபோது அவர்களை வன்மையாக எதிர்த்த இராவணனுக்குப் போர்த்தப்பட்டதாகவே கருதுகிறேன். ஏனெனில் அந்தக் காலத்திலிருந்து இந்த நாள்வரை நாம் ஆரியரை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறோம். நிற்க, இன்று நாம் மொழிச்சார்பான ஒரு மாநாட்டைக் கூட்டி, அதனிற் பலரும் பங்கு கொண்டு, மொழி வளர்ச்சி குறித்து அவரவர் உள்ளத்தில் எழும் கருத்துகளை எடுத்துக்கூறி, அவற்றை எங்ஙனம் செயற்படுத்துவது என்பதுபற்றி ஆராய முற்பட்டுள்ளோம்.

இந்த நிலையை உருவாக்கித் தந்தவர் யார்? இத்தகைய உணர்ச்சிக்கு வித்திட்டவர் யார்? கடந்த பன்னூற்றாண்டுகளாகத் தமிழரின் உள்ளத்திலே வேரூன்றிக் கிடந்த சாதி, சமய உணர்ச்சிகளைக் களைந்தெறிந்து, இதுபோன்ற மாநாடுகளைக் கூட்டவேண்டும் என்ற மனநிலை உண்டாவதற்கு ஏற்றதோர் அடிப்படை அமைத்துத் தந்தவர் யார்?

தமிழர் தலைவர், தன்மான இயக்கத் தந்தை, தமிழ்நாட்டுச் சாக்ரடீசு, கருத்துலகக் காவலர், பகுத்தறிவுத் தொண்டர் திரு. ஈ. வே. ரா.

பெரியார் அவர்களே யாவர். இப்படிப்பட்ட மகிழ்ச்சிக்குரிய திரு நாளிலே, அவர்கள் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாகச் செய்து வந்துள்ள அரும்பெரும் பணிகளையும், இந்த முதுமைப் பருவத்தும் உடல் தளர்ந்தும் உள்ளம் தளராது தமிழர் முன்னேற்றம் கருதி உழைத்து வரும் அவர்களின் அயராத முயற்சியினையும் நினைவுகூர்ந்து, அவர்களுக்கு நம் நெஞ்சார்ந்த நன்றியுணர்வைத் தெரிவித்துக்கொள்வதும், அவர்கள் இன்னும் பல்லாண்டுக்காலம் நலம்பெற்று வாழ்தல் வேண்டும் என வாழ்த்துவதும் நம் கடமைகள் அல்லவோ?

அவர்களின் சீரிய தொண்டுமட்டும் தமிழகத்திற்குக் கிடைத்திராவிட்டால், இன்று நாம் எந்த நிலையில் இருந்திருப்போம்? நம் தலையில் எல்லாம், ஆரிய அடிமைக்கு அறிகுறியான உச்சிக்குடுமிகளும், தேங்காய்க் குடுமிகளும் இருந்திருக்கும். நம் கைகளில் சமயச்சார்பான வறட்டுக்கொள்கைகள் மலிந்த நூல்களே இருந்திருக்கும். நாமும் தமிழ், தமிழர் என்ற மொழி, இன உணர்வின்றிச் சமயப் பூசல்களிலும், சாதிப் பூசல்களிலும் ஈடுபட்டு நம் காலத்தைப் பாழாக்கியிருந்திருப்போம். இவ்வாறே, மொழித்துறையில் தமிழ்ப்பற்று—அதிலும் தனித்தமிழ்ப்பற்று நம்மவரின் உள்ளத்திலே தோன்றி வளரக் காரணமாய் இருந்தவர், தமிழ்க்கடல்—தவத்திரு. மறைமலையடிகளார் ஆவர். அவர்களையும் நாம் இப்பொழுது நினைவுகூர்ந்து, நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

'புலவர் கடமையை'ப் பற்றிப் பேசவந்த நான் இதனை ஏன் குறிப்பிடுகிறேன் என்பதற்குக் காரணம் உண்டு. புலவர்கள் எல்லாரும் பழமைச் சேற்றில் படிந்து, 'புராணங்'களையும், 'இதிகாசங்'களையுமே சிறந்த இலக்கியங்களாகக் கொண்டு, அவற்றைப் பற்றி ஆராய்ந்தும், பேசியும், எழுதியும் வந்த காலத்தில், பார்வதியையும் பரமசிவனையும், முருகனையும் கணபதியையும், கயிலாயத்தையும் வைகுந்தத்தையும் பற்றியுமே எண்ணிக்கொண்டிருந்த காலத்தில்—ஆரியர்களின் பொய்ம்மைகளையும் புரட்டுகளையும் அஞ்சாது வெளிப்படுத்தி, அப் புலவர்களின் எண்ணங்களை—நோக்கங்களைப் புதிய பாதையிற் செல்லுமாறு திசை திருப்பிவிட்டவர் தமிழகத்தின் விடிவெள்ளி, தந்தை பெரியாரே ஆவார் என்பதே அக்காரணம். எங்களைப்போன்ற புலவர் சிலர் ஆரியத்தைத் துணிந்து எதிர்க்க வழிகாட்டியவர் அவரே என்பதையும் இங்குக் கூற விரும்புகிறேன்.

இனி, தற்காலத் தமிழ்ப்புலவர்கள்—வித்துவான், பண்டிதர், புலவர், சிரோன்மணி, இன்னும் இவைபோன்ற பட்டங்களைத் தாங்கியவர்கள்' மாணவர்களுக்குத் தமிழறிவு புகட்டுதலே தங்கள் கடமை; அத்துடன் தங்கள் கடமை முடிந்துவிட்டது என்று நினைக்கிறார்கள். இது தவறு. தமிழறிவு வளர்ச்சிமட்டுமே புலவர்களின் கடமையாகிவிடாது; அதுமாத்திரமே முழுமையான தமிழ்ப்பணியும் ஆகாது. தமிழில் உள்ள சில இலக்கியப் பகுதிகளைக் கற்பித்து, அவற்றை மனப்பாடம் செய்து ஒப்பித்தலும், வினாக்களுக்கு விடையெழுதுதலும் ஆகியபயிற்சிகளை மாணவர்களுக்குத் தருவதாலும் உரைநடைப் பாடங்களைச் சொல்லித்தந்து அவற்றின் சுருக்கத்தை எழுதிக்காட்டுமாறு செய்வதாலும் மட்டுமே அவர்களை உண்மையான தமிழர்கள் ஆக்கிவிடுதல் ஒருபோதும் இயலாது.

வேறு என்னதான் செய்தல் வேண்டும்? மாணவ, மாணவியரின் உள்ளத்தில் தமிழுணர்ச்சி என்னும் வித்தை ஊன்றி, அதற்கு உரமிட்டு நீர்பாய்ச்சி வளர்த்தல் வேண்டும். இதுவே தமிழ்ப் புலவர்களின்—தமிழாசிரியர்களின்—தலையாய கடமை.

இளமைப்பருவம் முதலே—தமிழ் மாணவர்க்குத் தாங்கள் தமிழர் என்னும் சிறந்ததொரு பழங்குடியினர் என்பதும், தங்கள்மொழியாகிய தமிழ் பல்வளமும் பலநலனும் செறிந்தது என்பதும் அத் தமிழில் ஆரியச் சொற்களும், கருத்துகளும் இந்நாட்டிற் புகுந்த பார்ப்பனர்களில் இடைக்காலத்திற் புகுத்தப்பட்டன என்பதும், அவர்தம் சூழ்ச்சியால் சாதி, மத அமைப்புகள் வகுத்து வலியுறுத்தப் பெற்றன என்றும், அத்தகையோரின் பொல்லாச் சூழ்ச்சிகளைத் தகர்த்தெறிந்து தமிழினத்தை உயர்த்துவது தங்கள் கடமையென்றும் உள்ளத்தில் நன்கு பதியுமாறு எடுத்துரைத்தல் வேண்டும். கம்பராமாயணம், பெரியபுராணம் போன்ற இலக்கியங்களில் உள்ள பொருந்தாக் கூற்றுகளையும், ஆரியப் பழக்கங்களை அடியொற்றிய கருத்துகளையும் சமயம் வரும்போதெல்லாம் மறுத்துரைத்தல் வேண்டும்.

பிறப்பு, திருமணம், இறப்பு போன்ற சடங்குகளில் பார்ப்பனர்கள் தலைமை தாங்குவதையும், வடமொழி மந்திரங்கள் சொல்லப்படுவதையும் தவிர்க்கத் தமிழ்ப்புலவர்கள் பாடுபடுதல் வேண்டும். அத்தகைய நிகழ்ச்சிகளில் தமிழ் இடம்பெறுமாறு செய்தல் வேண்டும். ஆரியத் தலைமையை ஒழிப்பதற்கு இஃது ஒரு வழியாகும்.

வெறுமனே, தமிழ்-தமிழுணர்ச்சி என்று சொல்லிக்கொண்டிருப்பதால் தமிழ் வளர்ந்து விடாது; தமிழ்ப்பற்றும் வளர்ந்துவிடாது. நம் அன்றாட வாழ்வின் ஒவ்வொரு செயலிலும் நம் தமிழ் ஆர்வம் புலப்படு

மாறு நடந்துகொள்ளுதல் வேண்டும்.

கடந்த நாற்பது ஆண்டுகளாகத் திருச்சி, சேலம் மாவட்டங்களைச் சேர்ந்த உயர்நிலைப் பள்ளிகளில் நான் தமிழாசிரியனாகப் பணியாற்றி வந்துள்ளேன். இந்தக் காலம் முழுவதும், வாய்ப்புக் கிடைக்கும் பொழுதெல்லாம், ஆரியரையும், அவர்களின் பழக்கவழக்கங்களையும், தமிழைக் கெடுப்பதற்காக அவர்கள் செய்த சூழ்ச்சிகளையும் முழுமூச்சோடு எதிர்த்து வந்திருக்கிறேன்.

இதன்பொருட்டு, ஆரியப் பார்ப்பனர்கள் எனக்குக் கொடுத்த தொல்லைகளும் இடையூறுகளும் எல்லையில் அடங்கா. ஆறுமாத அளவுகூட ஒரு பள்ளியில் நிலைத்திருக்க முடியாதபடி அடிக்கடி இடம் மாற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். பிறர் தூண்டுதலின் வாயிலாக, மறைமுகமாகப் பல இன்னல்களையும் இழிவுகளையும் உண்டாக்கினர்.

ஆனால் எதற்கும் அஞ்சாது, எல்லா இடர்ப்பாடுகளையும் எதிர்த்து வென்று, இந்த நாற்பது ஆண்டுகளாகத் தமிழ் இனத்துக்கு நான் செய்யவேண்டிய உண்மையான தொண்டைச் செய்து வந்துள்ளேன்; இனியும் செய்வேன்.

தந்தை, பெரியாரைப் பின்பற்றி என்னைப்போல இன்னும் பத்துப் பொன்னம்பலங்கள் தன்மானம், பகுத்தறிவு ஆகிய உணர்ச்சிகளைத் தமிழரிடையே பரப்ப முன் வந்திருப்பார்களானால் இத்தமிழ்நாடு இன்னும் எவ்வளவோ முன்னேறி யிருக்கும்! பார்ப்பனரின் சல்லிவேர் ஆணிவேரெல்லாம் அறுக்கப்பட்டிருக்கும்!

இந்த அமையத்தில் என் மனத்துக்குப் பெருமகிழ்ச்சி தருகின்ற செய்தியொன்றைக் குறிப்பிட விருப்புகிறேன். அஃதாவது, இம்மநாட்டிற் கலந்துகொண்டு, முதல்நாள் நிகழ்ச்சிகளின் போது, தமிழ்வளர்ச்சிக்குள்ள தடைகளைப்பற்றிப்பேசிய, "தென்மொழி" யாசிரியர் பாவலர். திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள், சேலத்தில் என்னிடம் பயின்ற மாணவர்களில் ஒருவராவார் என்பதே. அவர்தம் ஆழ்ந்த தமிழ்ப்பற்றையும், அயராத தமிழ்த் தொண்டையும் நோக்கும்போது, நான அவருள்ளத்தில் ஊன்றிய தமிழுணர்ச்சி என்னும் வித்து வீணாகப்போய்விடவில்லை; நன்முறையில் வளர்ந்து பயன் விளைத்து வருகின்றது என்பது குறித்து நான் பெரிதும் மனநிறைவு கொள்கிறேன். ஆனால் உண்மையான தொண்டு செய்பவர்கள் எல்லாரையும் போலவே இதோ, இவரும் சோற்றுக்குத்திண்டாடுகிறார். இறுதியாக,இப்பொழுது கூடியுள்ள இம்மாநாட்டின் பயனாகத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும், மாவட்டக் கழகங்களும் கிளைக்கழகங்களும் அமைக்கப்பட்டு, அவற்றில் பங்குகொள்ளும் தமிழ்ப் புலவர்களின செம்மையான, சீரிய பணியால் தமிழர் பகுத்தறிவிலும், நாகரிக வாழ்விலும் சிறந்து விளங்குவாராயின் அதுவே என் மனத்துக்கு முழுமகிழ்ச்சி தருவதாகும் எனக் கூறுவதுடன், இவ்வுரையை முடிக்கின்றேன். O

உலகத் தமிழ்க் கழகம்,

நோக்கங்களும், அமைப்பு முறைகளும்.

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௯ கன்னித் திங்கள் ௧௯, ௨௰-ஆம் பக்கல் (5, 6-10-68) காரி (சனி), ஞாயிறு கிழமைகளில் திருச்சிராப்பள்ளி தேவர் மன்றத்தில் மொழிப்பேரறிஞர், திரவிட மொழியியல் ஆராய்ச்சியாளர் திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற தமிழ்வரலாற்று தமிழ்க்கழக அமைப்பு மாநாடுகளின் போது, உலகம் முழுதும் தழுவியதும், கட்சிச் சார்பற்றதும், இனிமேல் தமிழைக் காக்கும் முழுப்பொறுப்புந் தாங்குவதுமான உலகத் தமிழ்க் கழகம் அமைக்கப்பட்டது.

அக்கழகத்தின் நோக்கங்களும் அமைப்பு முறைகளும் பின் வருமாறு.

நோக்கங்கள்.

௧ குல, மத, கட்சிச் சார்பின்றியும், தன்னல வணிக விளம்பர நோக்கின்றியும், குமரிநாட்டு மரபைத் தழுவியும், மறைமலையடிகள் காட்டிய வழியைக் கடைப்பிடித்தும் எல்லாத் துறையிலும் தமிழைத் தூய்மையாக வளர்த்தல்.

௨ தமிழ் வரலாறு, தமிழர் வரலாறு, தமிழ்நாட்டு வரலாறு ஆகிய மூவரலாறுகளையும் உண்மையானபடி வரைந்து வெளியிடல்.

௩ தமிழ்நாட்டிலும் (மலையாளம், கன்னடம், துளுவம், குடகம் முதலிய) திரவிட நாடுகளிலும் வழங்குவனவும் இதுவரை அச்சிற்கு வராதனவுமான உலகவழக்குத் தென்சொற்களையும், வெட்டெழுத்திலும் (Inscriptions) ஈட்டிலும் உள்ள அருந்தமிழ்ச் சொற்களையும் தொகுத்தல்.

௪ இலக்கணம், இசை, நாடகம், கணியம், மருத்துவம் முதலிய தமிழ் நூல்களையும், கலைகளையும் பண்டை முறைப்படுத்துதல்.

௫ மேலை யறிவியல்கள் எல்லாவற்றையும் தூய தமிழில் மொழிபெயர்த்தல்.

௬ தனித்தமிழ் நூலாசிரியரையும் இதழாசிரியரையும் பரிசளிப்பாலும் பொருளுதவியாலும் ஊக்குதல்.

௭ தமிழ் வடமொழிக்கிளையும் கலவை மொழியுமாகும் என்னும் கருத்துப்படப் பிராமணத் தமிழ்ப் பண்டிதரால் தொகுக்கப்பட்டதும், எண்வகை வழுக்கள் மலிந்ததும், பல்வேறுவகையில் தமிழைக் கெடுப்பதுமான சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகரமுதலியைத் திருத்துதலும், தமிழ்வளர்ச்சிக் கின்றியமையாத செந்தமிழ்ச் சொற் பிறப்பியலகர முதலியைத் தொகுத்தலும்.

௮ தமிழையும், பதினெண் திரவிட மொழிகளையும் கற்பிக்கும் தென்மொழிப் பல்கலைக்கழகம் நிறுவுதல்.

௯ தமிழ்நாட்டு ஆட்பெயர், இடப்பெயர், கட்டிடப்பெயர் ஆகியவற்றை இயன்ற அளவு தூய தமிழ்ச் சொற்களாகவே அமைத்தல்.

௧0 இயன்ற வழிகளிலெல்லாம் தமிழை உலக முழுதும் பரப்புதலும், வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழ்ப் பேராசிரியர் பதவி ஏற்படுத்தத் தூண்டுதலும்.

௧௧ தமிழுக்குக் கேடுவிளைக்கும் எல்லா நிலைமைகளையும் அறவே நீக்குதல்.

௧௨ "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னுங் கொள்கையை உலகமுழுதும் பரப்புதல்.

அமைப்பு முறைகள்:

முலவர்:

தவத்திரு. மறைமலையடிகள்.

தலைவர்:

மொழிப்பேரறிஞர். திரு. ஞா. தேவநேயப்பாவாணர்,
அவர்கள்,
ஆ-1135, 2-ஆம் மேற்குக் குறுக்குச்சாலை,
காட்டுப்பாடி விரிவு, வடார்க்காடு மாவட்டம்.

துணைத்தலைவர்:

பண்டாரகர். திரு. மெ. அழகனார் (சுந்தரம்)
அவர்கள்,
11, ஓதுவார் சந்து, கீழைச்சித்திரைவீதி, மதுரை-1.

பொதுச்செயலர்:

பாவலர். திரு. பெருஞ்சித்திரனார்,
ஆசிரியர், "தென்மொழி", கடலூர்-1.

ஓலைகளை இனிமேல் ஒன்றாகக் காணாமல் தனித்தனியே முறையே எல்லா ஓலைகளையும்–அதன் ஆசிரிய உரையினையுமே எம் கண்களும் கருத்துகளும் நோக்கி நிற்கின்றன.

தங்கள் உள்ளத்தெழும் ஒவ்வோர் எழுத்தாலும் விளையும் பயன் ஒன்றன்று! ஒருகோடி! தமிழர்களின் இப்போதுள்ள பெருஞ்செல்வம் பாவாணர் அவர்களும் தாங்களுந்தாம்! இனிவரும் ஒவ்வொரு தமிழ் உலகிற்கும் அதன் வளமான நல்வாழ்விற்கும் அடிப்படையான வித்து தென்மொழி ஒன்றே! ஆகலின் எவ்வளவு காலந் தாழ்ந்து போயினும் ஒவ்வோர் ஓலையாகவே வெளியிட வேண்டுகிறேன்! தென்மொழியின் நலனில் அக்கறை கொண்டு, அதற்கு அரணாக நிற்க எத்தனையோ தமிழ்நெஞ்சங்கள் காத்துக்கிடக்கின்றன. அவற்றைப் பொறுத்திருந்துதான் காணல் வேண்டும்!

(௩. துலாம். ௬௬) –பாவளவன், குறள்மனை, கீரனூர்.

பேரன்பும் பெரும்பண்பும் வாய்ந்த அண்ணா பெருஞ்சித்திரனார் அவர்கட்கு வணக்கம். நலம் நாடுகின்றோம். திருச்சியில் தங்களையும் தங்கள் துணைவியையும் கண்டு உரையாடியதால் பெரிதும் மகிழ்ந்தோம்; தமிழ்ப்புத்துணர்வும் அடைந்தோம். தென்மொழிக் குடும்பத்திற்கு ஏற்பட்ட இன்னல்களை உணர்ந்து நெஞ்சம் கலங்கின்றோம். என்னைவிட நண்பர் ச. இளங்கோவன் மிகுதியான அளவு உளம் உருகிக் கவல்கின்றார். தங்களின் தமிழ்ப்பணிக்கு நாங்கள் என்றென்றும் உடனிற்போம். தங்களின் பணியில் தொடர்ந்து செல்லுங்கள்.

(16—10—68) –நா. செங்குட்டுவன், புன்செய்ப்புளியம்பட்டி.

வண்டமிழ் வயவ, எங்கள் கல்லூரித் தமிழ்ச்சிட்டு மாணவர் சுற்றத்தின் சார்பில் வணக்கத்தையும், எங்கள் அன்புத்தமிழுள்ளங்களையும் அணியப்படுத்துகின்றேன். மடங்கல் இதழில் வெளியான ‘மொழியாக்கம்’ கட்டுரை, தமிழ்மொழியைப் பயிற்று மொழியாக்க முடியாது என்று கூறிவரும் ஆரவார வெற்றுவேட்டுகளுக்கு ஒரு சூட்டுக்கோல் என்பதில் ஐயமில்லை. அத்தகு கட்டுரைகளை மாணவர்களாகிய நாங்கள் மிகவும் வரவேற்கின்றோம். புகைவண்டியிற் செல்லுங்கால், ஓரன்பர் தென்மொழியை வாங்கிப் படித்துவிட்டு, “தம்பி, இப்படிப்பட்ட ஒரு தனித்தமிழிதழ் இருப்பதை நான் கேள்விப்பட்டதேயில்லை. தமிழ்நாட்டு மக்கள் வெளித்தோற்றத்திற்கும் வீண் கவர்ச்சிக்கும்தாம் மதிப்பளிக்கின்றார்களேயன்றி உண்மை உள்ளங்கொண்டோர்க்கு இடையூற்றையே செய்கின்றனர். தமிழ்நாட்டைப் பழமைச் சாய்க்கடைச் சேற்றினின்றும் வெளிக்கொணர ஆசிரியருற்ற, உற்று வருகின்ற துயரங்களை அறிந்து வெம்பி, வருத்தப்படுகின்றேன். நம நாட்டின் புன்மை நிலையை ஆசிரியரின் அட்டைப்படப் பாடல் படம் பிடித்துக்காட்டுகின்றது. இதுவரை நான் இவ்விதழை வாங்காவிடினும் இனி உறுதியாக இவ்விதழை வாங்குவதோடு உறுப்பினா ஆவேன். முகவரி தாருங்கள்” என்றார். உறுதியாக அவர் உறுப்பினராவரென்பதில் ஐயமில்லை. எனவே, இவர் போன்ற தமிழுள்ளங்கள் எத்தனையோ ஆயிரக்கணக்கில் மறைந்து நின்று தோன்றாத் துணைகளாக உள! காலச் சுழலில் அத் தூய தமிழுள்ளங்கள் ஒன்றுபட்டு உறுதியுடன் பொங்குமாங் கடலாய்க் குமுறி எழும். அக்கால் பொய்மை சான்ற புன்மைத் தேரைகள் சுட்டெரிக்கப்படும். வெற்றாரவாரக்காரர்கள் வெட்கி மறைவர். அந்நாள் அண்மையிலேயே அணுகுவதாகுக. தொடங்கிய உணர்வு துவளாவண்ணம் துணிந்து செல்வோம். வெற்றிபெறப்போவது தமிழே! நன்றி!

துலாம் ௩௬. –சி. தமிழ்வென்றி, ம. தி. தா. இந்துக்கல்லூரி, நெல்லை.

மொழிப் பேரறிஞர்

ஞா. தேவநேயப்பாவாணர் அவர்களின்

அண்மை வெளியீடுகள்! அரிய ஆராய்ச்சி நூற்கள்!!

THE PRIMARY CLASSICAL LANGUAGE OF THE WORLD (ஆங்கிலம்)	உருபா 25-00
தமிழ் வரலாறு	உருபா 6.25
வடமொழி வரலாறு	உருபா 7.50
பண்டைத்தமிழ்நாகரிகமும் பண்பாடும்	உருபா 6.25
இசைத்தமிழ்க் கலம்பகம்	உருபா 8.00
இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்	உருபா 1.00

O தென்மொழியன்பர் ஒவ்வொருவர் கைகளிலும் மிளிரவேண்டிய அரிய நூற்கள்!

உடனே வாங்கிப் படியுங்கள்.

அஞ்சல் கட்டணம் தனி.

கிடைக்குமிடங்கள்:

திரு. தே. மணி,
ஆ. 1135, இரண்டாம் மேற்குக் குறுக்குச்சாலை,
காட்டுப்பாடி விரிவு. (வ.ஆ.)

செயலாளர்,
மறைமலையடிகள் மன்றம்,
புன்செய்ப் புளியம்பட்டி, ஈரோடு வழி.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

நமக்கு வந்த மடல்கள்

(பகை எனக்கு விழிப்பூட்டுகின்றது: வசைகள் என்னை உறுதி யாக்குகின்றன: பொய்ச் செய்திகள் பாதையில் உள்ள பள்ளம் படு குழிகளை எனக்கு எச்சரிக்கின்றன: நேர்மை எனக்கு வழிகாட்டுகின்றது: உண்மை எனக்குத் துணை வருகின்றது. கடமை என்னை வழி நடத்துகின்றது; நட்பு என் அயர்வைப் போக்குகின்றது: தமிழ்எனக்கு ஒளி தருகின்றது; தாயகம் என்னை எதிர்நோக்குகின்றது: இறை யுணர்வு எனக்கு நம்பிக்கை யூட்டுகின்றது; என் வாழ்க்கைக்குப் பின் உள்ள எச்சமே நான் யார் என்பதை உலகுக்கு உணர்த்தும்! வெறும் வாய்கள் மனத்தை எடைபோடா! —பெருஞ்சித்திரன்.)

O இத்திங்கள் வெளிவந்த தென்மொழி நந் தலைவர் அவர்களை முகப்பில் ஏற்று உலா வருவதைக் காணுந்தோறும் என்னுள்ளம் எத்துணை உவகையுறுகின்றது என்பதனை எடுத்துரைக்கவியலாது. இந்தத் தென்மொழி புதியதொரு மாற்றத்தைத் தமிழகத்திற்கு ஊட்டியுள்ளது! இந்நாள்வரை தங்களைத் தவறாகப் புரிந்துகொண்டிருந்தவர்கள் இனியேனும் உண்மை உணரவே செய்வர். அவர்கள் உண்மையை உணரத் தங்கள் ஆசிரியவுரை பெரிதும் பயன்படும்.

இதுபோல நடுநிலையாக எழுதும் திறம் தங்களுக்கே உரித்தானது என்பதை இதுவரை எத்தனையோ ஆசிரிய உரைகளின் மூலம் நிலைநாட்டியுள்ளீர்கள்! ஆனாலும் இஃதொன்றே தாங்கள் இத்தகுதிக்குரியவர் என்று பட்டயம் தீட்டித்தருகின்றது.

—சி. அறிவுறுவோன், சென்னை—1. (நளி-அ)

O தூற்றுவோரின் தூற்றலைக்கண்டு துவளாமலும், போற்றுவோரின் போற்றலைக்கண்டு பொங்கிப் பெருமகிழ்ச்சி கொள்ளாமலும் தங்கள் தொண்டினைத் தனித்திறமையுடன் செவ்வனே செய்தற்பொருட்டு யான் கழிபேருவகை எய்துகின்றேன்.

—சி. இராசு சென்னை—14. (14—11—68)

O 'கன்னி'த் திங்கள் தென்மொழி கைவரப்பெற்றேன். அட்டையைப் புரட்டினேன். அதிர்ந்தேன்—வியப்பால், வெகுளியால், துயரால், விளக்க இயலாத இன்னபிற உணர்ச்சிக் கொந்தளிப்பால்! "தமிழர்க்குப் பகைவர் தமிழர்களே தாம்" என்று பலவிடங்களில் தாங்கள் வரைந்திருப்பதன் பொருளைப் பெங்களூரார் அங்கை நெல்லிக்கனியெனக் காட்டிவிட்டார். தமிழருடைய தன்னுரிமைப் போராட்டத்தில் மறைமலையடிகளுக்குப்பின், பாவேந்தருக்குப்பின் தமிழர்களை வழி நடத்தத் தமிழ்த்தாய் உவந்தீந்த தவப்புதல்வர்களுள் பாவாணருடன் தாங்களும் ஒருவர். தமிழர் தமிழுணர்வுகெட்டு மதிகெட்டு, மானமிழந்து நடைப்பிணங்களாகத் தங்கள் தாய் சிறுகச் சிறுகப் பல்லாற்றானும் அழிக்கப்பெறுவதைக் கண்டும் அதற்குத் துணைபோகும் நிலையிலோ, அல்லது கண்டும் காணாததுபோலவோ அல்லது கைகொட்டி நகைக்கும் நிலையிலோ உள்ள நிலையை மாற்றித் தமிழ் மாக்களை மக்களாக்குவது தங்களுடைய தூவலின் வலிமைதான் என்றால் அது மிகையாகாது. இந்நிலையில் தன்மானமற்ற இத் தமிழர்களுடைய மேம்பாட்டிற்காகத் தனது இன்பத்தைத் துறந்து, ஒருவர்க்கும் வளைந்து

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம்)